Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 30.00

දිනමුරසු වාරමලර්

மே 07 - 13, 2015

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1117

## புதிய பாதையில் இலங்கையின் பயணம்





## நேபாளத்தின் பேரவலம்





## இது ஒரு காதலின் கதை

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## மக்கள் காளிக்குப் பயந்தது ஏன்?

சாட்சாத் நமது பஞ்ச பாண்டவர்கள்தான். துரியோதனனிடம் சூதாடி நாட்டை இழந்தனர். அதுமட்டுமின்றி, அவர்கள் காட்டுக்கு சென்று 12 ஆண்டுகள் யார் கண்ணிலும் படாமல் வாழவேண்டிய நிலையும் ஏற்பட்டது. தவமுனிவர்களைத் தவிர மற்றவர் கண்ணில் பட்டால், அவர்களின் வனவாசம் மேலும் நீட்டிக்கப்படும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டிருந்தது. அர்ஜுனன் தனது வலிமைமிக்க ஆயுதங்களை ஒரு வன்னி மரத்தின் புதரில் ஒளித்துவைத்தான். காலம் வரும்போது அவற்றை எடுத்துக் கொள்ளலாம் என இருந்தனர். அந்த வன்னிமரம் தான் அவர்கள் வெற்றிபெறுவதற்கு காரணமாக இருந்த ஆயுதங்களைப் பாதுகாக்கும் பெட்டகமாக இருந்தது.

அவர்கள் முனிவர்களின் ஆலோசனையின் பேரில், துர்க்கை அல்லது காளியின் இருப்பிடமான குகைகளில் மறைந்து வாழ்ந்தார்கள். அந்த கோயில்களுக்குள் பயந்துபோய் யாரும் நுழைவதில்லை. பாண்டவர்களுக்கு இனி வசதியாயிற்று. அஞ்சாநெஞ்சம் கொண்ட அவர்களைப் பாராட்டி பராசக்தியின் வடிவமான அந்த காளிதேவியே காட்சிகொடுத்தாள். காளியின் காட்சியை மனக்கண்ணால் கண்டால்கூட போதும். அவர்களைத் துன்பம் தொடராது. ஏழ்மை என்பதே இருக்காது. துக்கம், பயம் இதெல்லாம் நெருங்காது. மகரிஷியால் உபதேசிக்கப்பட்ட 27 ஸ்லோகம் கொண்ட துர்க்கா நட்சத்திரமாலிகா ஸ்துதியை பக்தியுடன் ஒன்பது இரவுகள் சொன்னார்கள். அந்த இரவுகளே நவராத்திரி ஆயிற்று. அவர்களை அவள் ஆசீர்வதித்தாள். ஆனால் குற்றம் செய்தவர்களைத்தான் காளி தண்டிப்பாள்.

ஆன்மீகம்

## மீண்டும் இறைவனின் மாட்சி

எசேக்கியேல் இறைவாக்கு நூலின் நிறைவான பகுதியாக இன்றைய வாசகத்தைக் கருதலாம். இஸ்ரயேல் மக்களின் சிலை வழிபாடு மற்றும் ஒழுக்கமற்ற வாழ்வால், எருசலேம் கோவிலிலிருந்து இறைவனின் மாட்சி வெளியேறுவதைக் காட்சியில் கண்டு, இறைவாக்குரைத்த எசேக்கியேல், அந்த மாட்சி திரும்ப கோவிலுக்குள் வருவதையும் காட்சியாகக் கண்டு மக்களுக்கு அறிவிக்கின்றார். இறைவன் மீண்டும் தம் மக்களுடன் உறையவிருக்கிறார். அவர்களின் மாட்சிமிகு கடவுளாக மீண்டும் எழுந்தருள விரும்புகிறார். அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் தங்களின் பழைய வாழ்வை ருனெயளர சிலை வழிபாடு மற்றும் ஒழுக்கக் கேடுகள் - விட்டுவிட்டு, புது வாழ்வு வாழவேண்டியதுதான்.

நமது வாழ்விலும் இறைவன் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார் என்று சிலவேளைகளில் நமக்குத் தோன்றலாம். இறைவனின் ஆற்றலும், மாட்சியும் நம்மோடு இல்லை என்று நாம் கருதலாம். அந்த நேரங்களில் எல்லாம் இறைவனின் மாட்சிக்காக நாம் மன்றாட வேண்டும்.

## உண்மை முஸ்லிம்

ஒரு மனிதனின் இவ்வுலக வாழ்க்கை போராட்டங்களும் சோதனைகளும் நிறைந்தது. இவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து வாழவேண்டிய மனிதன் அதற்கான மனஉறுதியையும் அவன் பெற்றிருக்கவேண்டும். அதற்காகவே அவன் அல்லாஹ்வால் சோதனைகளுக்குட்படுத்தப்படுகிறான். இவ்வேளையில்தான் மனிதன் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும்.

விசுவாசிகளே! ஓரளவு பயத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் நஷ்டத்தாலும் நிச்சயமாக நாம் உங்களை சோதிப்போம். என்றாலும் நபியே இச்சோதனைகளால் ஏற்படும் கஷ்டங்களை சகித்துக் கொண்டிருப்போருக்கு நீர் நன்மாராயம் கூறுவீராக. அல்குர்ஆன் 2:155

ஆம். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறுகிறார்கள் பொறுமையை உடையவர்களைவிட சிறந்த சன்மானத்தைப் பெற்றவர்கள் எவருமில்லை என்று. பொறுமையின் பெறுமதியை அறியும் ஓர் முஸ்லிம் இறைவனின் எத்தகைய சோதனைகளையும் எதிர்கொண்டு அல்லாஹ்வின்மீது நம்பிக்கை வைத்து அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவான். இவனே உண்மையான முஸ்லிம்.

**எம்.சி.கலீல், கல்முனை - 05**

## கவிதைப்போட்டி 1114



● பாராட்டுக்குரியது ●

### குதூகலப் பிரயாணம்

மங்கிப் போன
மாட்டுவண்டிச் சவாரி
மறுபடியும் மக்கள் முன்
கூட்டு வண்டி என்றால்
குடும்பத்துடன் செல்வது
குதூகலப் பிரயாணம்.

எம்.சி.கலீல், கல்முனை -05.

### பயணம்

காப்பெற் வீதிகள்
போடப்பட்டாலும்
அதில் பயணம் செய்ய
மனிதர்கள்
இன்னமும் மாட்டு
வண்டிகளைத்தான்
பயன்படுத்துகிறார்கள்.

எஸ்.முகுந்தா, யாழ்ப்பாணம்.




## கவிதைப் போட்டி இல 1117



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14. 05. 2015

**கவிதைப் போட்டி இல. 1117 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம். இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

### நாகரிகம்

நாகரிகம் வானுயர்ந்து
நிற்கும் உலகில்
இன்னமும் பழமை மாறாத
எமது பண்பாடு

ப.சானுஜன், நல்லூர்.

### மாறாதது

மாறாதது மனிதர்கள்
வாழ்க்கை மட்டுமல்ல
ஐந்தறிவு ஜீவராசிகளினதும்
வாழ்க்கையும் தான்.

க.திர்சன், பதுளை.

### மாட்டுவண்டி

நாகரிகத்தின் வளர்ச்சியில்
எத்தனை வாகனங்களில்
வலம் வந்தாலும்
என்றும் மாறாத
இன்பப் பயணம்
மாட்டு வண்டியில்
மட்டும்தான்.

எஸ்.கவிந்தா, கண்டி.



### அடிமை

வாய்பேசும் ஜீவன்களையே
அடிமைப்படுத்தும்
மனிதர்கள்
வாய்பேசா ஜீவன்களை
விடுவார்களா என்ன?

ச.யாமினி, புத்தளம்

### எம் வாழ்வில்...

வண்டி கட்டி குடும்பத்தோடு
கோயில் போகும்
அந்த நாட்கள்
இனி என்று வருமோ
எம் வாழ்வில்...

சா.ஜெகாந்தன், தெல்லிப்பளை



### பண்பாடு

மாட்டு வண்டிகளின்
சலங்கைகளோடு
போட்டி போடும் வாகனங்களின்
இரைச்சல் சத்தம் என்றுமே தோற்றுத்தான்
போகும் எம் பண்பாட்டுடன்.

நொ.நவநீதன், கொழும்பு -15

## உங்கள் பக்கம்

### யானைகளின் அட்டகாசம் அதிகாரிகளின் அசட்டையீனம்

அட்டாளைச்சேனை, அஷ்ரப் நகர் பகுதியில் யானைப் பாதுகாப்பு வேலிக்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கையினை விரைவில் மேற்கொள்ளுமாறு அட்டாளைச்சேனை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள யானைப் பாதுகாப்பு வேலிக்கு, மின்சாரம் வழங்கப்படும் செயற்பாடு நிறுத்தப்பட்டமையை அடுத்து அங்கு திண்மக் கழிவுகளை உட்கொள்ளவரும் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

யானைப் பாதுகாப்பு வேலிக்கு மின்சாரம் வழங்கும் இயந்திரம், சில காலங்களுக்கு முன்னர் பழுதடைந்ததாகக் கூறப்படுகிறது. இதனால், யானைப் பாதுகாப்பு வேலிக்கு மின்சாரம் செல்வது தடைப்பட்டது.

ஆயினும், மின்சாரம் வழங்கும் இயந்திரத்தினை திருத்துவதற்கோ, அல்லது புதியதொரு இயந்திரத்தினை பதிலீடு செய்வதற்கோ அதிகாரிகள் இதுவரை முயற்சிக்கவில்லை. அஷ்ரப் நகர் பகுதியில் ஏற்கனவே பல வீடுகள் யானைகளால் சேதமாக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், யானைப் பாதுகாப்பு வேலிக்கு மின்சாரம் வழங்கப்படும் செயற்பாடு தடைப்பட்டுள்ளமையினால், அஷ்ரப் நகர் பகுதிக்குள் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

எனவே யானைகளின் அச்சுறுத்தல் தொடர்பில் உரிய தரப்பினருக்கு அறிவித்துள்ளபோதும், இதுவரை எதுவிதமான தீர்வுகளும் கிடைக்கவில்லை. ஆகவே விரைவில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**எம்.அரவிந்த், அஷ்ரப் நகர்.**


மடல்கள் மற்றும் ஆக்கங்கள் உட்பட சகல தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல் (Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):- thinamurasu@live.com


## அமைதியின் சொற்கள்

**பாலைவனத்தில் மலர்வதற்குக் காத்திருக்கும் விதையைப் போன்றும் ஒவ்வொருவரின் உள்ளேயும் சாந்தி காத்துக் கொண்டிருக்கிறது.**

இணையத்தளம்: www.wopg.org
- பிரேம் ராவத்

## கொடை வள்ளல்

வாசகர்கள் மத்தியில் தனக்கென ஒரு தனியிடத்தை வைத்திருக்கும் முரசுக்கு வாசக நெஞ்சத்தின் வாழ்த் துக்கள். முரசில் இடம்பெறும் அனைத்தையும் விரும்பி வாசிப்பேன். தகவல்கள், பாப்பா முரசு என்பவை பிரமாதம். சிறுவர் பக்கத்தில் வரும் அரிய பல தகவல்களை வழங்கிவருகின்றாய். இன்னும் இவ்வாறான தகவல்களை முரசு வாரி வழங்கவேண்டும் என்பதே எனது வேண்டுகோள். சினிமா பகுதி சுவாரசியமாயும், அதில் இடம்பெறும் நடிகர்களின் படமும் சிறப்பாக உள்ளது. மேலும் முரசு இன்னும் வளர வேண்டுமென்பதே எனது அபிப்பிராயம்.

**சா. ஆதர்ஷா,ஹட்டன்.**

## வாசகர்சாலை

### சினிமாவின் சிறப்பு

தினமுரசு வெற்றிநடை போடுகின்றது. அனைத்துப் பகுதிகளும் அருமையாக உள்ளது. அண்மைய நாட்களாக முரசின் கலர் பக்கம் கவரக்கூடியதாக இல்லை. முரசு அதில் ஏன் அக்கறை கொள்வதில்லை. ஆனாலும் சினிமா பக்கம் நன்றாக வருகின்றது. முரசின் மற்றைய பக்கங்கள் எனக்கு மிகவும் பிடித்துள்ளது. உள்பக்கங்களில் வரும் அனைத்து கட்டுரைகளும் சிறப்பாக உள்ளது. இன்னும் முரசு பல்வேறு வளர்ச்சிகளைக் காணவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆர்.சிவநேசன், தெல்லிப்பளை

### உழைப்பாளிகள் வாழ்க!


முரசுக்கு வணக்கம்!

மே தினத்துக்காக வெளியான சர்வதேச தொழிலாளர் தினம் என்ற கட்டுரை உழைப்பாளிகள் தங்கள் உரிமைகளை போராடி வென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை கட்டுரையாளர் சிறப்பாக எடுத்துக்கூறியுள்ளார்.

மேலும் தேன்கிண்ணம் பக்கக் கவிதைகள் எழுதிய அனைவருக்கும் எனது பாராட்டுக்கள். என்றுமே உழைப்பாளிகளை மதிக்கவேண்டும். அவர்களுடைய துன்பங்களை நாமும் உணர்ந்து கொள்ளவேண்டும். அவர்களாலேதான் இந்த உலகமே தழைக்கின்றது.

# உள்ளூராட்சி மன்றங்களை கலைக்கமுடியாது

## ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன் பில



ஜனாதிபதி அல்லது உள்ளூராட்சி மன்ற அமைச்சரினால் உள்ளூராட்சி மன்றங்களை கலைக்கமுடியாது எனவும், உள்ளூராட்சி மன்ற சட்டத்தின் 154ஆம் சரத்தில் இந்த விடயம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொறுப்பான மாகாண அமைச்சரினாலேயே உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை நீடிக்கமுடியும் என அவர் தெரிவித்துள்ளர்ர்.

உள்ளூராட்சி மன்றங்கள் மாகாணசபைகளுக்கு சொந்த மானவை எனவும், மாகாணசபையின் அமைச்சரினால் இந்த விடயம் குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாணசபையின் முதலமைச்சரே இந்த விடயம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு முதன் முதலாக அறிவித்தார் என உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார்.

## ஈழத்தில் நாம் திராவிடர் இயக்கம் ஆரம்பம்

நாம் திராவிடர் என்ற இயக்கம் கடந்த வெள்ளிக்கிழமை(01) செல்லம் பிரிமியர் ஸ்தாபக மோகன் அவர்கள் தலைமையில் மட்டக்களப்பு செங்கலடி செல்லம் வாசஸ்தலத்தில் வைத்து ஆரம்பிக்கப் பட்டது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் தங்கள் வாழ்வில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்து வதற்கு நல்ல் அரசியல் தலைமைகள் கிடைக்காமை வருந்தத்தக்க விடயமாகும். நாம் திராவிடர் என்ற அடிப்படையில் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு நல்லாட்சியில் இணைந்து செயற்படுவோமானால் ஒடுக் கப்பட்டு கிடக்கின்ற தமிழ் மக்கள் தங்கள் அரசியல் தேவைகளை நிறைவுசெய்து கொள்ளலாம் என க.மோகன் தெரிவித்தார்.

இந்த இயக்கத்தில் தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக தியாக சிந்தனையுடன் பங்களிப்பு செய்யும் எவரும் வேறுபாடின்றி இணைந்துகொள்ளலாம் என க.மோகன் அழைப்புவிடுத்திருந்தார்.

## கலாசார சீர்கேடுகள் குறித்து கலந்துரையாடல்

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட்டம், மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, யாழ். மாவட்டத்தில் நடைபெறும் வாள்வெட்டு சம்பவங்கள், கஞ்சா, ஹெரோயின் பாவனை மற்றும் கலாசார சீர்கேடுகள், மதுபோதையில் இளைஞர்களின் இடையூறுகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் வடமாகாண பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க, யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜி.கே. பெரேரா, யாழ். பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், யாழ். மாவட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை தலைவர்கள், சிறுவர், பெண்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முன்னாள் அரச உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## தாய்மைக்கு இலங்கையில் 92 ஆவது இடம்

தென்னாசியாவில் இலங்கை மற்றும் மாலைதீவு என்பன தாய்மையில் சிறந்த இடங்களை பெற்றுக்கொண்டுள்ளன.

சேவ் த சில்ரன் அமைப்பு வெளியிட்டுள்ள 'உலகலாவிய அன்னை 2015' பட்டியலிலேயே இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் 179 நாடுகளில் இலங்கை 92 ஆம் இடத்தில் உள்ளதுடன் மாலைதீவு மற்றும் ஜமேய்க்கா என்பன அதே இடத்தில் உள்ளன. கடந்த வருடம் வெளியிடப்பட்ட பட்டியலில் இலங்கை 89ஆவது இடத்தில் இருந்தது. 1,400 பேருக்கு 1 என்ற நிலையில் இலங்கையில் தாய்மார் மரணவீதம் காணப்படுவதாக அந்த பட்டியலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நோர்வே, பின்லாந்து, ஐஸ்லாந்து, டென்மார்ன் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் இந்த பட்டியலில் உலகளாவியரீதியில் முதலிடத்தில் உள்ளன. அதாவது மோசமான நாடுகள் பட்டியலில் சோமாலியா, பொங்கோ குடியரசு, மத்திய ஆபிரிக்கா, மாலி மற்றும் நைஜர் ஆகிய நாடுகள் இடம்பிடித்துள்ளன.

# கல்விமானும் இலக்கிய ஆய்வாளருமான மர்ஹூம் எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்களின் இனிய நினைவுகள்

சாய்ந்தமருது எனும் ஊரை பிறப்பிடமாகக் கொண்ட எஸ்.எச். முஹம்மது ஜெமீல் அவர்கள் இலங்கையின் ஒரு முதுபெரும் கல்விமான், சிரேஷ்ட எழுத்தாளர், பேச்சாளர், சிறந்த ஆய்வாளர், பன்னூலாசிரியர் ஆவார்.

எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் 1940 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி மீராலெப்பை சாஹுல் ஹமீத் முத்த லிபு வைத்தியர், முக்குலத்தும்மா தம்பதியினரின் மூத்த புதல்வராக பிறந்தார்.

இவர் யூசுப் லெப்பை (வெட்டுக்கிளி லெப்பை) அவர்களிடம் குர்ஆன் மத்ரஸாக் கல்வியை பெற்ற இவர், காரைதீவு இராமகிருஸ்ண வித்தியாலயம், கல்முனை பாத்திமா கல்லூரி, கொழும்பு சாஹிறாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

ஆங்கில மொழிமூலம் கல்வி பெற்ற எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொருளியல் பாடத்தில் சிறப்பு பட்டமும், பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வித் துறையில் முதுமாணி பட்டப்படிப்பினை ஆரம்பித்து பின்னர் அக்கல்வித்துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றப்பட்டபின் அங்கு தொடர்ந்து கற்று எம்.ஏ. பட்டத்தினையும் பெற்றார்.

அத்துடன் பேராதனை பல்கலைகழகத்தில் கல்வித்துறை டிப்ளோமா பட்டமும், ஐக்கிய இராச்சியத்தின் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் கல்வித் துறைசார் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகம் தொடர்பான பயிற்சியையும் பெற்றுக்கொண்டார்.

எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் ஆங்கில போதனாசிரியராக பணியாற்றிய் பின்பு படிப்படியாக உயர்பதவிகளை வசிக்கலானார். அதிபர், ஆசிரியர் பயிற்சி கல்லூரி அதிபர், கல்வி திணைக் களத்தில் உயர் அதிகாரி, பரீட்சை திணைக்கள உதவி ஆணையாளர், இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதலாவது பதிவாளர், முஸ்லீம் சமய, கலாசார இராஜாங்க அமைச்சின் செயலாளர், கல்வி கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர், அதனை



தொடர்ந்து அவ்வமைச்சின் ஆலோசகர் என பல்வேறு உயர்பதவிகளை வகித்து 2000ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் திகதி ஓய்வுபெற்றார்.

எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்கள் தனது தாய்மாமனரான டாக்டர். ஏ.பி.எம். இப்ராஹிமின் மூத்தமகளான சித்தி ஆரிபாவை 1966 இல் திருமணம் செய்தார். இத்தம்பதியினரின் ஏகபுதல்வன் முஹம்மது நஸீல் ஆவார். தற்போது எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்கள் தனது மனைவி, மகன், மருமகள் பாத்திமா ஷஸானா, பேரக் குழந்தைகளான அக்மல், ஹமாத் ஆகியோருடன் கொழும்பில் வசித்துவந்தார்.

எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்களின் [illegible]த்து வன்மை மலர்ந்த இடம் [illegible]தனை பல்கலைக்கழகமாகும். [illegible]லாவது கட்டுரையான "அறிஞர் கண்ட அண்ணல் நபி பெருமான் (ஸல்)" பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் சஞ்[illegible]கையிலும் (1960), முதலாவது [illegible] "என்னாளோ" பல்கலைக்கழக [illegible]ாந்த சஞ்சிகையிலும் (1962), முதலாவது சிறுகதையான "கடன் தீர்ந்தது" பண்டாரவளையிலிருந்து வெளி[illegible]ந்து கொண்டிருந்த மணிக்குரலிலும் (1964) [illegible]ரமாயின.

இலக்கியம், வரலாறு, கல்வி, அரசியல், நாட்டுப்புற பண்பாட்டியல் என்னும் துறை களிலான ஆய்வு முயற்சிகள் வலுப்பெற்று இதுவரை 20 நூல்களுக்கு மேல் வெளியிட்டுள்ளார். எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்களின் வாழ்நாள் தேட்டமான சுமார் 2000 நூல்கள், ஆவணங்களும் 2012ஆம் ஆண்டு ஜுன் மாதம் 14ஆம் திகதி தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டு, எஸ்.எச்.எம். ஜெமீல் பிரத்தியேக நூலகம் என தனி பிரிவாக பல்கலைக்கழகத்தில் பலருக்கும் இன்று உபயோகப்படுகிறது. ஏற்கனவே சுமார் 1000 நூல்களை சாய்ந்தமருது பொது நூலகத்திற்கு 1993ஆம் ஆண்டு இவர் அன்பளிப்பு செய்துள்ளார்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் மற்றும் சமய, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் பின்னர் அவ்வமைச்சின் ஆலோசகர் ஆகிய பதவிகளானது இவரது இலக்கியப் பணியினை மேலும் விரிவாக்குவதற் கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. ஜாபிர் எ.காதர், எ.எச்.எம்.அஸ்வர், லக்ஷமன் ஜயக்கொடி ஆகியோர் அமைச்சர்களாக இருந்த காலங்களில் அமைச்சின் செயலாளராகவும் பின்னர் ஆலோசகராகவும் கடமையாற்றிய 11 வருட காலத்தில் அவ்வமைச்சு மிகப் பெருந்தொகையான நூல்களையும், மலர்களையும் வெளியிட்டதிலும், பலரது நூல்களைப் பதிப்பித்ததிலும் எழுத்தாளர் மற்றும் கலைஞர் ஊக்குவிப்பிலும் பெரும் பங்களிப்புச் செய்தார். மேலும் நூற்றுக்கணக்கான கலை இலக்கிய படைப்பாளிகளுக்கு "வாழுங்காலத்தில் வாழ்த்துவோம்" என்ற மகுடத்தில் விழாவெடுத்து பொற்கிழியும் பட்டங்களும் கொடுத்து கெளரவிக்க அய்ராது உழைத்தார்.

இலங்கைப் படைப்பாளிகளின் பல்லாயிரம் நூல்களைப் பற்றிய பாரிய ஆய்வினைச் செய்து அவற்றைச் "சுவடி ஆற்றுப்படை" என்னும் தலைப்பில் நான்கு பாகங்களாகத் தொகுத்து வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக ஐந்தாவது பாகத்தைத் தொகுக்கும் வேளையில் அவர் காலமாகியது கவலைக்குரியது.

கல்விமான் எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்களுக்கான பாராட்டு விழாவும் அவரது வாழ்வியல் நூல் வெளியீடும், 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத் அவர்களின் தலைமையில் தெஹிவளை ஸஹ்றான் மண்டபத்தில் நடைபெற்றது.

கல்விமான் எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்கள் தெஹிவளை களுபோவில ஆசிரி மாவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி தனது 75ஆவது வயதில் வபாத்தானார்கள். அன்னாரை ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர்தரமான சுவர்க்கத்தை அளிக்க அல்லாஹ் அருள் புரிவானாக! ஆமீன்!!!

**அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால்**
**யாழ்ப்பாணம்**

தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## யார் மணிகட்டுவது?

யாழ்ப்பாணத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். படுகொலையாளிகளுக்கு ஒப்பான மர்ம இயக்கம் உதயமாகியுள்ளது என்றும் அது மாலைப்பொழுதில் மூன்று பேருக்கு மேற்பட்ட ஆண்கள் வீதிகளில் கதைத்துக் கொண்டிருந்தாலோ, சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டாலோ கை, கால்களை வெட்டித் தண்டனை வழங்கப்படுமெனவும், பெண்கள் கவர்ச்சியாக உடையணிந்தாலோ, குட்டையான பாவடைகள் அணிந்து வீதியில் சென்றாலோ அவர்களுக்கும் வாள்வெட்டுத் தண்டனை வழங்கப்படுமென்றும் அநாமதேச அறிவிப்புகளை செய்துள்ளனர்.

அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளது. இரவு மட்டுமல்ல பகலில்கூட துரத்தித் துரத்தி வாள் வெட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளது.

இதனால் யாழ்ப்பாணத்தில் இனம்புரியாத அச்சம் நிலவுகின்றது. ஆரம்பத்தில் காதல் பிரச்சினைகள் காரணமாக ஆங்காங்கே தலை தூக்கிய வாள்வெட்டுக் கலாசாரம் தற்போது கூலிக்காக கொலை செய்வதற்கும், பகையைத் தீர்த்துக் கொள்வதற்கும் வாள் குழுக்களை கூலிக்கு அமர்த்துகின்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளும், சமூக அமைப்புகளும் இந்த விடயத்தில் எதையும் செய்யமுடியாத கையறு நிலையிலேயே பொலிஸாரை நோக்கி விரலை நீட்டுகின்றனர்.


பொலிஸாரோ தம்மளவில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கின்றபோதும், வாள்வெட்டுக் கலாசாரம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றன. முன்னர் ஆவா, டில்லு போன்ற குழுக்களே இவ்வாறு செயற்பட்டன. தற்போது கிராமத்துக்கு ஒரு வாள்வெட்டுக் குழு தோற்றம் பெற்றிருப்பதைப்போல் ஒரு அச்சமான நிலைமை தோன்றியுள்ளது.

முன்னர் இயக்கங்கள் சமூகத்தை அடக்கி வைத்திருந்தபோது ஒரு கட்டுப்பாடு இருந்ததைப்போன்ற தோற்றம் இருந்தது. பின்னர் படையினர் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் ஒரு படைமுகாமோ, காவலரனோ இருந்தபோதும், ஒருவகை பாதுகாப்பு உணர்வு இருந்தது. அப்போது திருடர்களும், வாள்வெட்டுக் குழுக்களும் தலை தூக்கவில்லை.

தற்போது மிரட்டுகின்ற இயக்கங்களும் இல்லை. கண்காணிக்கின்ற படையினரும் இல்லை. எமக்கு பாதுகாப்பும் இல்லை. ஊருக்குள் நான்கு பிரகிருதிகள் ஆளுக்கொரு வாளைத் தூக்கிக்கொண்டு திரிகின்ற நிலைமையில் வாழ்கின்றோம் என்கின்றனர் மக்கள். விடுதலைப் போராட்டம் எமது சமூகக் கட்டமைப்பை தகர்த்துவிட்டுள்ளது. கலாசாரத்தை சீரழித்துவிட்டுள்ளது. பண்பாட்டை நொருக்கிவிட்டது.

இதிலிருந்து தமிழ் இனம் மீண்டெழுவதற்கான பொறிமுறையை கண்டுபிடிப்பது அவசியமும் அவசரமுமாகும். அரசியலுக்கு அப்பால் அரசியல் தலைமைகளும், புத்திஜீவிகளும், சமூக அமைப்புக்களும், பொதுமக்களும் பொதுவேலைத் திட்டத்திற்கு தயாராக வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் இனத்தை மேற்சொன்ன காரணங்கள் மெல்ல அரித்து அழித்துவிடும் என்ற எச்சரிக்கை உணர்வு நமக்கு அவசியம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



ஜனாதிபதி மைத்திரிபால அவர்கள் அரசியல் சுயலாபங்களுக்கு அப்பால், பதவிச் சுகங்களுக்கு அப்பால் இலங்கையை புதிய அரசியல் கலாசாரத்தில் பாதையில் முன்னெடுத்து செல்வதற்கான விருப்பத்தைக் கொண்டிருந்தாலும், அவருடன் கூடவே இருக்கும் சில அரசியல் சகாக்கள் அதிகாரத்தையும், பதவிக்காலத்தை தக்கவைத்துக் கொள்வதற்காகவும் நாட்டை பின்னோக்கி இழுத்துவிடவும், மக்களை பின்னடைவுகளுக்குள் தள்ளிவிடவும் தயங்காதவர்களாகவே இருந்து வருகின்றனர். இந்த துரதிர்ஷ்டமான நிலையை ஜனாதிபதி ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

# புதிய பாதையில் இலங்கையின் பயணம்

ஜனாதிபதி மைத்திரிபால நிறைவேற்று அதிகாரத்தில் குறைப்புச் செய்யும் பத்தொன்பதாவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதன் பின்னர் இலங்கையின் ஜனநாயக முகம் உலக நாடுகளை ஈர்க்கச் செய்திருக்கின்றார்.

ஏற்கெனவே இந்தியா, சீனா, பிரிட்டன், பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கையுடன் நெருங்கியுள்ள நிலையில், இப்போது அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகளையும் நெருங்கிவரச் செய்திருக்கின்றது. அரசியல் நோக்கங்களுடன் அமெரிக்காவின் இராஜாங்கச் செயலர் ஒருவரை இலங்கைக்கு வருகைதரச் செய்யும் அளவுக்கு இலங்கையில் மாற்றங்கள் நடந்துள்ளது.

அமெரிக்காவின் தலையீடு குழப்பங்களை தோற்றுவிப்பதாக அமைவது ஒரு ரகம். அதே நேரம் அமெரிக்காவின் கவனத்தை ஈர்க்கும் இன்னொரு விடயம் அரசியல் தலைமைகள் மக்களுக்கு கொடுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றபோதும், அதை அமெரிக்கா அங்கீகரிக்கவும் ஊக்குவிக்கவும் தவறியதில்லை.

குறிப்பாக, தென்னாசிய நாடுகளில் அரசியல் தலைவர்கள் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை என்பதை அமெரிக்கா நீண்ட காலமாகவே சுட்டிக்காட்டி வந்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டை இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால மாற்றியமைத்திருக்கின்றார்.

ஆகவே, இலங்கையின் எதிர்காலமும் கவனிக்கப்படக் கூடியவகையில் அமையும் என்ற எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. ஆனால் உள்நாட்டில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையுள்ள அதிகாரங்களை குறைக்கும் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் அரசியல் குழப்பத்தை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சிகள் முன்னெடுக்கப்படவில்லை.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் இலங்கையின் அரசியலில் சூறாவளியை நிச்சயம் ஏற்படுத்தும். அதில் ஜனாதிபதி தனித்துவிடாமலிருப்பதற்கான தேவை முக்கியமாகும். ஜனாதிபதி தனித்துப்போனால் பத்தொன்பதாவது திருத்தத்தை கட்சிகளின் காலில்விழாத குறையாக நிறைவேற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சில சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சி பிரதமருடன் ஆட்சியை அமைக்குமானால் தற்போது இருப்பதைப்போல் இல்லாமல் பிரதமருக்குரிய அதிகாரத்துடன் தனித்துவமான பயணத்துடன் பயணிக்கும் என்ற கவலைகள் தற்போதே எழத் தொடங்கியுள்ளது. அதனால், ஜனாதிபதி தனது கட்சியினரே ஆட்சியை கைப்பற்றிக் கொள்ளத் தேவையான காய்நகர்த்தல்களை செய்யவேண்டுமென அவர்சார்ந்த கட்சியினர் அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்த நெருக்கடியான நிலையில் தற்போதுள்ள அரசியல் சூழலே தேர்தலுக்குப் பிறகும் தொடரவேண்டும் என்பதே இலங்கையில் தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முற்படும் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் தேவையாக உள்ளது.

சீனா போன்ற நாடுகளுக்கோ தற்போதைய அரசியல் சூழல் தொடர்வது விருப்பத்துக்குரியதாக இருக்காது. ஆகவே இலங்கையில் தற்போதுள்ள அரசியல் குழப்பத்தை உலக நாடுகள் இரண்டுவகையான நோக்கத்தோடு அணுகப் போகின்றன. அது ஏற்படுத்தப்போகும் விளைவை இலங்கை மக்களே அனுபவிக்கப்போகின்றார்கள்.

மே தினத்தன்று உரையாற்றிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்வதற்கு எந்தவொரு வெளிநாட்டுக்கும் இடமளிக்கப்போவதில்லை என்று கூறியிருந்தார். இந்தச் செய்தியை அமெரிக்காவின் இராஜாங்கச் செயலர் கெரி வருகை தருகின்ற சமயத்தில் கூறியிருந்ததால் சிந்தனையைத் தூண்டியது.

ஏற்கெனவே, பிரதமர் அமெரிக்காவின் நெருக்கத்துக்குரியவர் என்ற விமர்சனங்கள் இருக்கின்ற நிலையில் இவ்வாறு பிரதமர் கூறியிருக்கின்றார். தவிரவும் தற்போதுள்ள அரசு வெளிநாடுகளின் கைப்பொம்மையாகவே மாறியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை பழிவாங்கி நாடுகள் தற்போதுள்ள அரசுடன் தற்போதைய அரசை தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு வலைக்க முற்படுகின்றனர் என்ற விமர்சனங்களும் இருக்கவே செய்கின்றன.

இவற்றையெல்லாம் எதிர்கொண்டு நாட்டை புதியதொரு பாதையில் இட்டுச் செல்வதற்கு நாட்டில் உறுதியான அரசு அமைவது அவசியமாகும். அப்படி அமையும் அரசு ஜனாதிபதியின் வழிகாட்டலை ஏற்று செயற்படவேண்டும்.

ஜனாதிபதி தேசிய அரசாங்கம் ஒன்று அமைவதையே பெரிதும் விரும்புகின்றார். ஆனால் தேசிய அரசாங்கத்துக்குள் தமது அரசியல் எதிரிகளை உள்வாங்கி விடாமலிருக்கின்ற கோடு மறிப்பு விளையாட்டிலும் பலர் குறிப்பாக தமிழ், முஸ்லிம் கட்சிகள் மிகக் கவனமாக இருக்கின்றன.

முடிந்துபோன நூறு நாள் அரசில் இதே கிளித்தட்டு விளையாட்டு அரசியல் நடத்தி தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஆடிய ஆட்டத்தினால், தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் முக்களுக்கும் மத்திய அரசிலிருந்து கிடைக்கவேண்டிய ஒதுக்கீடுகளும், உரிமைகளும் கிடைக்கவில்லை.

தாமும் செய்யாமல், செய்யக் கூடியவர்களையும் விடாமல் சில அரசியல் குள்ளநரிகள், மக்கள் தமது தேவைகளுக்காக கொழும்புக்குச் சென்று தரகர்களைப் பிடித்து அலைந்து காரியங்களைச் செய்துகொள்ள்லாமே தவிர சொந்த மாவட்டத்தில் தாமே வாக்களித்த அமைச்சர் ஒருவரை அணுகிவிடக்கூடாது என்பதில் கவனமாகவே இருக்கின்றார்கள்.

ஜனாதிபதி மைத்திரிபால அவர்கள் அரசியல் சுயலாபங்களுக்கு அப்பால், பதவிச் சுகங்களுக்கு அப்பால் இலங்கையை புதிய அரசியல் கலாசாரத்தில் பர்தையில் முன்னெடுத்து செல்வதற்கான விருப்பத்தைக் கொண்டிருந்தாலும், அவருடன்கூடவே இருக்கும் சில அரசியல் சகாக்கள் அதிகாரத்தையும், பதவிக்காலத்தை தக்கவைத்துக் கொள்வதற்காகவும் நாட்டை பின்னோக்கி இழுத்துவிடவும், மக்களை பின்னடைவுகளுக்குள் தள்ளிவிடவும் தயங்காதவர்களாகவே இருந்துவருகின்றனர். இந்த துரதிர்ஷடமான நிலையை ஜனாதிபதி ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இலங்கையின் முன்னோக்கிய பயணத்திற்கு தடையாக இருக்கக்கூடிய இனவாத மற்றும் அரசியல் குரோதம் நிறைந்த சக்திகளை இனங்கண்டு தூர விலக்கி வைக்கவேண்டும்.

தொடர்ந்தும் தனது வெற்றிக்காக உழைத்தவர்கள் என்பதற்காக செஞ்சோற்றுக் கடனுக்காக தீயவர்களை தொடர்ந்தும் அருகிலேயே வைத்துக்கொண்டிருந்தால் நாட்டை புதிய பாதையில் இட்டுச் செல்ல முடியாது. ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபாலவின் வெற்றிக்காக பங்களிப்புச் செய்தவர்களில் தொண்ணூற்று ஒன்பது விகிதமானவர்கள் தமது அரசியல் தவறுகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும், கரும்பு தின்னக் கிடைத்த கூலிக்காகவுமே அதைச் செய்தார்கள் என்பது நாட்டு மக்களுக்கும், உலக அவதானிப்பாளர்களுக்கும் தெரிந்த பரகசியமாகும்.

இலங்கையின் புதிய பயணம் என்பது மகிந்த ராஜபக்சவை அப்புறப்படுத்தியதால் மட்டும் சாத்தியமாகிவிடாது. அரசியல் குரோதங்களையும், குழிபறிப்புக்களையும் தவிர்த்து ஐக்கியத்தோடு முன்மாதிரியோடு மக்களின் நலனை முன்னிறுத்தி அனைத்து அரசியல் தலைமைகளும் பயணிக்க முற்படுகின்றபோதே அது சாத்தியமாகும்.

துரதிர்ஷ்டவசமாக அப்படி பொது வேலைத்திட்டத்தில் இலங்கையின் அரசியல் கட்சிகள் ஐக்கியப்படப் போவதில்லை. இலங்கையின் அரசியல் கலாசாரமும் இல்லை. இலங்கையின் அரசியலுக்குள் மூக்கை நுழைத்துள்ள வெளிநாட்டுச் சக்திகளும் அதற்கு இடமளிக்கப்போவதில்லை.

மதியூகி
எக்ஸ்ரே ரிப்போர்ட்



# புலிகளின் வதை முகாமில்

## மணியம்

### தொடர் 164

புலிகளின் மருத்துவப் பொறுப்பாளர் மெய்யப்பன் என்பவன் ஏதோ சில மருந்து மாத்திரைகளைக் கொண்டு வந்து தந்தான். வலியைக் குறைப்பதற் கான மாத்திரைகள் போலும்.

அன்றிரவு கடுமையான காய்ச்சல் அடித்தது. உடம்பு நெருப்புப் போல கொதித்தது. எனக்கு அருகில் இருந்த யாரோ பழைய துணியொன்றை தண்ணீரில் நனைத்துவந்து எனது நெற்றியில் வைத்து சூட்டைத் தணிக்க முயன்று கொண்டிருந்தனர்.

நள்ளிரவின்பின் தூங்கிப்போனேன். இரவு தொடர்ந்து கனவுகள் வந்து கொண்டே இருந்தன. பொதுவாக இரவில் காணும் கனவுகளை விடிந்ததும் நாம் மறந்துபோவது வழமை. ஆனால் சில கனவுகள மட்டும் நம் எல்லோருக்கும் வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாமல் இருக்கும்.

நான் அன்று கண்ட கனவுகளில் அப்படியான ஒன்று. அந்த கனவு இன்னமும் எனது நினைவுகளில் நீடித்து நிற்கிறது. அது நினைவுக்கு வரும் நாட்களில், புலிகளின் சித்திர வதைக் கூடத்தில் அன்று நான் அனுபவித்த அத்தனை சம்பவங்களும் எனது நினைவுக்குவந்து, மீண்டும் ஒரு நரக வாழ்க்கைக்கு இழுத்துச் செல்வது வழமையாகிப் போய்விட்டது. அப்படியான ஒரு கனவு அந்த கனவு. அது எனது எனது மனதைவிட்டு ஒருபோதும் அகலாது போல இருக்கிறது. ''மரணத்துள் வாழ்வோம்'' என்றொரு ஈழத்துக் கவிஞர்களின் கவிதைத் தொகுதி பல வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது. அதன் அர்த்தம் ''மரணம் சம்பவித்த பின்னரும் நாம் உயிர் வாழ்வோம்'' என அந்தக் கவிஞர்கள் சூளுரைத்த தாகத்தான் இருக்கவேண்டும். அது போல எனது கனவும், எனது மரணத்தின் பின்னரும் உயிர் வாழும்போல இருக்கிறது.

நான் கண்ட கனவில் தமது முகங் களைக் கறுப்புத் துணியால் மூடிய இருவர் எனது கைகளைப் பிடித்து எங்கோ அழைத்துப் போகிறார்கள் அதைப் பார்த்துக்கொண்டு எனது பல உறவினர்களும் நண்பர்களும் அமைதியாக நிற்கின்றனர். என்னைப் பிடித்துச் செல்பவர்களை அவர்கள் யாரும் தடுக்காமல் நிற்பதைப் பார்க்க எனக்கு கவலையும் அழுகையுமாக இருக்கின்றது.

என்னைக் கொண்டுபோபவர்கள் மிக வேகமாக எனது கைகளைப் பிடித்து இழுத்துச் செல்கின்றனர். நான் அவர்களது பிடியிலிருந்து விடுபடத் திமிறிப் பார்க்கின்றேன். அவர்களது பிடி இறுகுகிறதே தவிர தளர்வதாக இல்லை.

நான் அவர்களைப் பார்த்து ''நீங்கள் ஆர்? என்னை எங்கை கொண்டு போறியள்?'' எனக் கேட்கின்றேன்.

அவர்கள் கேலியாகச் சிரிக்கின்றனர். பின்னர் என்னை நிறுத்தி எனது கண்களை கறுப்புத் துணியால் இறுக்கிக் கட்டுகின்றனர். அவர்கள் என்து மூக்கையும் சேர்த்துக் கட்டியதால், எனக்கு மூச்சுவிடுவது கஸ்டமாக இருக்கிறது.

நான் மீண்டும் அவர்களிடம் முதல் கேட்ட அதே கேள்வியைக் கேட்கின் றேன். அவர்கள் மீண்டும் சிரிக்கின்றனர். பின்னர் அவர்களில் ஒருவன் என்னிடம் ''நீ அங்கை வந்த பிறகு அது எந்த இடம் எண்டு உனக்கு விளங்கும்'' என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரிக்கிறான்.

இது என்ன? கதைத்தவனின் குரல் எனக்கு மிகவும் பரிச்சயமானதாக இருக்கிறதே! ஒருநாள் அல்ல, இருநாள் அல்ல. ஆண்டுக்கணக்காகக் கேட்ட குரலாக இருக்கிறதே!! யார் இவன்? இவன் எதிரியா அல்லது எம்முடன் தோழனாக நண்பனாக ஒரு காலத்தில் இருந்த ஒருவனா? என்னால் அவன் யார் என்பதை நினைவுபடுத்திப் பார்க்க முடியவில்லை.

சிறிதுநேரத்தில் அவர்கள் எனது கையைப் பிடித்து ஒரு மேடைக்கு மேல்படிகளால் ஏற்றி நிற்கவைக் கின்றனர். பின்னர் எனது கண்களைச் சுற்றிக் கட்டியிருந்த கறுப்புத் துணிகளை அவிழ்க்கின்றனர். நிலவொளியில் புறக் காட்சிகள் மெல்ல மெல்லத தெளிவாகின்றன. இரு கற்தூண களில் ஒர் உத்தரம் குறுக்காகட போடப்பட்டிருக்கிறது. அதில் ஒரு தூக்குக் கயிறு தொங்குகிறது. ''என்னைத் தூக்கில் போடப் போகிறார் களோ?'' எனது மனம் பதற்றமடைகிறது.

''ஐயோ என்னைத் தூக்கில் போடாதையுங்கோ! வேணுமானால் சுடுங்கோ'' என நான் உரத்துக் கத்து கிறேன். ஆனால் குரல் தொண்டையை விட்டு வெளிவர மறுக்கிறது.

''என்ன விசயம். ஏன் குளறுனிங்கள்?'' என எனது தோள்பட்டையை யாரோ உலுக்கியபின்னர் நான் திடுக்கிட்டு விளித்தபோதுதான், நான் கண்டது கனவு எனத் தெரியவந்தது.

''ஒண்டுமில்லை'' எனறு சொல்லி விட்டு கண்களை மூடிக்கொண்டேன்.

''ஆரடா சத்தம் போட்டது?'' எனக் கேட்டுக்கொண்டு இரவுக் காவல் கடமையில் இருந்த புலி ஒருவன் துப்பாக்கியுடன் வதை முகாம் வாசலில் வந்து நின்று அதட்டினான். சிறைக்குள் இருந்த யாருமே மூச்சுவிடவில்லை. அவன் சிறிது நேரம் நின்றுவிட்டு, ''திண்டிட்டு திண்டிட்டு சும்மா இருகக உடம்பு திமிர் எடுக்குதோ?'' என்று திட்டிவிட்டுச் சென்ற பின்னர்தான், சிலர் ஏதோ முணுமுணுத்தது கேட்டது.

அடுத்த இரண்டு மூன்று தினங்களாக என்னை விசாரணைக்காக வெளியே எடுக்கவில்லை. ஆனால் எனது விசாரணையாளன் தயாபரன் தினமும் சிறைக்கு வெளியே வந்து நின்று ''இப்ப உடம்பு எப்பிடி இருக்கு?'' என்று கேட்ட வண்ணம் இருந்தான்.

பின்னர் ஒருநாள் வந்து நின்று என்னை வதை முகாம் வாசல்வரை நடந்து வரும்படி கூறினான். நான் சிரமப்பட்டு எழுந்துநிற்க முயன்றேன். ஆனால் தலைச் சுற்றலும், கால்கள் தள்ளாட்டமுமாக இருந்தது. நான் எழுந்து நிற்க உதவி செய்வதற்கு சில சக கைதிகள் முயன்றனர். ஆனால் அவர்களை தயாபரன் தடுத்துவிட்டான்.

''அவராக எழுந்து நடக்கட்டும், ஒருதரும் பிடிக்க வேண்டாம்'' எனச் சொல்லிவிட்டான்.

நான் அருகில் இருந்த சுவரை ஆதாரமாகக் கொண்டு மெதுவாக நடந்து சென்று அவனுக்கு அருகாக, சிறைக்கதவின் கம்பிகளைப் பிடித்த வண்ணம் ஒருவாறு நின்றேன்.

(தொடரும்...)

எப்போது வருவார் என்றும் தெரியவில்லை. நானும் எனது சகோதரன் ரொபேர்ட்டும் பிளாட்பாரத்தில் காத்து இருக்கிறோம் என்றார் கண்களைத் துடைத்தபடி

''அந்த மற்ற காவலாளி நான்தான்''

**இதோ ரயிலில் ஏற்றப்படுகிறது தங்கம்!**

கறுப்பு உடை அணிந்தபடி கண் களைத் துடைத்துக் கொண்டிருக்கும் மிஸ் மரியத்தைப் பார்த்தார் ரெயில்வே காவலாளி ஸ்கொட். அவ்வளவு அழகான பெண் ஒருவரை இவ்வளவு அருகில் அவர் அதுவரை பார்த்ததில்லை.

நீங்கள் அழக்கூடாது மிஸ்... என்றவர், கார்ட் பேர்க்ஸ் கூறிய காவலாளி நான்தான். உங்களுடைய சகோதரனின் சவப்பெட்டியை ஏற்று வதற்கு நான் உதவி செய்கிறேன். நீங்கள் கண்களைத் துடைத்துக் கொள்ளுங்கள்'' என்றார்

கண்களைத் துடைப்பதற்கு தன்னிடமிருந்த கைக்குட்டையையும் கொடுத்தார்.

''நீங்கள் எவ்வளவு நல்லவர். அன்பாக நடந்துகொள்கிறீர்கள். ஆனால் அந்த கார்ட் என்னுடன் முரட்டுத்தனமாகப் பேசினார் என்றார் மிஸ் மரியம், அழுகையிலும் ஸ்கொட்டை நோக்கி மோகனமாக புன்னகைத்தபடி.



ஸ்கொட் இளைஞர். இவ்வளவு அழகான பெண் ஒருவர் தன்னைப் புகழ்ந்து கூறியவுடன் அவர் கிறு கிறுத்துப் போனார். ''நீங்கள் எதற்கும் கவலைப்படாதீர்கள் மிஸ். அந்த கார்ட் கிடக்கிறார். உங்களுக்கு என்ன தேவையோ நான் செய்கிறேன்'' என்றார்.

புதிய ரூல்ஸின்படி சவப்பெட்டியைக் கூடத் திறந்து பார்க்க வேண்டுமாமே''

ரூல்ஸ் அப்படித்தான். ஆனால் அதற்கு விதிவிலக்கு [illegible] அதிகாரம் எனக்கு இருக்கிறது

[illegible] உங்களை இன்று [illegible] எனது அதிர்ஷ்டம் என்றார் மி[illegible] மனதுக்குள் சிரித்தபடி.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டு இருக்கும்போது சாம்பல் நிற யூனிபாரம் அணிந்[illegible] இரண்டு காவலர்கள் லண்[illegible] பிரிட்ஜ் ரெயில்வே ஸ்டேஷனு[illegible] நுழைந்தார்கள்.

வங்கியின் தங்கப் பாளங்கள் வரத் தொடங்கிவிட்டன என்பதைப் புரிந்து கொண்டார் ஸ்கொட்.

கடுமையான பாதுகாப்புடன்கூடிய சீரான அந்த நடவடிக்கை ரெயில்வே ஸ்டேஷனில் நடைபெறத் தொடங்கியது.

முதலில்வந்த இரு காவலர்களும் பிளாட்போர்மை அடைந்ததும் கார்ட் வேகனுக்கு அருகே வந்துநின்றார்கள். அவர்களிடம் துப்பாக்கிகள் தயாராக இருந்தன.

அவர்களைத் தொடர்ந்து ஆயுதம் தாங்கிய எட்டு காவலர்கள் வந்தார்கள். அவர்களுக்கு நடுவே ஒரு தள்ளுவண்டி. அதில் துணிப்பைகளில் அடைக்கப் பட்ட தங்கம்.

இந்த எட்டுப்பேரும், தங்கம் அடங்கிய தள்ளு வண்டியும், கார்ட் வேகனுக்கு அருகே வந்தவுடன், முதலில்வந்த இரு காவலர்களும் உள்ளே ஏறி வேகனை சோதனை செய்தார்கள். உள்ளே கார்ட்டைத் தவிர வேறு யாரும் இல்லை என்பது உறுதியானபின் மற்றவர்களுக்கு சைகை செய்தார்கள்.

இப்போது தள்ளுவண்டி வேகனுக்குள் கொண்டு செல்லப்பட்டது.

இதற்குள் வங்கி அதிகாரி ஒருவரும் ரெயில்வே டெஸ்பாச்சரும் அங்கே வந்துவிட்டார்கள். வங்கி அதிகாரியின் கையில் இரு சாவிகளும் ரெயில்வே டெஸ்பாச்சரின் கையில் இரு சாவி களும் இருந்தன.

வங்கி அதிகாரி தன்னிடமிருந்த சாவிகளைப் போட்டு இரும்புப் பெட்டகத்தைத் திறக்க, ரெயில்வே டெஸ்பாச்சரும் தன்னிடமுள்ள சாவி களைப் போட்டுத் திறக்க, இரும்பு பெட்டகத்தின் கத[illegible] திறந்து கொண்டன.

அதற்குள் தங்கம் ஏற்றப்பட்டது. மொத்தம் 15 துணிப்பைகளில் தங்கம் இருந்தது. அதன் பெறுமதி அந்த நாட்களில் 12,000 பவுண்ட்ஸ்.

உள்ளேயிருக்கும் துணிப்பைகளின் எண்ணிக்கை சரியாக இருக்கிறதா என்று வங்கி அதிகாரியால் எண்ணிப் பார்த்தபின்னர் பெரிய சத்தத்துடன் இரும்புப் பெட்டகத்தின் கதவு மூடப்பட்டது. நான்கு சாவிகளால் பூட்டப்பட்டது.

வழமைபோல இரண்டு சாவிகளை ரெயில்வே டிஸ்பாச்சர் எடுத்து தனது கோட் பொக்கட்டுக்குள் வைத்துக் கொள்ள, மீதி இரு சாவிகளையும் எடுத்துக்கொண்டு வங்கி அதிகாரி வெளியே வந்தார்.

ரெயில்வே பிளாட்போரமில் [illegible] ஸ்டசன் அன் பிராட்போர்ட் வங்கியின் தலைவன் திரு ட்ரெண்ட்டும், உயரதிகாரி திரு ஹென்ட்ரியும் நின்றிருந்தார்கள். அவர்களிடம் ஒவ்வொரு சாவியை வங்கி அதிகாரி கொடுக்க அவர்கள் [illegible] படுத்திக் கொண்டார்கள்.

தங்கம் பாதுகாப்பாக ஏற்றப்பட்டு விட்டது.

ஆனால் அந்தத் தங்கம் அன்றைய தினம் பாதுகாப்பாகப் போய்ச் சேரப் போவதில்லை என்பதை அவர்கள் அப்போது தெரிந்து கொண்டிருக்க வில்லை.

(தொடரும்...)






ஒரு தாக்குதல் நடத்த வேண்டும். அது உலகத்தையே குலுக்கவேண்டும். இஸ்ரேலிய அரசு பதறிக்கொண்டு அலறியோடவேண்டும். இப்படியும் செய்வார்களா என்று அச்சம் மேலோங்க வேண்டும். அதுதான் சரியான பதிலடியாக இருக்கமுடியும் என்று தீர்மானித்த ஹமாஸ், திட்டமிட்டு ஒரு போராளியைத் தயார்செய்து அனுப்பியது. உடலெங்கும் வெடி பொருட்களைக் கட்டிக்கொண்டு போய் நஷ்டநடு வீதியில் தன்னைத் தானே மாய்த்துக்கொண்டு சுமார் ஐம்பது யூதர்களையும் கொன்றான் அவன்.



ஹமாஸ் எதிர்பார்த்தபடியே இந்தச் சம்பவம் சர்வதேச கவனத்தைக் கவர்ந்தது. அத்தனை நாட்டுத் தலைவர்களும் அலறினார்கள். இஸ்ரேல் அதிர்ச்சியில் வாயடைத்துப்போனது. இப்படியுமா கொலைவெறி கொள்வார்கள் என்று பக்கம்பக்கமாக எழுதி மாய்ந்தார்கள். உடனடியாகப் பல்வேறு நாடுகள் ஹமாஸை தடைசெய்யப்பட்ட ஓர் இயக்கமாக அறிவித்தன. இதில் மிகப்பெரிய நகைச்சுவை என்னவென்றால் அல்கொய்தா போன்ற அமைப்புகளுக்கு வெளிப்படையாகப் பல தேசங்களில் கிளைகளும் துணை அமைப்புகளும் பயிற்சி முகாம்களும் இருப்பதுபோல ஹமாஸுக்குக் கிடையவே கிடையாது. எங்கே யார் இருக்கிறார்கள் என்பதுகூட யாருக்கும் தெரியாது.

1989இலிருந்து 1991வரை ஹமாஸ் இயக்கத்தினரைப் பற்றித் தகவல் சேகரிக்கவென்றே அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ.வில் தனியொரு பிரிவு செயல்பட்டது. இஸ்ரேலிய உளவுத்துறை மொஸாட்டுடன் இணைந்து மூன்று ஆண்டுகள் படாதபாடுபட்டும் அவர்களால் மொத்தம் பதினான்கு பேரைத் தவிர வேறு பெயர்களைக்கூடக் கண்டுபிடிக்கமுடியவில்லை. எந்த ஒரு ஹமாஸ் தலைவரைப் பற்றிய தனி விவரங்களும் கிடைக்கவேயில்லை. கஷ்டப்பட்டு அவர்கள் சேகரித்து வெளி உலகுக்கு அறிவித்த அந்த ஹமாஸ் தலைவர்களின் பெயர்கள் இதோ:

01. ஷேக் அகமது யாசின் - மதத்தலைவர், இராணுவத்தலைவர். (இவர் மார்ச் 22, 2004இல் இஸ்ரேலிய ராணுவத்தினரால் கொல்லப்பட்டார்.)

02. டாக்டர் அப்துல் அஜிஸ் அல் ரண்டிஸி யாசின் மறைவுக்குப், பிறகு ஹமாஸின் தலைவரானவர். இவரும் இஸ்ரேல் இராணுவத்தினரால் அதே ஆண்டு படுகொலை செய்யப்பட்டார்.)

03. இப்ராஹிம் அல்மகத்மெ 2003ஆம் ஆண்டு மொஸாட் உளவாளிகளால் கொலை செய்யப்பட்டவர்.)

04. மெஹ்மூத் அல் ஸாஹர் - அரசியல் பிரிவுத் தலைவர்)

05.இஸ்மாயில் ஹனியா - பெரும் பண்டி தர். அரசியல் ஆலோசகர்.)

06. சயீது அ்சியாம் - அரசியல் பிரிவின் மூத்த செயலாளர்.)

07.ஸலா ஸாஹேத் - ஹமாஸின் இராணுவத் தளபதி. 2002ஆம் ஆண்டு கொல்லப்பட்டார்.)

08. மொஹம்மத் டெயி:ப் - இராணுவத் தளபதி.)

019. அட்னல் அல் கௌல் - வெடி பொருள் நிபுணர். ராக்கெட் லோஞ்ச்சர் பிரயோகத்தில் விற்பன்னர்.)

10. மொஹம்மத் தாஹா - ஹமாஸைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவர். மார்க்க அறிஞர். 2003ஆம் ஆண்டு இஸ்ரேலிய இராணுவம் இவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. இன்றுவரை சிறையில் இருக்கிறார்.)

11. யாஹியா அயாஷ் - வெடிகுண்டுகள் தயாரிக்கும் விஞ்ஞானி.)

12. காலித் மஷால் டெமஸ்கஸில் வசிக்கும் ஹமாஸ் தலைவர். செப்டம்பர் 2004-க்குப் பிறகு ஈரானுக்குத் தப்பிச் சென்றுவிட்டதாக நம்பப்படுகிறது.)

13.மூசா அபு மர்ஸுக் - சிரியாவில் இருக்கிறார்.)

14. ஷேக் கலில் 2004இல் இஸ்ரேலிய இராணுவத்தால் கொல்லப்பட்ட இவர், மிகவும் ஆபத்தான தீவிரவாதி என்று வருணிக்கப்பட்டவர்.)

எந்த விவரமும் கண்டுபிடிக்க முடியாத இவர்களில் சிலரை இஸ்ரேல் ராணுவம் எப்படிக் கொன்றது என்பது மிக முக்கியமான விஷயம். ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த யாராவது ஒருவர் அந்த இயக்கத்தின் தலைவராக அறிவிக்கப்படுகிறார் என்றால் கண்டிப்பாக அவர் மிகப்பெரிய மார்க்க அறிஞராகத்தான் இருப்பார். அவரது ராணுவத் தகுதிகளெல்லாம் கூட இரண்டாம் பட்சம்தான்.

அப்படி சமய ஈடுபாடு மிக்க ஒருவர் மசூதிக்குப் போய் தொழுகை நடத்துவதிலிருந்து ஒரு நாளும் தவறமாட்டார்.

(தொடரும்...)

புதிய தொடர்- 02



# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

**மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அழிவு யுத்தத்துக்கும், வன்முறைகளுக்கும் முகங்கொடுத்த ஒரு இனத்தை ஆயுதங்களே அடக்கியும், ஆண்டும் வந்துள்ளன. அதற்கு மக்கள் பழகியும் விட்டிருந்தார்கள்.**

**இப்போது ஆயுதங்கள் விலகிவிட்டுள்ள நிலையில் கொள்ளைக் கோஷ்டிகளும், வன்முறைக் கும்பல்களும், ஊர்ச் சண்டியர்களும், வாள்வெட்டு வீரர்களும் அதிகரித்துள்ளனர். சமூகம் ஒரு கலாசார பிறழ்வை சந்தித்திருப்பதுபோல் இருக்கின்றது.**

**எவ்வாறான பாதை நமக்காக திறக்கப்படுகின்றதோ அதில் எவ்வாறு பயணிக்கவேண்டும் என்பதை நாமே தீர்மானிக்கவேண்டும். தென் ஆபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக் கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங்களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.**

மண்டேலாவின் தாயாரிடம் மூன்று குடிசைகள் இருந்தன. மூன்றும் உறவினர்களாலும் அவர்களின் குழந்தைகளாலும் எந்நேரமும் நிரம்பியிருக்கும். ஒருவர் பல பெண்களை மணந்துகொள்வது இயல்பானது என்பதால், ஒவ்வொருவருக்கும் உறவினர் வட்டம் மிகப் பெரியதாக அமைந்திருந்தது. மண்டேலாவின் தாயின் சகோதரி மண்டேலாவுக்கும் தாயாக இருந்தார்.

ஒரு குடிசை சமையலுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ஒன்று உறங்குவதற்கு, மற்றொன்று கிடங்காகப் பயன்படுத்தப்பட்டுவந்தது. தானியங்களும், வேண்டிய, வேண்டாத பொருட்களும் அங்கே சேமிக்கப்பட்டிருந்தன. உறங்கும் அறையில் நாற்காலி, கட்டில் எதுவுமிருக்காது. பாயில் படுத்துக்கொள்ளலாம், தரையில் அமர்ந்து உண்ணலாம். எதை விளைவித்தார்களோ அதையே உண்டார்கள். மக்காச்சோளம் பிரதான உணவாகக் கருதப்பட்டது. ஆடு மாடுகளின் பால், இறைச்சி உணவுக்காகப் பயன்படுத்தப்பட்டன.

மண்டேலா சிறுவயதில் உற்சாகமும் சுறுசுறுப்பும் நிறைந்த சுட்டித்தனம் உடைய பையனாகவே வளர்ந்து வந்தான்.



எந்நேரமும் நண்பர்களுடன் குழுவாகச் சேர்ந்தே சுற்றிக் கொண்டிருப்பான். ஆடுகளையும் மாடுகளையும் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு அவனிடம் வந்து சேர்ந்தது.

சிறு வயதில் அவன் உண்டிகோல் வைத்து பறவைகளை அடித்து வீழ்த்துவதற்குக் கற்றுக்கொண்டான். கூடுகளிலிருந்து தேன் சேகரித்தான். குறிப்பிட்ட மரவேர் பகுதிகளை தேடிப் பிடித்து வீட்டுக்குக் கொண்டுபோனான். மாட்டின் மடியில் இருந்து நேரடியாக பால் குடித்தான். குளிரான ஆறுகளில் குதித்து உடல் நடுநடுங்க நீந்தி கரை தொட்டான். கூரான குச்சிகளைக் கொண்டு மீன்களை குத்திப் பிடித்தான்.

ஒவ்வொரு ஆபிரிக்க சிறுவனும் தெரிந்துகொண்டே ஆகவேண்டிய குச்சிச் சண்டையை கற்றுக்கொண்டான். தனக்கான பொம்மைகளை களிமண்.

மரப்பட்டை கள் கொண்டுதானே செய்து விளையாடினான். சில சமயங்களில் சிறுமிகளும் சில விளையாட்டுகளில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். ஒளிந்து விளையாடும் ஆட்டம், தொட்டுவிட்டு ஓடும் ஆட்டம். உனக்குப் பிடித்ததை நீயே தேர்ந்தெடுத்துக் கொள். (மண்டேலாவுக்கு அதிகம் பிடித்த விளையாட்டு இதுவாகும்) ஒரு சிறுமி தான் விரும்பும் சிறுவனை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷ்டம் வாய்ந்த சிறுவன், அந்த சிறுமியுடன் ஊர் சுற்றலாம். வீடுவரை சென்று வழியனுப்பி விட்டு வரலாம்.

(தொடரும்...)

# மத்திய கிழக்கின் அடிமைகள்



“மத்திய கிழக்கிலே நான் எனது கல்வி மற்றும் தொழில் என்பனவற்றுக்காக எனது 16 வருடங்களை அங்கு செலவிட்டபோது நமது பெண்கள் அங்கு படும் கஸ்டங்களை நேரில்கண்டு இதற்கு முடிவுகட்டவேண்டும் என்று அப்போதே ஆதங்கம் கொண்டவன்.

அங்கு பெண்கள் அனுபவிக்கும் துக்ககரமான வாழ்க்கை முறையை நான் வருடக்கணக்கில் கண்கூடாகக் கண்டு அதற்கு என்றோ ஒருநாள் முடிவு கட்டவேண்டும் என்று நான் கண்ட கனவு இப்பொழுது மெல்ல மெல்ல பலிக்கத் துவங்கி இருக்கின்றது. அதன் ஓர் படியாக இந்த ஆடைத் தொழிற்சாலை அமையும்.

சுயதொழில் வாய்ப்புக்காக சகல வசதிகளையும் செய்துகொடுப்பதற்கு நான் முதலீட்டாளர்களுடன் கலந்துபேசி ஏற்கெனவே 70 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்துள்ளேன்.”

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

சமூகத்திற்கு ஏதாவது நன்மை செய்து விடவேண்டும் என்று உயர்வான எண்ணங் கொண்டுள்ள எல்லோரும் வெளிநாடு செல்ல உத்தேசித்திருக்கும் பெண்களுக்கு விழிப்புணர்வை ஊட்டவேண்டும். நமது உள்ளூர்ப் பிரதேசங்களிலேயே இங்கிருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி அவற்றின் உச்சப் பயனைப் பெறுவதற்கு உதவவேண்டும்.

அவ்வாறு செய்தால் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக செல்வதைத் தடுக்கமுடிவதோடு அதனால் உண்டாகும் பாரதூரமான விளைவுகளையும் தவிர்த்துக் கொள்ள வழியேற்படும்.

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், அநாதரவானவர்கள் போன்றோரையும் அரவணைத்து அவர்களுக்கும் வாழ்க்கைக்கான வழிவகைகளைக் காட்டவேண்டும். அதன்மூலம் பெண்கள் வெளிநாடு சென்று அந்தரித்து போய் நிற்பதையும் அவர்களது குடும்பம் இங்கே சீரழிவதையும் உடன் தடுத்து நிறுத்தமுடியும்.

எல்லோரும் இணைந்து இந்த விடயத்தில் அக்கறைகொண்டு செயலாற்றினால் பெண்களுக்கான விழிப்புணர்வு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நீண்டதொரு காலம் எடுக்காது.

## பெண்களுக்கு கௌரவம்

குடும்பத்திற்கும் சமூகத்திற்குமாகப் பாடுபட்டுழைத்த பெண்களை கௌரவித்தல், ஆயுத வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்குதல், மத்திய கிழக்கு வீட்டுப் பணிப்பெண் அடிமை வேலை சாதகமா, பாதகமா என்ற பட்டிமன்றம், பெண்கள் விழிப்புணர்வு உரைகள் போன்றவற்றையும் விழிப்புணர்வுக்காக பட்டிதொட்டி எங்கும் நடாத்தவேண்டும்.

நமது எல்லாப் பிரதேசங்களிலும் இயற்கை வளங்கள் நிறைந்து காணப்படுகின்றன. கடல் வளம், வனவளம் என்று எதற்குமே குறைவில்லாமல் வாழ்வாதாரத்தைத் தேடிக்கொள்ள வழிவகைகள் இருக்கின்றன.

இந்த வளங்களை உள்ளூர் மக்கள், குறிப்பாகப் பாதிக்கப்பட்ட பெண்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதேவேளை மத்திய கிழக்கு வீட்டுப் பணிப்பெண் வேலைவாய்ப்பும் அதனால் கிடைத்த பொருளாதாரமும் பல ஏழைக் குடும்பத்தவர்களின் வாழ்வில் ஒளியேற்றியிருக்கின்றது என்பதையும் இங்கே குறிப்பிட்டாகவேண்டும்.

## நாட்டுக்காகக் கூடுதலான அந்நியச் செலாவணி

அதுபோக நமது நாட்டுக்காகக் கூடுதலான அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருவதும் இந்த மத்திய கிழக்கு வீட்டுப் பணிப்பெண் வேலை வாய்ப்புத்தான் என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது. சுமார் 6 இலட்சம் இலங்கைப் பணிப்பெண்கள் மத்திய கிழக்கில் பணிபுரிகின்றார்கள்.

ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பணிப்பெண்களில் 15 தொடக்கம் 20 சதவீதமானவர்கள் வருடாந்தம் தாம் பணிபுரியும் இடங்களில் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் காரணமாக இலங்கைக்குத் திரும்புகின்றார்கள்.



பாலியல் துஷ்பிரயோகம், ஊதியம் வழங்கப்படாமை, மனிதக் கடத்தல் மற்றும் பாலியல் தொழிலாளர்களாகப் பயன்படுத்தப்படுதல் போன்ற பல பிரச்சினைகள் இவற்றிலடங்கும். இதேவேளை வருடாந்தம் நூற்றுக் கணக்கான பெண்கள் சட்டபூர்வமற்ற கர்ப்பிணிகளாகவும் நாடு திரும்ப நேரிடுகின்றது.

## கிழக்கு மாகாண முதலமைச்சரின் கனவு

எந்தவொரு நாட்டுக்கும் கிழக்கு மாகாணத்திலிருந்து எந்தவொரு சமூகப் பெண்ணும் வீட்டுப் பணிப்பெண்ணாகச் செல்லக்கூடாது என்பதை நான் கிழக்கு மாகாண சபை உறுப்பினராக ஆனதிலிருந்து இன்றுவரை வலியுறுத்தி வருகின்றேன் என்று கூறுகின்றார் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட்.

ஏறாவூரில் 2000 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்பளிக்கக் கூடிய சர்வதேச தரத்திலான ஆடைத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி வைத்து அவர் உரையாற்றினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய முதலமைச்சர் நஸீர் அஹமட்.

இப்பொழுது முதலமைச்சராக இருக்கின்றபோது கூட நான் ஏற்கெனவே கூறிய மத்திய கிழக்குக்கு வீட்டுப் பணிப்பெண்களாக எந்தப் பெண்ணும் செல்லக் கூடாது என்பதை வலியுறுத்தித்தான் செயற்பட்டு வருகின்றேன்.

அதன் ஒருபடி முன்னேற்றம் தான் இப்பொழுது ஏறாவூரில் இடம் பெற்றுள்ள சர்வதேச தர்த்திலான ஆடைத் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு. இன்னும் 3 மாதகாலத்தில் இந்த ஆடைத் தொழிற்சாலை சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு இயங்கத் துவங்கும்.


மத்திய கிழக்கிலே நான் எனது கல்வி மற்றும் தொழில் என்பனவற்றுக்காக எனது 16 வருடங்களை அங்கு செலவிட்டபோது நமது பெண்கள் அங்கு படும் கஸ்டங்களை நேரில்கண்டு இதற்கு முடிவுகட்டவேண்டும் என்று அப்போதே ஆதங்கம் கொண்டவன்.

அங்கு பெண்கள் அனுபவிக்கும் துக்ககரமான வாழ்க்கை முறையை நான் வருடக்கணக்கில் கண்கூடாகக் கண்டு அதற்கு என்றோ ஒருநாள் முடிவு கட்டவேண்டும் என்று நான் கண்ட கனவு இப்பொழுது மெல்ல மெல்ல பலிக்கத் துவங்கி இருக்கின்றது. அதன் ஓர் படியாக இந்த ஆடைத் தொழிற்சாலை அமையும்.

சுயதொழில் வாய்ப்புக்காக சகல வசதிகளையும் செய்துகொடுப்பதற்கு நான் முதலீட்டாளர்களுடன் கலந்து பேசி ஏற்கெனவே 70 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்துள்ளேன். இந்த நிதிமூலம் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த 2000 குடும்பங்கள் குறிப்பாக பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் நன்மை பெறுவர். இதற்கான வேலைகள் ஏற்கெனவே தொடங்கியுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையிலே தலா 100 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட கைத்தொழில் பேட்டைகள் அமைக்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதே போன்று ஆயிரம் ஏக்கர் கொண்ட இயற்கை விவசாயப் பண்ணையும் அமைக்கப்படும் என்றார்.

(முற்றும்)



# இது ஒரு காதலின் கதை

**காதல் என்பது யாருக்கும் வரலாம். அது தப்பில்லை. யார் யாரைக் காதலிக்க வேண்டும் என்பது மிகமிக முக்கியமே. காதல் நிறைவேறினால் கொண்டாட்டம். இல்லை என்றால் அதுவே வாழ்வில் திண்டாட்டமாக அமைய இடமளிக்கக் கூடாது. பாத்திரமறிந்து பிச்சையிடு என்பதுபோல ஒருவரின் குணநடை, பண்பு, பழக்கவழக்கம், சிலரதுகுடும்பப் பின்னணி, என்பனவற்றுடன் இவரைக் காதல்செய்தால் கடைசிவரை கண்கலங்காது வைத்துப் பார்ப்பாரா? என்பதனையெல்லாம் முதலில்புரிந்துகொள்ளவேண்டும். இவ்விடயம் ஆண், பெண் இருசாராருக்கும் பொருந்தும்.**

மனித வாழ்வில் மிகப்பெரிய அத்தியாயமாக மிளிர்வது காதலாகும். காதல் இல்லாமல் வாழ்க்கை இல்லை என்று சொல்லுமளவுக்கு காதல் உயர்ந்து நிற்கின்றது. ஆனாலும் இந்தக் காதலின் விளைவினால் இன்றைய இளம் சந்ததியினரின் வாழ்க்கைப் பயம் தட்டுத் தடுமாறி தடம்புரண்டு நிற்கின்றதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

காதல் எனும் பெயரினால் களங்கப்பட்டுக் கையிலே குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டும் வயிற்றிலே கருவைச் சுமந்துகொண்டும் இவர்தான் என் குழந்தைக்கு அப்பா. இவரை என்னோடு சேர்த்துவையுங்கள் என்று பொலிசாரிடமும் நீதித்துறையிடமும் பெண்கள் கையேந்தி வாழ்வுப் பிச்சைகேட்டு நிற்கக் கூடியதுமான காலகட்டம் இப்போது உருவாகியுள்ளது.

இவ்வாறான ஒரு துயர்மான நிலைக்கு காதல் இருப்பதனால்தான் இக்கட்டுரைக்கு காதலின் கதை என்று பெயர் சூட்டியுள்ளேன். ஏனென்றால் காதல் எனும் கொடிய நோயின் விளைவினால் பாதிக்கப்படுவது பெண்கள்தான். அன்றைய காலகட்டத்துக் காதலுக்கும் இன்றைய காலகட்டத்துக் காதலுக்குமிடையிலே மிகப் பெரியதொரு இடைவெளி இருப்பதனைக் காணலாம். இன்றைய காலத்துக் காதல்களில் தொண்ணூறு வீதமானவை தொலைபேசிக் காதல்களே உள்ளன. தொலைபேசிப் பாவனை அதிகரிக்க, அதிகரிக்க, சீரழிவுகளும், சிறைப்பட்டுவரும் அவலம் நிறைந்த வாழ்க்கை நிலையும் அதிகரித்தே வருகின்றது.

தொலைபேசிமூலம்வரும் தவறிய அழைப்புக்கள்மூலம் ஆயிரமாயிரம் பெண்களின் வாழ்க்கையும் தவறிவரும் நிகழ்வுகளும் நடந்தேறிவருகின்றன.

ஆரம்ப காலங்களின்போது தூது விட்டு, விருப்பம்கேட்டு, கடிதம்மூலம் விருப்பங்களை பரிமாறி, காதல் உருவான கதைகள்தான் நடந்தேறி இருக்கின்றன. ஆனால் இன்று நிலைமை அப்படி இல்லை. தொலைபேசி இலக்கம் மட்டும் கிடைத்துவிட்டால்போதும், காதல் செய்ய எண்ணும் பெண்ணின் மனநிலை என்ன என்பதனை அறிந்துவிடலாம். அல்லது எஸ்.எம்.எஸ். மூலம் காதலை பரிமாற்றம் செய்யுலாம்.

இவ்வாறு உருவாகும் காதல்தான் மிகப்பெரிய அவலங்களைப் பெண்களுக்கு உண்டாக்கிவிடுகின்றது. இதனை இன்றைய இளம் பெண்கள் உணர்வதாகவோ, உணர்ந்து கொள்வதாகவோ தெரியவில்லை. பாதிப்பும், பொறுப்பும் வந்தபின் கண்ணீர்விட்டுக் கதறி அழுவதனால் நன்மை ஏதும் உண்டாகப் போவதில்லை, வருமுன் காப்பதே சிறந்தது என்றாலும் பின்பற்றி நடப்போர் கவனமுடன் இருக்கவேண்டும். என்று யார் சொன்னாலும் அது செவிடன் காதிலே ஊதின சங்காகவே இருக்கின்றது.

தொலைபேசிமூலம் காதல் மட்டுமல்ல, காமமும் வளர்கின்றது. எதைப் பார்க்கக் கூடாது என்று புத்தி சொல்கின்றோமோ அதையெல்லாம் தொலைபேசிமூலம் பார்க்க கூடிய வசதி வாய்ப்புக்கள் உள்ளது! பெண்களின் வாழ்வில் காதலுடன் காமமும் கலந்து கலவையால்தான் வாழ்க்கை நரகமாகின்றது!

இன்றைய இளம் பெண்களில் ஒரு பகுதியினர் நீதிமன்றுக்குப் போய் வயிற்றிலே இருக்கும் குழந்தைக்கு அப்பா உரிமை கேட்பதற்கு DNA எனப்படும் இரத்த மாதிரிப் பரிசோதனைமூலம் உறுதி செய்யவேண்டிய சூழ்நிலை வேகம் பெற்றுவருகின்றது. பெண்களுடன் பழகி அவர்களை அம்மா எனும் நிலைமைக்கு கொண்டு சென்றதும் இலகுவாக ஆண்கள் அவர்களைக் கழட்டிவிட்டு விடுகின்றனர். நம்பியிருந்த காதலன் நட்டாற்றிலே விட்டுச் சென்றபின்தான் பெண்கள் சிந்திக்கின்றனர். பிறப்புச் சான்றிதழில் அப்பா பெயர் போடுவதற்கு DNA பரிசோதனையை நாடுவது இதற்காகத்தான்.

இது இவ்வாறிருக்க, நீதிமன்ற அமர்வு, மற்றும் குடும்பநல நீதிமன்று நடவடிக்கைகளுக்கு தினசரி இளம் பெண்கள் வருகின்றனர். விவாகரத்து வழக்கு, மற்றும் ஜீவனாம்சம் வாங்கும் வழக்கு என்று வந்துபோகின்றனர். வாழவேண்டிய வயதிலே வாழ்க்கை தொலைந்துபோவதால் ஜீவனாம்சம் வாங்கி வாழவேண்டிய நிலை உருவாகி வருகின்றது.

அம்மி மிதிச்சு, அருந்ததி பார்த்து ஆயிரமாயிரம் பேர் முன்னால் கட்டப்படும் திருமணங்களில் ஒரு பகுதியும் மணவிலக்கு வேண்டி நீதிமன்றையே நாடிவருகின்றனர். இதற்கெல்லாம் விட்டுக்கொடுப்பு இல்லாமை, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நடவாமை, என்பனவற்றுடன் சீதனம், மற்றும் இன்னொரு ஆண்மீது அல்லது பெண்மீது உண்டாகும் இனம்புரியாத காதலாலும் குடும்பங்கள் சீரழிகின்றன, அல்லது சீரழிவுக்கு வருகின்றது!

எது எப்படி என்று சிந்தனை செய்தாலும் இந்த நிலைமைகளுக்கெல்லாம் காதல்தான் முக்கிய இடம்வகிக்கின்றது. வாழ்வுக்கும், தாம் விரும்பிய வாழ்க்கைத் துணையினை தேர்ந்தெடுக்கவும், உதவிய காதல் இன்று கலக்கமான வாழ்வுக்கும், காத்திருக்க வேண்டிய துயருக்கும் வழிகளை உண்டாக்கிவருகின்றது.

இது இவ்வாறிருக்கும்போது, காதல்களில் பல வகைகள் இருக்கின்றன. அவற்றினை அறிமுகப்படுத்தவேண்டிய அவசியம் இருப்பதை உணர்கின்றேன்.

போன் காதல், எஸ்.எம்.எஸ்.காதல், பாடசாலைக் காதல், பக்கத்து வீட்டுக் காதல், பல்கலைக்கழக காதல், பேருந்து காதல், அலுவலகக் காதல், பேஸ்புக் காதல், ரியூசன் காதல், வெளிநாட்டுக்காதல், பிரயாணக் காதல், கள்ளக்காதல், வயதுபோனவர்களின் காதல், வயதுக்கு வராதவர்களின் காதல்கள் என்று பலவகை காதல்கள் வலம்வந்த வண்ணமுள்ளன. காதலர்களின் வகை கூடக் கூட தொல்லைகளும், துயரங்களும்கூடிய வண்ணமேயுள்ளன. நிலைமை இவ்வாறு தொடர்ந்து செல்லுமாயின் பெரும் கலாசாரப் பிறழ்வுகளுக்கும், சீரழியும் வாழ்க்கைமுறைகவே எமது மாவட்டம் அமையப் போகின்றது.

இது இவ்வாறிருக்கும்போது, போர் தின்ற எச்சமாக எங்களின் இளம் சகோதரிகள் விதவைக் கோலத்துடன் வாழ்கின்றனர். இத்தகைய நிலையிலுள்ளவர்கள் வாழ்வதற்கும், குடும்பங்களை நகர்த்திச் செல்வதற்கும் மிகவும் சிரமங்களை எதிர்கொண்டு சமூகத்திலே எதிர்நீச்சல் போட்டு வாழவேண்டிய துர்ப்பாக்கியநிலையிலே உள்ளனர். இவர்களின் பரிதாபநிலையை உணர்ந்து உதவிசெய்பவர்களும் இல்லாமல் இல்லை. இருந்தும் இத்தகைய சோதரிகளும் வாழவேண்டிய வயசினை உடையவர்களாக இருப்பதனால் இவர்களும் ஒரு வகையான காதல் உணர்வுகளுக்கு உட்பட்டு சீரழிவுகளை சந்தித்தும் வருகின்றனர்.

மனிதாபிமானம் மரணமடைந்துவிட்டமையால் மலிவாக இருப்பது காதல் உணர்வு மட்டுமே. இதன்மூலம் இவர்களும் ஒரு வகையான காதல் வலையிலே மாட்டுப்பட்டு தவித்துக்கொண்டிருப்பவர்களும் இருக்கும் நிலையில் எம் மத்தியிலே இப்போது பிரபல்யமாகிவரும் விடயமாக பாடசாலைக் காதல், ரியூசன் காதல், பிரத்தியேக வகுப்புக் காதல் என்பன உள்ளது! பள்ளிசென்று படித்து பெற்றோரின் கனவை நனவாக்க வேண்டியவேளையில் பாழ்பட்டுப்போன காதலில் வீழ்ந்து படிப்பை பாழாக்கி, வாழ்வுதனை வீணாக்கி நடுத்தெருவிலே நின்று கண்ணீர்வடிக்கும் மாணவிகளின் துயர் தோய்ந்த சம்பவங்கள் தினசரி எங்கோ ஒரு மூலையிலே நடந்தேறியவண்ணமே உள்ளன.

ஆசிரியருக்கும் மாணவிக்கும் காதல், ரியூசன் வாத்திக்கும் மாணவிக்கும் காதல் மாணவனும், மாணவியும் காதல், என்றெல்லாம் காதலிப்பவர்கள் தொகை அதிகரித்துச் செல்கின்றது!

குடும்ப வறுமையைப் போக்குவதற்காக ஆடைத் தொழிற்சாலை போன்ற தொழில் மையங்களில் நிலைகொண்டு கடமையாற்றுவோர்கள் பெரும் துயர்களில் மூழ்கி வருகின்றனர். ஆண்களின் பசப்பு வார்த்தைகளில் மயங்கி கற்பினை இழந்து கண்ணீரைச் சுமந்துகொண்டு வாழ்ந்து வருகின்றனர். வறுமையின் கொடுமையை குறைக்க முயன்றவர்கள் கடைசியிலே அங்குமில்லை, இங்குமில்லை என்று இறுதியிலே உடலைவிற்று பணம்தேடும் விபசாரிகளாகவும் மாறிவருகின்றனர். இங்கேயும் இவர்களைப் பாழாக்கியது காதலே. முதலில் எந்த ஒரு ஆணும் பெண்ணும் நட்பு எனும் பண்புடன் பழகுகின்றனர். நட்பு நாளடைவிலே காதலாகி, காதல் கடைசியிலே கற்பினை சூறையாடுவதிலே முடியும். ஆகவே எது நடந்தாலும் முன்னுக்கு நிற்பது காதலே.

காதல் என்பது யாருக்கும் வரலாம். அது தப்பில்லை. யார் யாரைக் காதலிக்க வேண்டும் என்பது மிகமிக முக்கியமே. காதல் நிறைவேறினால் கொண்டாட்டம். இல்லை என்றால் அதுவே வாழ்வில் திண்டாட்டமாக அமைய இடமளிக்கக் கூடாது. "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்பதுபோல ஒருவரின் குணநடை, பண்பு, பழக்கவழக்கம், சிலரது குடும்பப் பின்னணி, என்பனவற்றுடன் இவரைக் காதல் செய்தால் கடைசிவரை கண்கலங்காது வைத்துப் பார்ப்பாரா? என்பதனையெல்லாம் முதலில் புரிந்துகொள்ளவேண்டும். இவ்விடயம் ஆண், பெண் இருசாராருக்கும் பொருந்தும்.

வாழ்க்கை என்பது ஆயிரம் காலத்துப் பயிர். இப்பயிரை சரியாக இனம்கண்டு வளர்த்தால்தான் பயன்பெறலாம். கண்டதும் காதல், முகமறியாதவர்களுடன் தொலைபேசிக் காதல், பேஸ்புக் காதல் என்பனவற்றிலே மிகவும் கவனமாக இருத்தல் அவசியம். வாழ்க்கை என்பது வாழ்வதற்கே. இடையில் அழுவதற்கல்ல. இதற்காக எல்லாக் காதலர்களையும் குறை சொல்லவேண்டும் என்பது என்னுடைய நோக்கமல்ல.

ஆனாலும் இன்றைய இளம் பெண்களின் வாழ்வு சீரழிகின்றது. இப்பெண்களின் வாழ்வு காதல் எனும் பெயரால் சீரழிக்கின்றது. பிழை என்பதே என் வாதம்.

நூற்றிலை பத்துத்தான் காதலில் ஜெயிக்குது. தொண்ணூறு ஜோடியும் கண்ணீரில் மிதக்குது என்பது உண்மையே!

காதல் எனும் புனிதமான உறவினை காமம் கலந்து விசமாக்காதீர்கள். இது இவ்வாறிருக்க, ஆண்கள் மட்டும்தான் பெண்களை ஏமாற்றிவருகின்றனர் என்று கூறமுடியாது! பெண்களும் ஆண்களை ஏமாற்றிவருகின்றனர்.

தாடி வைச்சு, தண்ணி அடிச்சு, தேவதாஸ் கோலம்பூண்டு நஞ்சிடம் தஞ்சமடைய பெண்களே காரணகர்த்தாக்களாக வலம்வருகின்றனர்.

எனவே காதல் உயிர் வாழவேண்டிய ஒன்று. இவள் அல்லது இவன் எனக்கு ஜோடியாகுமா? என்று பார்த்து அன்பு செய்யுங்கள், முடிவெடுத்தால் இறுதிவரை கலங்கக் கூடாது.

காதலின் பெயரினால் யாருமே ஏமாறாதீர்கள், ஏமாற்றாதீர்கள்.

இது வெறும் காதலின் கதை மட்டுமல்ல, ஏமாந்து போகின்றவர்களின் கண்ணீர்க்கதையும்கூட.

தொகுப்பு : வேணு கிருஸ்ணா



# நேபாளத்தின் பேரவலம்

**1934** இல் (சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்பு) நேபாளத்தில் இடம்பெற்ற பூகம்பத்தினால் 12 ஆயிரம் பேர் இறந்திருந்தனர். அச்சமயம் நேபாளத்தின் மன்னரினதும் பிரதமரினதும் புதல்விகளும் பலியாகியிருந்தனர். இப்போது மீண்டும் அந்த அனர்த்தம் 66 இலட்சம் மக்களை அவலநிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது. அத்துடன் இறந்தவர் தொகை 10000றக்கும் அதிகம் ஆகும்.

இயற்கை வளம், கலாசார பாரம்பரியத்தில் ஆசியாவில் சிறப்பான நாடுகளில் ஒன்றாக விளங்கும் நேபாளம் அதேசமயம் நிலநடுக்கத்தால் பாதிக்கப்படும் நலிந்தநிலையில் இருந்து வருகிறது. 2009 இல் ஐ.நா.வின் கீழ் உள்ள நேபாளத்தின் நெருக்கடிக் குறைப்பு கூட்டிணைப்பு அமைப்பின் கணிப்பீட்டின் பிரகாரம் காத்மண்டுவில் பாரிய பூகம்பம் ஏற்படும் எனவும் இலட்சக்கணக்கான உயிரிழப்புகளுடன் பல்லாயிரக்கணக்கானோர் காயமடைவார்களெனவும் 10 இலட்சம் வரையிலான மக்கள் இடம்பெயர்வார்களென்வும் கணிப்பிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்பு முகவரமைப்பு 2002 இல் ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தது. பூகம்ப அனர்த்தத்தின் கடுமையை குறைப்பது தொடர்பாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது, நேபாளத்தில் 8.0 மக்னிரியூட் அலகு பூமியதிர்வு ஏற்படக்கூடுமெனவும் காத்மண்டு பள்ளத்தாக்கில் மாத்திரம் 18 ஆயிரம் பேர் உயிரிழப்பரெனவும் அப்பிராந்தியத்தின் சனத்தொகையில் 3.8 சதவீதமானவர்கள் கடுமையாக காயமடைவார்களெனவும் 21 சதவீதமான கட்டிடங்கள் சேதமடையுமெனவும் எதிர்வுகூறப்பட்டு இருந்தது. நிலநடுக்க ஆய்வாளர்கள் விடுத்துவந்த எச்சரிக்கை தொடர்பாக உடனடிக் கவனம் செலுத்தப்பட்டு மாற்று ஏற்பாடுகளை முன்கூட்டியே மேற்கொண்டிருந்தால் உயிர், உடைமை அழிவுகளைத் தவிர்த்திருக்கலாமென கவலை தெரிவிக்கப்படுகிறது. உடனடியாக இல்லாவிடினும் மேலும் நில அதிர்வுகள் அப்பகுதியில் ஏற்படுமென விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

நேபாளம், இந்தியாவை தொடர்ந்து, பாகிஸ்தானில் 5.5 ரிச்டர் அளவுகொண்ட நிலஅதிர்வு நேபாளம், இந்தியாவை தொடர்ந்து பாகிஸ்தானிலும் நில அதிர்வு ஏற்பட்டு உள்ளது. பாகிஸ்தானில் உணரப்பட்ட நிலநடுக்கமானது 5.5 என ரிச்டர் அளவுகோலில் பதிவாகி உள்ளது.

26.04.2015 சனிக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் நேபாளம் உருக்குலைந்து கிடக்கிறது. இந்தியாவிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இங்கு மீட்பு பணிகள் நடைபெற்றுவருகிறது. இந்நிலையில் பாகிஸ்தானிலும் நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது. பாகிஸ்தானில் உணரப்பட்ட நிலநடுக்கமானது 5.5 என ரிச்டர் அளவுகோலில் பதிவாகி உள்ளது. தஜிகிஸ்தான் எல்லையை ஒட்டிய பகுதியில் உள்ள பாகிஸ்தானின் கைபர் பக்துன் கவாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 144 கிலோமீற்றர் ஆழத்தில் மையம்கொண்டு இருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் 7.7 ரிச்டர் அளவுகொண்ட நிலநடுக்கம் ஏற்பட்டதில் 376 பேர் உயிரிழந்தனர். கடந்த 2005ஆம் ஆண்டு பாகிஸ்தானில் ஏற்பட்ட 7.6 ரிச்டர் அளவுகொண்ட நிலநடுக்கத்தில் 73,000த்திற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர். 3.5 மில்லியன் மக்கள் வீடுகளை இழந்து தவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நிலநடுக்கம் என்பது பூமிக்கடியில் அழுத்தம் அதிகமாகி, அதனால் சக்தி வெளியேற்றப்பட்டு தளத்தட்டுகள் நகர்வதனால் இடம்பெறும் அதிர்வைக் குறிக்கும். இந்த அதிர்வு நிலநடுக்க மானியினால் (செசிஸ்மோமீட்டர்) ரிச்டர் (Richter scale) அளவைமூலம் அளக்கப்படுகிறது.

3 ரிச்டருக்கும் குறைவான நில நடுக்கங்களை உணர்வது கடினமாகும். அதேவேளை 7 ரிச்டருக்கும் கூடுதலான அதிர்வுகள் சேதத்தை ஏற்படுத்தும். பூமியின் மேற்பரப்பு (லித்தோஸ்பியர்) பெரும் பாளங்களாக அமைந்துள்ளன. இவை நகரும் பிளேட்டுகளாக இருக்கிறது. நிலப்பரப்பிலும், நீரின் அடியிலும் உள்ள இவற்றில் ஏழு பிளேட்டுகள் மிகப் பெரியதாகவும், குறைந்தது பன்னிரண்டு சிறிய பிளேட்டுகளும் உள்ளன. இந்த ஏழு பெரும் பிளேட்டுகளில் ஐந்து கண்டங்களும் பசிபிக் முதலிய சமுத்திரப் பகுதிகளும் அடக்கம். இந்த பிளேட்டுகள் சுமார் 80 கி.மீற்றர்வரை தடிப்புக்கொண்டதாக இருக்கிறது. இதன் அடியில் பாறைகள் கொதிக்கும் குழம்பாக இருப்பதாலும், பூமியின் சுழற்சிவேகத்தில் இந்தப் பாறைக் குழம்பு நகர்வதாலும், மேலே இருக்கும் பிளேட்டுகள் ஒன்றுடன் ஒன்று உராய்வதுடன் நகர்ந்தும் செல்கிறது.

இந்தப் பிளேட்டுகள் ஒரு வருடத்திற்கு ஒரு செ.மீட்டர் முதல் சுமார் 13 செ.மீட்டர் வரை நகர்கிறது. இது நமது உலக வேகத்திற்கு மிக நுண்ணியதாக இருந்தாலும் இந்த பிளேட்களின் லேசான உராய்வும்கூட பெரும் பூகம்பம் ஏற்படுத்தக் கூடியவை. ஒரு நிலநடுக்கம் நிலச்சரிவுகளையும் சிலசமயம் எரிமலை செயற்பாட்டையும் அதிகரிக்க செய்யும். ஒரு நிலநடுக்கத்தின் அளவுக்கு வரையறை எதுவுமில்லை என்றாலும் வரலாற்றில் பதிவான மிகப்பெரிய நிலநடுக்கங்கள் 9.0 ரிச்டருக்கும் கூடுதலானவை பெரும் பாதிப்பை ஏற்[illegible]ன ஆகும். இத்தகைய நில[illegible]மானது அண்மையில் 2011ஆம் ஆண்டு செண்டாய், ஜப்பானில் நிகழ்ந்தது. பதிவுசெய்யப்பட்ட நிலநடுக்கங்களில் ஜப்பானில் [illegible]திவான வலுவான நிலநடுக்கம் இது[illegible] ஆழமற்ற நிலநடுக்கங்களே அதிக [illegible]பத்தை விளைவிக்கக்கூடியவை ஆகும்.

ஐரோப்பா[illegible]வும் ஆசியாவும் இணைந்த நிலப்பரப்பாக [illegible]ணப்பட்டாலும் இரண்டும் தனித்தனி பிளேட்டுகளில் அமைந்துள்ளன. இந்தியா உள்ளிட்ட தெற்காசியப் பகுதி, ஆசிய பிளேட்டில் இல்லாமல் தனி பிளேட்டாக அமைந்துள்ளது. இதனாலேயே இது இந்தியத் துணைக் கண்டம் என்றழைக்கப்படுகிறது.


மேலும் இந்திய பிளேட், ஆசிய பிளேட் ஆகிய இரண்டும் வடக்கு நோக்கி நகர்கின்றன. இதில் ஆசிய பிளேட்டைவிட இந்திய பிளேட் வேகமாக நகர்வதால், இந்திய பிளேட் ஆசிய பிளேட்டுடன் மோதி அந்த அழுத்தத்தில் உருவானதே இமயமலைப் பிரதேசம். இமயமலை இன்னும் வளர்ந்து கொண்டிருப்பதன் காரணமும் இதுதான். இரு பிளேட்களின் அழுத்தத்தால் இமய[illegible] மலைப் பகுதி வளரும்பொழுது [illegible]ராயும் பாறைகள் அசைந்துகொ[illegible]. இப்பகுதி நிலநடுக்கம் ஏற்ப[illegible] அதிக வாய்ப்புள்ள பகுதியாக கருதப்படுகிறது. பல கோடி வருடங்களுக்கு முன்பு ஆசியாவும், ஐரோப்பாவும் இணைந்த இருந்தது. இது யூரேசியா என்று அறிவியலாளர்களால் கூறப்படுகிறது. ஒரு பெரிய பூகம்பத்தால்தான் ஆசியாவும் ஐரோப்பாவும் தனித்தனி கண்டங்களாக பிரிந்ததாக கூறப்படுகிறது. எனினும் இதற்கான தெளிவான ஆதாரங்கள் இல்லை.

## நிலநடுக்க வகைகள்

நிலநடுக்கம் மூன்று வகையான புவித்தட்டு அசைவுகளால் ஏற்படும். சாதாரண முறை, மேற்தள்ளல் முறை மற்றும் சமாந்தர அசைவு என்பனவே அவையாகும். சாதாரண மற்றும் மேற்தள்ளல் முறைகளில் ஒரு புவித்தட்டு மேல் நோக்கியும் மற்றவை கீழ்நோக்கியும் அசையும். சமாந்தர அசைவில் இரண்டு புவித்தட்டுக்கள் சமாந்தரமாக உராய்வுடன் செல்லும். அனைத்து புவித்தட்டு அசைவுகளும் புவியின் மேலோட்டுக்ளுக்குக் கீழுள்ள உருகிய பாறைக் குழம்பின் அசைவுகளாலேயாகும். புதிதாக புவி மேலோடு உருவாகும் இடங்களான புவித்தட்டு விலகல் பிரதேசங்களில் சாதாரண முறை அசைவு இடம்பெறும். இம்முறையில் ஏற்படும் நிலநடுக்கம் பொதுவாக 7 ரிச்டரைத் தாண்டாது. மேலெழும்பல் அசைவு முறையால் ஏற்படும் நிலநடுக்கங்களே அதிக ரிச்டர் அளவோடு அதிக அழிவையும் ஏற்படுத்துவனவாகும். புவித்தட்டு அசைவுகளைத் தவிர பாறைகளின் அசைவுகளால் சிற்சிறு நிலநடுக்கங்கள் ஏற்படும்.

ஒவ்வொரு வருடமும் 5,00,000 நிலநடுக்கங்கள் புவியில் ஏற்படுகின்றன. இவற்றில் 1,00,000 நிலநடுக்கங்கள் மக்களால் உணரப்படுகின்றன. புவியின் அனைத்துப் பகுதிகளிலும் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. எனினும் பேரழிவை ஏற்படுத்தும் நிலநடுக்கங்கள் அரிதாகவே ஏற்படுகின்றன. உலகின் 90 சதவிகிதத்துக்கும் அதிகமான பூகம்பங்கள் பசிபிக் சமுத்திரத்தை அண்டிய பகுதிகளிலேயே உருவாகின்றன. நிலநடுக்கத்தின் வீரியத்தை நிலநடுக்கப் பதிவுக்கருவி மூலம் அளவிடலாம். இதில் ரிச்டர் அளவீடு பயன்படும். 2010ல் ஏற்பட்ட ஹெய்ட்டி பூகம்பத்தால் அதிக கட்டடங்கள் அழிவடைந்தன. இதுவே நிலநடுக்கத்தின் பிரதான விளைவாகும். இதனால் கட்டடங்களும் ஏனைய பல செயற்கையான அமைப்புகளும் அழிவுக்குள்ளாகும்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)






இப்பகுதிக்கு சிறுவர்கள், மானவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

# கதை சொல்ல வந்த பறவை

வனா வானத்தையே பாத்துக்கிட்டு இருந்தா. மேகங்கள் கொஞ்சம் கொஞ்சமா சேர ஆரம்பிச்சது. எல்லாம் சேர்ந்து பெரிய மேகமா ஆயிடுச்சு. கண்ண எடுக்காம பாத்துக்கிட்டே இருந்தா. "மேகத்திலிருந்து இப்ப ஒரு பறவை பறந்து வந்தா.... எவ்வளவு நல்லா இருக்கும்?"

புதுசா ஒரு பறவையைப் பார்க்க வனா ஆசைப்பட்டா. வனாதான் கதசாமிக்கு ரொம்ப நெருக்கமாச்சே. அவ நெனைச்ச மாதிரியே மேகத்திலிருந்து ஒரு பெரிய பறவை பறந்து வந்துச்சு.

அது ரொம்ப பெருசா இருந்துச்சு. அதோ எதிரில தெரியுதே அந்த மலையவிடப் பெருசு. அவ்வளவு பெரிய பறவை வானத்தில பறக்கறத பாத்தா ஆச்சரியமா இருக்கும் இல்லையா? மலை அளவுக்கு வானத்தில பறந்தா சூரிய வெளிச்சம் வருமா?, வெளிச்சமாத்தான் இருந்துச்சு. எப்படி? பறவையே வெளிச்சம்தான்.

சரி. அது என்ன பறவை? அது நாம தினமும் பாக்குற பறவை அல்ல. வேற பறவை. இந்தப் பறவைக்கு என்ன பேரு? கதைப் பறவை. சரி. இந்தப் பறவை எங்கிருந்து வருது. கதசாமி கோயில்ல இருந்து வருது.

ஓ... கத தர சாமியோட கோயிலா?!

கோயிலுக்குப் பக்கத்துல ஒரு மரம் இருக்கு. நாம இருக்கிற உலகத்தைவிட மிகவும் பெரிசு. அது என்ன மரம்? கதை மரம். நாம கேட்ட கேட்கிற, கேட்கப்போகிற எல்லாக் கதைகளும் அந்த மரத்துல இருக்கு.

கதை மரத்துல ஒரு பூ பூத்தா ஒரு பிரபஞ்சமே உருவாகும். பிரபஞ்சம்னா? கோடி கோடி சூரியன்கள் சேர்ந்தது. கோடிப் பூக்கள் இப்ப மரத்தில இருக்கு. ஒரு பூவில உருவான பிரபஞ்சத்துலதான் நாம இருக்கோம். கதை மரம் ஏன் உலகத்தைவிடப் பெரிசா இருக்கு? இப்ப விடை கிடைச்சாச்சா?

வனா பாக்கற கதைப் பறவை கதை மரத்துல இருந்துதான் வருது. வனா பாப்பாவ பாக்கறதுக்காக அந்தப் பறவை இப்ப வருது. வனா ரொம்ப நல்ல பாப்பா. நீங்களும் நல்ல பாப்பாவா இருந்தா உங்களைத் தேடியும் கதைப் பறவை வரும்.



பறவையைப் பார்த்ததும் வனா வீட்டுக்குள் ஓடினா. பழத்தட்டிலிருந்த பெரிய கொய்யாப் பழத்தை எடுத்து வந்தா. அதை வைச்சுக்கிட்டுக் காத்திருந்தா. பறவை வனாவை நோக்கிக் கீழே இறங்கிச்சு.

மலை மாதிரி இருக்கிற பறவைக்கு வயிறு எவ்வளவு பெருசா இருக்கும். இந்தச் சின்னக் கொய்யா அதுக்கு எப்படிப் போதும். மனசு வருந்திக், கதசாமிய வேண்டினா. கதசாமியால எல்லாம் முடியும்தானே? பறவை அருகில் வர வரத் தட்டிலிருந்த கொய்யா பெருசாகிக்கிட்டே வந்துச்சு. வனா இருந்த வீடும் பெருசாச்சு. இப்ப வீடு எவ்வளவு பெருசு? ஊரு அளவுக்குப் பெருசு.

யானை அளவுக்குப் பழம் பெருசாச்சு. பறவைக்கு ரொம்ப சந்தோஷம். அதனால வனாவையும் அதுக்குப் பிடிச்சிப்போச்சு. கீழ இறங்கி பழத்த ருசிச்சிச் சாப்பிட்டுச்சு. முதல்முறையா வயிறுமுட்ட சாப்பிட்ட சந்தோஷம்.

"உனக்கு என்ன வேணும். என்னால எதுவும் தர முடியும்... கேளு"ன்னு பறவை சொல்லிச்சு.

"எனக்குக் கதை பிடிக்கும். தினம் வந்து ஒரு கதை சொல்லுவியா?" என்றாள் வனா.

"அப்படியே செய்கிறேன்" என்றது பறவை. வனாவைத் தேடிப் பறவை தினமும் வந்தது. ஒவ்வொரு நாளும் வனா அதற்குப் பழம் தந்தா. பழத்தைத் தின்னு முடிச்சதும் பறவை ஒரு கதையைச் சொல்லும்.

வனாவிடம் கதைப் பறவை சொன்ன கதையைக் கேட்க உங்களுக்கு ஆசையா? அதற்கு இன்னும் ஒரு வாரம் காத்திருங்களேன்.

# புத்தகம்



சின்னச் சின்னப் புத்தகம்
சிறுவர் படிக்கும் புத்தகம்
அன்னை போல எந்த நாளும்
அறிவை ஊட்டும் புத்தகம்!

படங்கள் நிறை த புத்தகம்
பாடல் நிறைந்த புத்தகம்
கடலைப் போல என்றும் வற்றாக்
கருத்தை ஊட்டும் புத்தகம்!

கதைகள் சொல்லும் புத்தகம்
கண்ணைத் திறக்கும் புத்தகம்
மண்ணை விண்ணை விளங்கி நல்ல
வாழ்வளிக்கும் புத்தகம்!

பாட்டி போலப் புத்தகம்,
பச்சைச் சிரிப்பைக் காட்டியே
ஏட்டு வாயால் நித்தம் நித்தம்
இனிக்க இனிக்கச் சொல்லுமே!


# எதிலிருந்து வருகிறது மண்வாசனை?

முதல் மழைத் துளி மண்ணில்பட்டதும், சட்டென்று புறப்பட்டு வந்து நமது நாசியைத் துளைக்கும் அந்த இனிமையான நறுமணம் எப்படி வருகிறது, எங்கேயிருந்து வருகிறது?

அதை "மண்வாசனை" என்று சொல்லிவிடுகிறோம். ஆனால், மண்ணிலிருந்தா வருகிறது அந்த வாசனை? இல்லை.

## பக்ரீரிய வித்து

மண்வாசனைக்கு ஆங்கிலத்தில் நவசஉைாழச என்று பெயர். மண் மீது மழைத்துளிகள் பட்டவுடன் வேதிவினை நடப்பதால் மண்வாசனை தோன்றுகிறது.



மண்ணில் வாழும் அக்டினோமைசீஸ் அல்லது ஸ்டிரெப்டோமைசீஸ் என்ற பக்ரீரியாக்கள், வெளியிடும் வேதிப்பொருட்களே இனிமையான மண்வாசனை.

இந்தப் பக்டீரியா வகைகள் உலகம் முழுவதும் மண்ணில் இழைகளாக வாழ்கின்றன. மண் காய்ந்து போகும்போது, இவை தங்கள் வித்துகளை வெளியிடுகின்றன. மழை வரும்போது மழைத்துளிகள் மண்மீது விழும் வேகத்தில் இந்த வித்துகள் காற்றை நோக்கி மேலே வீசப்படுகின்றன. அதில் வெளிப்படும் வேதிப்பொருள் டைமெதில் 9 டிகலீ்ால். நாம் சுவாசிக்காத வித்துகள் மீண்டும் ஈரமான மண்ணில் விழுந்து பக்ரீரிய இழைகளாக மாறிவிடுகின்றன.

## ஓசோனும் காரணம்


அதேபோல மழை வருவதற்கு முன்பாகவும் ஒரு வாசனை வரும். அது ஓசோனின் வாசனை. இடி மின்னலுடன் மழை வரும்போது ஏற்படும் மின்சாரம் ஒட்சிசன், நைட்ரஜன் மூலக்கூறுகளைப் பிளக்கும். அவை இணைந்து நைட்ரிக் ஒக்சைட்டாக மாறுகின்றன. இது வளிமண்டலத்தில் உள்ள மற்ற வேதிப்பொருட்களுடன் இணைந்து ஓசோனை உருவாக்குகிறது.

ஒரு பகுதியை நோக்கிவரும் புயல் மேகங்கள் இந்த ஓசோனைச் சுமந்துவருகின்றன. அது நமது நாசியை அடைவதால் மழைவருவதை முன்கூட்டியே உணரமுடிகிறது.

பண்டைக்காலத்தில் மழைதான் உலகுக்கு வளம்தரும் ஒரே விஷயமாக இருந்தது. அதனால், நமது மூதாதையர்களுக்கு மழை ரொம்ப பிடித்த விஷயமாக இருந்தது. அது மரபணுக்கள் வழியாகக் கடத்தப்பட்டு, நமக்கும் மண்வாசனை பிடித்தமான விஷயமாக இருக்கிறது.

## தலையைப் பொருத்துங்கள்

ஒட்டகச்சிவிங்கியின் தலையையும் உடலையும் பொருத்துங்கள் பார்ப்போம்.







**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 18.05.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1095**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 1093

**அ.நவீன், பூலோலி தெற்கு, புலோலி.**

பரிசுக்குரியவர்: 1093

பாராட்டுக்குரியவர்கள்

01. மு.சங்கீதா, புன்னாலைக்கட்டுவன்.
02. து.மாளவிதா, பீரிஸ் மாவத்த, களுபோவில.
03. எம்.மதீனா, பரந்தன், கிளிநொச்சி.
04. எம்.தமயந்தி, பூவரசங்குளம், வவுனியா.
05. என்.சாருஜன், பிரதான வீதி, நுவரெலியா.
06. க.பிரிந்தன், மருதங்கேணி.
07. ந.அஷ்மிகா, கடற்கரை வீதி, திருகோணமலை.
08. ந.காவேரி, பசல்ஸ் லேன், வெள்ளவத்தை

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 41

நகுறு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு உணவு சரியாகக் கிடைக்காது. கிடைத்தாலும் அது தரமான உணவாக இருக்காது. அந்த முகாமின் காவலர்களும் தம்பங்குக்கு இலஞ்சம் வாங்கிச் சம்பாதித்தனர்.



# இடி அமீன்

முன்னாள் நீதியரசரைக் கொண்டு சென்றது போல மாடிப்படிகளில் அவர்கள் இருவரையும் தரதரவென்று இழுத்துச் சென்றனர்.

இழுத்துச் செல்லப்படும்போது கடுமயாகத் தாக்கினார்கள். வந்தவர்கள் அமீனின் ஆட்கள் என்பது தெரிந்ததால் பயத்தில் யாரும் குறுக்கிடவில்லை.

வெளியே தயாராக நின்ற வேனில் இருவரையும் தூக்கப் போட்டுக் கொண்டு பறந்து விட்டனர்

நகுரு என்னும் பகுதியில் உள்ள முகாமுக்கு இருவரையும் கொண்டு சென்றனர்.

முகாமை அடைய முன்னரே செயலாளர் திடமுலாவின் உயிர் பிரிந்துவிட்டது. அடிதாங்காமல் இறந்துபோனார்.

அன்றைய மாலைச் செய்தியில் அவர்களது கைது பற்றி அறிவிக்கப்பட்டது.

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபன தலைவரும் செயலாளரும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக கைது செய்யப்பட்டனர். செயலாளர் உடல் நலமின்றி இருந்தார். அத னால் கைதாகிய சில மணி நேரததில்அவர் இறந்து விட்டார்.

செய்தியைக் கேட்கும்போது அது அப்பழுக்கில்லாத பொய் என்பதை அனைவருமே புரிந்துகொண்டார்கள்.

கணவனப் பறிகொடுத்து புலம்பிக்கொண்டிருந்தார் திருமதி திடமுலாலா.

அவரிடம் பொதுப் பாதுகாப்பு பிரி அதிகாரிகள் சென்றனர்.

அவர்கள் குடியிருக்கும் வீட்டை அரசிடம் ஒப்படைப்பதாகத் தயாரிக்கப்பட்ட பத்திரத்தில் கையொப்பம் போடுமாறு கோரினார்கள்.

இது இவரது சொந்த வீடு. இப்போது அவரும் இல்லை. ஒப்படைத்துவிட்டு நான் எங்கு போவது? தயவுசெய்து கருணை காட்டுங்கள் என்று மன்றாடினாள் மனைவி.

கணவன் போன இடத்திற்கு உங்கள் மூன்று பிள்ளைகளும் போகத்தான் வேண்டுமென்றால் நீங்கள் கையெழுத்திடாத பத்திரத்துடன் நாங்கள் போகி றோம் என்றனர்.

அந்த மிரட்டலில் பயந்து போன மனைவி அவர்கள் காட்டிய இடங்களில் கையொப்பம் வைத்தார். காப்புறுதிக் கூட்டுத்தாபன தலைவருக்கும் கொடூரமான அனுபவங்கள் காத்திருந்தன

காப்புறுதிக் கூட்டுத்தாபனச் செயலாளரான திடமுலாவின் உடலைப் பெறுவதற்கு உறவினர்கள் எடுத்த முயற்சிகள் பலிக்கவில்லை.

உடலை பெற்றுத் தருவதாகக் கூறி பணம் வாங்கிய குழுவும் அவர்களை ஏமாற்றிவிட்டது.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தலைவர் வெக்கிரோ தொடர்ந்தும் நகுறு முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருந்தார்.

சித்திரவதைக்கும், சீரழிவுகளுக்கும் பெயர்போன முகாம் இது. இந்த முகாமுக்குப் பொறுப்பாக இருந்தவன் அலிரொவெல்லி.

இடி அமீனுக்கு முகஸ்துதி செய்வதிலும், இடி அமீனுக்கு பிடித்தமாக நடந்துகொள்வதிலும் கெட்டிக்காரன்.

நகுறு முகாமுக்கு தம் பிள்ளைகளையோ, உறவினர்களையே கொண்டு செல்லப்பட்டனர் என்று அறிந்தாலே அவர்களது குடும்பத்தினர் கதறத் தொடங்கி விடுவார்கள்.

அந்தப் பயத்தை வைத்தே பணம் சம்பாதிக்க ஆரம்பித்தான் அலிரொவெல்லி.

கண்ணில் பட்டவர்களை யெல்லாம் கைது செய்து முகாமுக் குக் கொண்டு வருவான். பின்னர் பேரம் பேசும் குழுக்கள் ஊடாக பணம் வாங்கிக் கொண்டு விடுதலை செய்துவிடுவான்.

நகுறு முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருப்பர்களுக்கு உணவு சரி யாகக் கிடைக்காது. கிடைத்தாலும் அது தரமான உணவாக இருக்காது.

அந்த முகாமின் கவாலர்களும் தம்பங்குக்கு இலஞ்சம் வாங்கிச் சம்பாதித்தனர். முகாமில் உள்ளோரின் வீடுகளுக்கு கடிதங்களைக் கொண்டு சென்று ஒப்படைப்பது போன்ற காரியங்களுக்காகப் பணம் வாங்கினார்கள்.

தமக்கு அடிக்காதிருப்பதற்காகவும் கைதிகள் சிலர் அவர்களுக்கு இலஞ்சம் கொடுத்தனர். காப்புறுதிக் கூட்டுத்தாபன தலைவரான வெக்கிரோவுக்கு நகுறு முகாமில் முதலில் கொடுக்கப்பட்ட வேலை ஆடுகளை மேய்ப்பது. அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலையைப் பற்றி இடி அமீனிடம் அலி கூறிய போது அவன் குதூகலித்துச் சிரித்தான். சரியான வேலை தான் கொடுத்திருக்கிறாய். அடுத்ததாக என்ன வேலை கொடுக்கப்போகிறாய்!

மலசல கூடங்களை வெறும் கைகளால் கழுவிச் சுத்தப்படுத்தும் வேலை என்றதும் அமீன் தலையை பலமாக ஆட்டிச் சிரித்தான்.

அவன் ஒரு படித்த முட்டாள். பிழைக்கத் தெரியாதவன். அவனை உடனே கொன்றுவிட்டால் நினைத்து வேதனைப்பட சந்தர்ப்பம் இருக்காது. அப்படியே அவனை நரகத்தில் தோய்த்து எடு என்று கூறினான் அமீன்.

முகாமில் வெக்கிரோ நரகத்தில் உழன்றார். அவரால் சகிக்க முடியவில்லை. இதனை விட தன்னைக் கொன்றிருக்கலாம் என்று நினைத்தார். ஒருவார காலம் அவரை நரகத்தில் உழலச் செய்த பின்னர் அலி அழைத்தான். எவ்வித சுற்றிவளைப்பும் இல்லாமல் நேரடியாகவே பேரம் பேசினான். இந்த நரகத்தில் இருந்து விடுதலையாக ஆசையாக இருக்கிறதா!

வெக்கிரோ நம்பமுடியாமல் அவனைப்பார்த்தான்.நேற்று கைகளால் மலம் அள்ளினீரே எப்படியிருந்தது! அவன் கேட்டபோது அவருக்கு குமட்டிக்கொண்டு வந்தது.

அவன் விடவில்லை. இதை விட கடுமையான வேலைகளும் இங்கு இருக்கின்றன. ஏதோ உம்மீது ஒரு அனுதாபத்தில் அந்த வேலைகளைக் கொடுக்கவேண்டாம் என்று கூறி இருக்கின்றேன் என்று இளிப்புக் காட்டினான்.

தன் மீது அவன் அனுதாபம் காட்டுவதாகக் கூறியது வெக்கிரோவுக்கு எரிச்சலாக இருந்தது. அவர் கையில் மட்டும் ஒரு துப்பாக்கி இருந்தால் அவனை சல்லடை போட்டுவிடுவார். இந்த நரகத்தில் விடுதலையாக வேண்டுமானால் அதற்கு ஒரு விலை இருக்கிறது.

(தொடரும்..)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 622

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | | 30 |
| 31 | | 33 | 34 | | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **02.10.2012** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 622
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 486- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மா | 2 ர் | 3 க் | 4 சி | 5 ய | 6 ம் |
| 7 வ | 8 க | 9 க | 10 ரு | 11 ம் | |
| 13 டி | 14 பி | 15 ல் | | | 18 பு |
| 19 வே | 20 ல | 21 நி | 22 ளி | 23 ள் | 24 வெ |
| 25 ம் | | | 28 ச | 29 வ | 30 ளு |
| 31 பு | 32 னு | 33 வி | 34 ப | 35 அ | 36 ப் |

**இடமிருந்து வலம்**

01.குழந்தைகளுக்கு இருக்கும் நுண்ணறிவுத் திறன் வரும் வழிகளில் ஒன்று.
07.இராகம். கீதம் (குழம்பியுள்ளது)
11நரைத்த முடியுடன் நடத்தாலும் அவர் அவரேதான்.
15.ஒரு உணவு வகை.
21.நிலை. (குழம்பியுள்ளது)
25.நீக்குதல்; சுதந்திரம் (குழம்பியுள்ளது)
31.துவ்வென் னேவல். ஓர் இகழ்ச்சிக் குறிப்பு
33.அம்மாவின் உதிரம்... (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01.இருபுற விட்டுக்கொடுப்பினால் ஏற்படும் இணக்கப்பாடு.
02.பத்திரகாளி அரச முத்திரையிடுதல். (குழம்பியுள்ளது)
05.அன்புடன் பேசல். (குழம்பியுள்ளது)
06. "அழகு மலராட அபிநயங்கள் கூட சிலம்பொலியும்.... கேள்." (திரும்பியுள்ளது)
16.கபடமிலான். (குழம்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல.486 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.செல்வராணி, வாகரை, மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
02. து.சர்மிலி, கச்சாய் றோட், கொடிகாமம்.
03. ஜே.அன்ரனி, குருநகர், யாழ்ப்பாணம்.
04. எம்.ஈஸ்வரி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
05. சு.பவனீதா, தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.
06. து.கிருஷிகா, மட்டுவில் தெற்கு, காவகச்சேரி.
07. ம.நந்திதா, கைதடி மேற்கு, கைதடி.
08. எம்.எவ்.இஹாரா, முஸ்லிம் தெரு, யாழ்ப்பாணம்.
09. ம.சவிதா, உப்பு, புத்தளம்.
10. எல்.நிஷானி, அட்டாளைச்சேனை.

## கத்ரீனா, ரன்பிர் விரைவில் திருமணம்?

பொலிவூட் டால் கத்ரீனாவுக்கும், ரன்பிருக்கும் இடையில் காதல், எனவும் விரைவில் திருமணம் எனவும் பொலிவூட் வட்டாரங்களில் செய்திகள் பரவிவருகின்றன. இதுகுறித்து ரன்பிர் கூறுகையில், நான் காதலிப்பது உண்மைதான். நாங்கள் இருவரும் திருமணம் செய்யவிருப்பது 6 வருடங்களுக்கு முன்பே உறுதியாகிவிட்டது. ஆனால் மீடியா இதை கிசுகிசுவாக பரப்புவதில் எனக்கு உடன்பாடில்லை. எனினும் திருமணம் குறித்து இவ்வளவு விரைவில் அறிவிப்பதும் தகுந்த விஷயம் அல்ல. கண்டிப்பாக திருமண திகதியை அறிவிப்போம். அதேசமயம் நீங்களாக திகதி-களை முடிவுசெய்து பரப்பவேண்டாம் என கூறியுள்ளார்.

பெண் யார் என்று ரன்பிர் சொல்லவில்லை என்றாலும் சர்வதேச ட்ரிப் ஒன்றில் நீச்சல் உடையில் ரன்பிர், மற்றும் கத்ரீனாவின் புகைப்படங்கள் வெளியானதை மறுக்க முடியாது.







## த்ரிஷாவுக்கும் வருண்மணியக்கும் கருத்து வேறுபாடு

நடிகை த்ரிஷா மற்றும் தயாரிப்பாளர் வருண்மணியன் இருவருக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் முன்னணி நடிகையாக வலம்வருபவர் த்ரிஷா. இவரும் தெலுங்கில் முன்னணி நாயகனான ரணாவும் காதலித்து வந்தார்கள். இருவருமே ஒன்றாக பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பது என இருந்து வந்தநிலையில், கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து த்ரிஷாவும், தொழிலதிபர் வருண் மணியனுக்கும் காதல் மலர்ந்தது. இருவரது காதலுக்கு பெற்றோர் சம்மதம் தெரிவித்தார்கள். ஜனவரி 23ஆம் திகதி இருவருக்கும் பிரமாண்டமாக வருண்மணியன் இல்லத்தில் வைத்து திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சென்னையில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் தனது திரையுலக நண்பர்களுக்கு விருந்தளித்தார் த்ரிஷா.

இந்நிலையில், சில நாட்களாக த்ரிஷா - வருண்மணியன் இருவருக்குமே கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துவிட்டதாக தகவல்கள் வெளியாகின. இது குறித்து த்ரிஷாவுக்கு நெருக்கமான நண்பர்களிடம் விசாரித்தபோது, "த்ரிஷா, வருண்மணியன் இருவருக்குமே கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருப்பது உண்மைதான். வருண்மணியன் தங்கையின் திருமணத்துக்குக்கூட த்ரிஷா செல்லவில்லை. வருண்மணியன் தனக்கு அணிவித்த நிச்சயதார்த்த மோதிரத்தைக்கூட த்ரிஷா கழட்டிவிட்டார். தொடர்ச்சியாக படங்களில் நடிக்க முடிவு செய்திருக்கிறார். சிம்பு - செல்வராகவன் இணையும் படம், கமலுக்கு ஜோடியாக ஒரு படம் என தொடர்ச்சியாக ஒப்பந்தமாகி இருக்கிறார்" என்றார்கள்.



## ஜூனில் வெளியாகி...

உத்தம வில்லன் படத்தைத் தொடர்ந்து...
...யிட படக்குழு தீர்மானித்திருக்கிறது. மோக...
ஜோசப் இயக்கத்தில் வெளியான மலைய...
வசூலிலும் பெரும் வரவேற்பைப் பெற்றது...
என அனைத்து மொழி ரீமேக் உரிமையை...
தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள...
கௌதமி, சார்லி, கலாபவன் மணி உள்...
இருக்கிறார். . மே 1ஆம் திகதி உத்தம...
படத்தை வெளியிட தயாரிப்பு நிறுவனம்...
வில்லன், ஜூ... ...னில் ப...
கமலின் படங்கள் ... அடுத்...

... வை... அணி... வைத்து... ளாமலே... விருப்பம். இதி... குறிப்பிட்டிருந்தா... எதிராகவும்... இதற்கு... ரனா... பள...

## ஓ காதல் கண்மணி

### திரை விமர்சனம்

...றைய வாழ்வு தரும் பார்வை, சுதந்திர உணர்வு ஆகியவற்றால் உறவின் வரையறைகளை மாற்றத் துடிக்கிறது இளைஞர்களின் மனம். இதைப் பற்றிப் பேசும் படமான 'ஓ காதல் கண்மணி' கல்யாணம் என்னும் கால்கட்டு இல்லாமலேயே காதல் வளர்ந்து நிலைக்குமா என்ற கேள்வியை எழுப்புகிறது.

ஆதி (துல்கர் சல்மான்), தாரா (நித்யா மேனன்) இருவரும் தனித்தன்மையையும் சுதந்திர உணர்வையும் இழக்க விரும்பாத காதலர்கள். முதிய ஜோடியான கணபதி (பிரகாஷ்ராஜ்), பவானி (லீலா சாம்சன்) வீட்டில் தங்கியிருக்கும் துல்கர், அங்கேயே நித்யாவையும் கூட்டிவந்துவிடுகிறார்.

மறதிநோயால் பாதிக்கப்பட்டுள்ள லீலாவைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொள்கிறார் பிரகாஷ் ராஜ். இளம் ஜோடியின் வாழ்வில் ஏற்படும் சலனங்களில் இவர்களும் பங்கெடுத்துக்கொள்கிறார்கள்.

திருமணம் தவிர்த்த வாழ்க்கையை விரும்பும் காதலர்களைத் திருமணத்தை நோக்கித் தள்ள அவர்களது குடும்பங்கள் செய்யும் முயற்சிகள் தோல்வியடைகின்றன. ஆனால் தொழில் நிமித்தமாக ஏற்படும் பிரிவால்வரும் வேதனை அவர்கள் முடிவை மறுபரிசீலனை செய்யவைக்கிறது. அதீதமான அன்புக்கும் சுதந்திர உணர்வுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தில் எது வெல்கிறது என்ற கேள்விக்கான பதிலாக விரிகிறது படம்.

படம் முழுவதும் இளமைத் துள்ள...
உற்சாக அதிர்வை உணரமுடிகிறது. ...
ரஹ்மானின் இசை, மணிரத்னத்தின் வ...
காட்சியமைப்புகள், பி.சி.ராம் செதுக்கி...
ஒளி-நிழல் சித்திரங்கள் ஆகியவை இ...
உற்சாகத்தையும் அனைவருக்குமான அ...
யும் ரசனையோடு முன்வைக்கின்றன. ...
சாம்சனிடம் நித்யா மேனன் பாடிக் கா...
இடத்தில் இயக்குநர், இசையமைப்பாள...
பாடலாசிரியர் வைரமுத்து ஆகிய மூவ...
இணைந்து இனிமையான அனுபவத்தை...
முன்னே கொண்டுவருகிறார்கள். நாடக...
யைத் தாண்டியும் அந்தக் காட்சி நம்...
ரசிக்கவைக்கிறது. பாடல்களிலும் பின்...
இசையிலும் ரஹ்மான் பிரமாதப்படுத்தி...
ஒவ்வொரு காட்சியின் உணர்ச்சியையு...
இசை கச்சிதமாகப் பிரதிபலிக்கிறது.

காதலை வெளிப்படுத்தும் காட்சிகளி...
யும் ரசனையும் நீக்கமற நிறைந்திருக்கி...
ஊரிலிருந்து அண்ணன் குடும்பம் வரும்...
சமயத்தில் துல்கருக்கு ஏற்படும் பதற்ற...
வைத்து நித்யா மேனன் விளையாடும்...
அழகு. பேருந்து, ரயில் பயணங்களில்...
வழியும் காதல் உணர்வுகளும் நன்றாக...
காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. காதல்...
பிரிவுக்கான காரணம், மனம் மாறுவதற்...

## திரைத்துளி


ரஜினி முருகன்



## ஐஸ்வர்யா ராயின் இனவெறியை தூண்டும் விளம்பரம்

நகைக்கடைக்கான விளம்பரத்தில் இனவெறியை தூண்டும் வகையில் முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய் நடித்திருப்பதாக அவருக்கு எதிராக பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புக் குரல் பதிவு செய்துவருகின்றனர்.

சர்ச்சைக்குள்ளான அந்த விளம்பரத்தில் நடிகை ஐஸ்வர்யா ராய் நகை அலங்காரத்தில் ஜொலிக்க அவருக்கு அருகே ஒரு கறுப்பினக் குழந்தை குடையை உயர்த்திப் பிடித்தபடி நிற்பதுபோல் உள்ளது.

இதன்மூலம் ஐஸ்வர்யா ராய் இனவெறியை தூண்டும்வகையில் நடித்துள்ளதாகவும், குழந்தைத் தொழிலாளர் முறையை ஆதரிப்பதுபோல் நடந்துகொண்டிருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதுதொடர்பாக ஐஸ்வர்யா ராய்க்கு சமூக ஆர்வலர்கள் சிலர் ... கடிதம் ... எழுதியுள்ளனர். ... அதில், ஐஸ்வர்யா ... உடனடியாக ... அந்த விளம்பர ... ஒப்பந்தத்தில் ... இருந்து ... விலகவேண்டும் ... என வலி... ுறுத்தி... ுள்ளனர்.



## ...ில் வெளியாகிறது கமலின் பாபநாசம்

... வில்லன் படத்தைத் தொடர்ந்து பாபநாசம் படத்தை ஜூன் மாதத்தில் வெளி... ...ழு தீர்மானித்திருக்கிறது. மோகன்லால், மீனா உள்ளிட்ட பலர் நடிக்க ஜீத்து ...யக்கத்தில் வெளியான மலையாள படம் த்ரிஷ்யம். விமர்சகர்கள் மத்தியிலும், ... பெரும் வரவேற்பைப் பெற்றது. இப்படத்தின் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி ...த்து மொழி ரீமேக் உரிமையையும் ராஜ்குமார் தியேட்டர்ஸ் நிறுவனம் பெற்றது. ...கு, கன்னடம் ஆகிய மொழிகளில் இப்படம் ரீமேக்காகிவிட்டது. தமிழில் கமல், ... சார்லி, கலாபவன் மணி உள்ளிட்ட பலர் நடிக்க ஜீத்து ஜோசப் இயக்கி...ர். . மே 1ஆம் திகதி உத்தமவில்லன் வெளியானதால், ஜூனில் பாபநாசம் ... வெளியிட தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்திருக்கிறது.மே மாதத்தில் உத்தம... ஜூ... ...னில் பாபநாசம், அதனைத் தொடர்ந்து விஸ்வரூபம் 2 என ...கள் ... அடுத்தடுத்து வெளியாக உள்ளன.



## தீபிகாவுக்கு பளார்

கோச்சடையான் படத்தில் ரஜினி ஜோடியாக நடித்தவர் பாலிவுட் நடிகை தீபிகா படுகோன். "பெண்களுக்கு அதிகாரமளித்தல் மிகமுக்கியம். யாருடன் செக்ஸ் வைத்துக்கொள்வது, என்னவிதமான உடை அணிவது, திருமணம் செய்துகொள்ளாமல் உறவு வைத்துக்கொள்வது, திருமணம் செய்துகொள்ளாமலே இருப்பது என்பது பெண்களின் தனிப்பட்ட விருப்பம். இதில் யாரும் தலையிடக்கூடாது" என குறிப்பிட்டிருந்தார். இவரது கருத்துக்கு ஆதரவாகவும், எதிராகவும் கருத்துக்கள் பரவி வருகின்றன.

இதற்கு தேசிய விருது வென்ற கங்கனா ரனாவத் தீபிகாவுக்கு வார்த்தைகளால் பளார் விட்டிருக்கிறார். □பெண்களுக்கு அதிகாரமளித்தல் பற்றிய கருத்து ஆண்கள் மத்தியில் பொறாமையை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடாது. பிறகு அதிகாரமளிக்கும் அந்த நிலையை உருவாக்க 20 ஆண்டுகள் ஆகலாம். பெண்களின் அதிகாரம் என்பது ஆத்மரீதியானதாகவும், மனிதமானத்துடனும் இருக்க வேண்டும். பெண்கள் எப்படி கவர்ச்சியாக மாறுவது என்பதில் அதிகாரம் அடங்கி இருக்கவில்லை. ஆனாலும் மக்கள் இதுபற்றி தங்கள் கருத்துக்களை பதிவு செய்து வருவது சந்தோஷம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எதிர்பார்ப்பு இருக்கிறது. ஆனால் அது பெண்களுக்கு சாதகமான பலனை அளிப்பதாக இருக்க வேண்டும்" என்றார்.

பெண்களை பாலியல் ரீதியாகவே பார்க்கும் பெரும்பான்மை ஆண்களின் சிந்தனையோடு தீபிகாவின் சிந்தனையும் ஒத்துப்போவதாக சமூக ஆர்வலர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.





## நயன்தாரா நடிக்கும் திருநாள்

ஜீவா, நயன்தாரா நடிக்கவிருக்கும் திருநாள் படத்தின் படப்பிடிப்பு இந்த மாதத்தில் இருந்து கும்பகோணத்தில் துவங்க இருக்கிறது. யான் படத்தைத் தொடர்ந்து அடுத்த படத்துக்காக நிறைய கதைகளைக் கேட்டு வந்தார் ஜீவா. இயக்குநர் ராம்நாத் கூறிய கதை ஜீவாவுக்கு மிகவும் பிடித்திருந்ததால் அப்படத்தில் நடிக்க ஒப்பந்தமானார்.

இப்படத்தில் ஜீவாவுக்கு நாயகியாக நடிக்க நயன்தாரா ஒப்பந்தமாகி இருக்கிறார். தெனாவெட்டு படத்துக்குப் பிறகு இப்படத்தில் ஜீவா கிராமத்து இளைஞனாக நடிக்க இருக்கிறார். நகைச்சுவை, காதல், அக்ஷன் என அனைத்தும் கலந்த இப்படத்தின் படப்பிடிப்பு இந்த மாதத்தில் இருந்து கும்பகோணத்தில் துவங்க இருக்கிறது. இதற்காக கும்பகோணத்தில் பிரம்மாண்டமான அரங்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன. கோதண்டபாணி பிலிம்ஸ் நிறுவனத்தின் எம்.செந்தில்குமார் இப்படத்தை தயாரிக்கிறார்.



...ம் முழுவதும் இளமைத் துள்ளலின் ...க அதிர்வை உணரமுடிகிறது. ஏ.ஆர். ...னின் இசை, மணிரத்னத்தின் வசனங்கள், ...மைப்புகள், பி.சி.ராம் செதுக்கியுள்ள ...ல் சித்திரங்கள் ஆகியவை இளமையின் ...த்தையும் அனைவருக்குமான அழகியலை ...னையோடு முன்வைக்கின்றன. லீலா ...டம் நித்யா மேனன் பாடிக் காட்டும் ...ல் இயக்குநர், இசையமைப்பாளர், ...சிரியர் வைரமுத்து ஆகிய மூவரும் ...ந்து இனிமையான .அனுபவத்தை நம் கண் ... கொண்டுவருகிறார்கள். நாடகத்தன்மை ...தாண்டியும் அந்தக் காட்சி நம்மை ...வைக்கிறது. பாடல்களிலும் பின்னணி ...லும் ரஹ்மான் பிரமாதப்படுத்தியிருக்கிறார். ...ரு காட்சியின் உணர்ச்சியையும் பின்னணி ...கச்சிதமாகப் பிரதிபலிக்கிறது.

...லை வெளிப்படுத்தும் காட்சிகளில் இளமை ...னையும் நீக்கமற நிறைந்திருக்கின்றன. ...ந்து அண்ணன் குடும்பம் வரும் ...தில் துல்கருக்கு ஏற்படும் பதற்றத்தை ... நித்யா மேனன் விளையாடும் இடம் ... பேருந்து, ரயில் பயணங்களில் பொங்கி ... காதல் உணர்வுகளும் நன்றாகக் ...படுத்தப்பட்டிருக்கின்றன. காதலர்களின் ...கான காரணம், மனம் மாறுவதற்கான சூழல் ஆகியவற்றில் புதிதாக எதுவும் இல்லை. முக்கிய பிரச்சினைக்கு வருவதற்குத் திரைக்கதை ரொம்ப நேரம் எடுத்துக்கொள்வதில் இரண்டாம் பாதியில் படம் மந்தமாகிறது. காதலின் ஈரத்தையும் காதலுக்குள் முளைக்கும் சண்டையையும் சமாதானத்தையும் சொல்லும் காட்சிகள் கடைசிவரை திரும்பத் திரும்ப இடம்பெறுகின்றன.

படத்தின் முக்கியமான பிரச்சினைகள் இவை அல்ல. மணிரத்னம் சமகாலப் பிரச்சினை ஒன்றைக் கையில் எடுக்கிறார். அதைப் பெருமளவில் ஒரு பெண்ணின் கண்ணோட்டத்துடன் சித்தரிக்கிறார். முரண்பாட்டை உருவாக்கி, வலுவான கதை முடிச்சாக மாற்றுகிறார். இந்த முடிச்சை அவிழ்க்கும் சவாலை எதிர்கொள்வதில் பலவீனமாக வெளிப்படுகிறார். புதியதொரு கேள்விக்குப் புதியதொரு பதில் இல்லை. பார்வையாளர்களின் கற்பனைக்கு இடம் தரும் முடிவாகவும் அமையவில்லை.

பழைய பதிலைத் தருவதில் தவறில்லை. அந்தப் பதில் பாத்திரங்களின் அனுபவம் மூலம் வெளிப்படும் பதிலாக இருக்க வேண்டும். மாறாக, செயற்கையாக முன்வைக்கப்படும் பதிலாக இருக்கிறது. இதுதான் படத்தின் பலவீனம்.

# தேன் கிண்ணம்

## ஏழைத் தொழிலாளி

புழுக்கம் தீர்க்கும்
தென்றல்
குளுமை தீர்க்கும் வெயில்
தாகம் தீர்க்கும் தண்ணீர்
வறுமை தீர்க்கும் செல்வம்
மனக்குறை தீர்க்கும்
நிம்மதி தாயே
எங்கிருக்கிறாய்?

ஏழைத் தொழிலாளியின்
சுமை தீர்த்துவிடு
அவன் பாரம் இறங்க
உன் தோள் கொடு
அவன் ஒரு நாள் உறங்க
விடுமுறை கொடு
அந்த ஒரு நாளில்
அவன் களைப்பைக்
கடன் வாங்கி
வைத்துக்கொள்.

யாழ் - கௌசி

# என் வியர்வைக்கு விடுமுறை நாள்...

கட்டாந்தரையில் முள் வேலிக்குள்
விரி படுக்கையில்... வேலி கோழி கூவிடு முன்னே.
நடைபோட எழுந்திடும் கால்கள் எந்நாளும்...
வெறுப்பில்லா விருப்புடன்...

கல்லெடுத்து போடுகையில்
கல்லாய் மனதைகொண்டு...
அரும்பாத மீசையுடன் ஆசைகளை தேக்கிவைத்து
10உம் 100 வயதாகிட்டு என் குடும்பத்திற்காய்...

மழைதாங்கும் ஓடாய் ஓயாமல்
எந்நாளும்... கைகள்
தோல் மூடிய குருதிகளாய்...

கால்கள் வெட வெடக்க
மனதில் படபடப்புடன்...
ஏங்கிப்போகும் எம் வாழ்வியல்...
கைகள் உயர்த்து முன்பே கால் நகம்
வளியாய் வழியும் வியர்வைத்துளிகள்
துளிகள் அல்ல கண்ணீர்த்துளிகள்...
ஓயாத அனல்மேலே எந்நாளும்
அரிதட்டு படுக்கையாம்...
என் செல்வங்களே பஞ்சுமெத்தை
படுக்கையும் உங்களுக்காய்....

மூதேவி முடித்துடுடா முதலாளி குரலும்
உயர்ந்திடும்போது... மொட்டலர்ந்த மலராய்...
என் குடும்ப வறுமையும் கண்முன்னே...
காதருகே அமுதமாய் அழுக்கு வார்த்தைகளும்.
காற்றோடு கலந்திடவே...
வெடுக்கென பாய்கிறது
கண்ணீரும் செம்மண்ணாய்...

வண்டி இழுக்கையிலே
வயிறும் இழுபடுதே
அழுக்கான உள்ளம் கையில்
500 ரூபாய் நோட்டுக்காய்...
விழுந்தது 50 ரூபாய்...


கொத்தி புரட்டையிலே
கொதிக்குதடி நெஞ்சம்...
நிமிர்ந்து நிற்க நேரமும் இல்லை
நிமிர்ந்தால் வேலையுமில்லை
சுட்டெரித்தால் வெந்துவிடும்
வெள்ளையன் ஆட்சியிலே
கூன்விழுந்தாயிற்று...
ஊன்றிக்கொள்ள மூன்றாம் துணையும்.
மாறவுமில்லை முதலாளித்துவம்...
இன்னும் எத்தனை வியர்வைகள் நம் மண்ணில்

போதுமடா முதலாளித்துவம்... வேண்டும்
சமத்துவம்... மே-01 மட்டுமல்ல
என்றுமே... விடுமுறைதான் வாழ்வின் விதிமுறைகள்...
அல்ல நம் வியர்வை துளிகளின் விடுமுறை நாட்கள்.

பிரேம்,
கல்முனை, பாண்டிருப்பு.



# சத்தியம்



அவள் சொன்னதும்
நான் ஏற்றுக்
கொண்டதுமான
கடைசி வாக்கியம்!

மகாத்மாவின்
ஆயுதமாம்
அதனால்தான்
அவளும்
பயன்படுத்தி இருப்பாள்!

கருங்கல்
கால் மிதிக்கும்
படியாகவும்
கை கூப்பி
வணங்கும்
கடவுளாகவும்
செதுக்கப்படுவது
போலதான்
இதுவும்
பயன்படுத்தும்
இடங்களில்
பலிக்கும்!

கே.வாலேந்திரன்
கொள்ளுப்பிட்டி

# பூமித்தாயும் பதறுது


ஆடு நனையுது என்று ஓநாய் அழுவுது!
அடுத்த வீடு அடுக்கடுக்காக
அகத்தால் மனம் முறுகுது!
மாற்றான் தோட்ட மல்லிகைக்காய்
அவன் மனம் அலையுது!

மனமதில் நிறைந்திட்ட அழுக்கதால்
தூய்மையது விலகுது!
தொட்டுணர்ந்த அன்பு கசந்ததால்
புனிதமது மறையுது!
பூஜித்த புஸ்பம் புலம் பெயர்வானதால்
புண்பட்ட மனதில்
பண்படாது போனது!!

பூமி சுமந்த மேனி புழுவாய் துடிக்குது!
புரிந்து வாழத் தெரியா
மாந்தர் விளைவில் சிக்கி சிதறுது!
பாவச் சுமை சுமக்க பலிக்கடாவான
பூமித்தாயும் பதறுது...!

அப்ரார் ஏ.அஸீஸ், யாழ்ப்பாணம்.

# எமக்கும் பங்குண்டு




**பொஸ்டன்** மரதன் போட்டிகளைத் தொடர்ந்து, பிரபல்யமிக்க லண்டன் மரதன் போட்டிகளும் நடைபெற்று நிறைவடைந்துள்ளன. இதில் வழக்கம்போலே ஆபிரிக்க ஆதிக்கமே நிலவியது. முதல் நான்கு இடங்களையும் கென்ய நெடுந்தூர ஓட்டவீரர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். எலூட் கிப்சோக் 2 மணி 4 நிமிடமும் 42 செக்கனில் முதலிடம் பெற்றார். ஐந்து செக்கன்கள் பின்னதாக வந்து முன்னாள் வீரர் வில்சன் கிப்ஸாங் இரண்டாம் இடம்பெற்றார்.


இந்தப் போட்டிகள் இலங்கையைப் பொறுத்த வரையிலும் மிக முக்கியமானதொன்று. லண்டன் மரதன் போட்டிகளில் பங்குகொண்ட அனுராதா இந்திரஜித் குரே இப்போட்டிகளில் 14ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டார். இருந்தும் இதில் இவர் ஒரு சாதனை படைத்துள்ளார். 1975ஆம் ஆண்டில் பழைய தலைமுறையினர் நன்கறிந்த நெருந்தூர ஓட்ட வீரர் எஸ்.எல்.பி. றோசா, புகுகோகா மரதன் ஓட்டப்போட்டிகளை 2 மணி 14 நிமிடம் 31 செக்கன்களில் பூர்த்திசெய்திருந்தார். இப்பொழுது அத்தகைய ஒரு சர்வதேச நிகழ்வை குறே 2 மணி 13 நிமிடம் 47 செக்கன்களில் நிறைவுசெய்து 40 வருட சாதனையை முறியடித்துள்ளார். மேலும் 2012ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் குறே 23ஆவது இடத்தைப் பிடித்திருந்தார்.




**2028 ஒலிம்பிக்** போட்டிகள் எங்கு நடைபெறும் என்ற ஆருடங்களும், அந்தச் சந்தர்ப்பத்தைப் பெறுவதற்கான ஆருடங்களும் இப்பொழுதே ஆரம்பித்துவிட்டன. விளையாட்டு உலகம் எவ்வளவு வேகமாகப் பாய்ந்தோடிக் கொண்டிருக்கின்றது என்பதற்கு இது ஒரு சான்று. முன்னதாக ஒலிம்பிக் குழுவின் தலைவர் பெச் இந்தியாவில் நின்றிருந்தபோது 2024 ஒலிம்பிக் போட்டிகளை இந்தியா நடத்த விரும்புவதாக ஒரு செய்தி ஊடகங்களில் பரவியிருந்தது. ஆனாலும் பெக் மற்றும் இந்தியப் பிரதமர் இருவர் அது வெறும் ஊகம் என்றும், இந்தியாவில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் காலம் இன்னும் நெருங்கவில்லை என்றும் கூறியிருந்தனர்.

தற்போது ஒலிம்பிக் தலைவர் அவுஸ்திரேலியாவில் நிற்கின்றார். இங்கு உரையாற்றும்போதே அவுஸ்திரேலியாவிற்கு 2028 ஒலிம்பிக் போட்டிகளை நடாத்தும் சந்தர்ப்பம் இருக்கக்கூடும் என்றும், அதனைப் பெறுவது அவ்வளவு

# தகுதிக்குக் குறைவில்லை




இலகுவானதல்ல என்றும் ஆனால் அதற்காகத் தான் பாடுபடுவதாகவும்.

அவுஸ்திரேலிய கோரிக்கைமீது ஆதரவு அதிகமாகவே இருக்கும் என்று தான் நினைப்பதாகவும் கூறியுள்ளார்.

மேலும் சிட்னி ஒலிம்பிக் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தியவர்கள் அவுஸ்திரேலியர்கள். 2028 இது நடைபெற்று 28 வருடங்கள் நிறைவடைந்திருக்கும். இருந்தாலும் மீண்டும் விரைவிலேயே இன்னொரு சந்தர்ப்பம் கேட்கிறார்களே என்று எண்ணத் தோன்றவில்லை. ஏனெனில் இதற்கான எல்லாத் தகுதிகளையும் இவர்கள் கொண்டிருப்பதோடு, வெற்றிகரமாக ஒலிம்பிக் போட்டிகளை நடாத்திக் காட்டியவர்கள் என்றும் கூறியுள்ளார்.

# என்று சர்ச்சை தணியும்

**இலங்கையில்** உள்ள கிரிக்கெட் கழகங்கள், மற்றும் கிரிக்கெட் அமைப்புக்கள் ஒன்றுகூடி இலங்கைக் கிரிக்கெட் சபையின், இடைக்கால சபை தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். மொத்தம் உள்ள 85 அமைப்புக்களில் 68 அமைப்புக்கள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தன. இவர்கள் இக்கூட்டத்தில் தேர்தலொன்றை முன்னெடுப்பதை ரத்து செய்ததையும், இடைக்கால சபையையும் கண்டித்துள்ளனர். இந்த நிலைமை நீடித்தால் ஐ.சி.சியால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் இலங்கைக் கிரிக்கெட்டுக்குப் பாதகமாக அமையும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளதோடு, தற்பொழுது ஐ.சி.சியால் சில தற்காலத் தடைகள், பொருளாதார உதவி ரீதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளன.

மேலும் முன்னைய கிரிக்கெட் சபையால் முறைகேடுகள் செய்யப்பட்டிருந்தால் அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்குமாறும் ஏகமனதாக விளையாட்டுத்துறை அமைச்சைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.



உண்மையில் தற்போது இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், பாரதூரமானவை. இந்நிலையில் புதிதாக ஒரு தேர்தல் நடாத்தும் நோக்கம் ரத்துச் செய்யப்பட்டது ஏனென்றும் தெரியவில்லை. பொருளாதார வளத்தில் சிரமங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் இலங்கை கிரிக்கெட் சபை இந்தப் பிரச்சினைகளில் இருந்து விடுபடவேண்டுமென்பதே எல்லோரது விருப்பம். மஹேல, சங்கக்காரா, டில்ஷான் போன்ற பிரமாண்ட வீரர்கள் ஓய்வு பெறும் காலத்தில் கிரிக்கெட் அணியே புத்தாக்கம் பெறவேண்டிய நிலையில் உள்ளது எல்லோரும் நன்கறிந்ததே. இந்நிலையில் அணி வளர்ச்சி சுமூகமாக நடைபெற எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும்.

# நம்பிக்கை நியாயமானது



**ஆஷஸ்** தொடர் பற்றிய பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகிவிட்டன. ஜூலை மாதம் ஆஷஸ் தொடருக்காக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்து செல்லவிருக்கிறது. 2001இன் பின் தம் நாட்டுக்கப்பால் ஆஷஸ் தொடரை வெல்லவில்லை என்ற ஆதங்கம் அவுஸ்திரேலியாவிற்கு உண்டு. இது பற்றி அவுஸ்திரேலிய வீரர்கள் ஷேன் வொட்சன், மற்றும் ஸ்ரீவ் ஸ்மித் தமது கருத்துக்களை எடுத்துக்கூறியுள்ளனர்.

முன்னதாக நடைபெற்ற நான்கு ஆஷஸ் தொடர்களில் விளையாடிய வொட்சன், தற்போதுள்ள அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்தில் தம் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும் என்று தன்னம்பிக்கையுடன் கூறுகிறார். மேலும் 2014 உலகக் கிண்ணம் வென்ற அணி எங்கள் அணி. எனவே இங்கிலாந்தை வீழ்த்துவது அவ்வளவு கஷ்டமாக இருக்காது என்றும் நம்புகிறார். நாங்கள் மிகவும் பலமானதொரு அணியைக் கொண்டுள்ளோம்.

கடந்த மூன்று ஆஷஸ் தொடர்களையும் நாங்கள் வெல்லவில்லை. அதில் இரண்டில் நானும் பங்குபற்றியிருந்தேன். ஒவ்வொரு வீரரும் இம்முறை இங்கிலாந்தை வீழ்த்தவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று முடிக்கிறார்.

ஸ்ரீவ் ஸ்மித் தன் பங்குக்குக் கருத்துக்கூறும்போது, எங்கள் அணியுடன் ஒப்பிடும்போது, இங்கிலாந்து அணி அப்படி ஒன்றும் பேசும்படியான அணி இல்லை என்று கூறியுள்ளார். மைக்கல் கிளார்க் ஓய்வு பெறும்போது டெஸ்ட் அணித் தலைமை ஸ்மித்துக்கே கிடைக்கும் என்ற நம்பப்படும் நிலையில் மிகத் தைரியமாக இங்கிலாந்தை நாங்கள் வீழ்த்துவோம் என்று கூறியுள்ளார்.

# கைகள் கட்டப்படுகின்றன




**மேற்கிந்தியத்** தீவுகள் மற்றும் ஐ.பி.எல். கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் நட்சத்திரச் சுழல் பந்துவீச்சாளர் சுனில் நரெய்ன். இவருடைய பந்துவீச்சு முறைமையில் தவறுண்டு என்று ஐ.சி.சி கூறியதால் உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடும் சந்தர்ப்பத்தை இவர் இழந்தார். இருந்தாலும் இவர் ஐ.பி.எல் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் விளையாடத் தடை இல்லை என்று விலக்களிக்கப்பட்டு கே.கே.ஆர் அணிக்காக விளையாடிக் கொண்டிருந்தார். இருந்தாலும் கடந்த 22ஆம் திகதி விசாகப்பட்டணத்தில் நடைபெற்ற சண் ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டியின்போது இவரது பந்துவீச்சில் குறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி ஆராய்ந்த பீ.சீ.சீ.ஐ தற்போது சுனில் நரெய்ன் off spinners பந்துவீசுவதற்கு மட்டும் தடை விதித்துள்ளது. நரெய்ன் தொடர்ந்தும் ஐ.பி.எல் இல் விளையாட லாம். ஆனால் off Spin பந்துவீச்சை தவிர்த்துக் கொண்டு KNUCKLE BALL மற்றும் QUICKER STRAIGHT BALL வகை யான பந்துகளை வீசலாம் என்று அனுமதியளித்துள்ளது.

அண்மைய மாதங்கள் பல்வேறு தேசிய அணிகளின் சுழல் பந்துவீச்சு வீரர்களுக்குப் போதாத காலமாகத்தான் இருந்தது. இருந்தாலும் அற்புதமான சுழல் பந்துவீச்சாளர் சுனில் நரெய்னுக்கு இது மிகவும் சோதனையான காலம் என்பதில் தப்பில்லை. மேலும் இவர் பற்றிப் பேசும்போது, இருபதுக்கு இருபது ஆட்டமொன்றில் சுப்பர் ஓவர் ஒன்றையே மெய்டன் ஓவராக வீசிய அசாத்திய திறமையைக் குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை.






பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

## சின்ன வயதில் பருவமடையும் பெண் குழந்தைகள்

அதிகப்படியான கொழுப்புச் சத்து மற்றும் வேதியல் பொருட்கள் நிறைந்த உணவுகளாலும், முறை தவறிய உணவுப் பழக்கங்களாலும் சீக்கிரமே உடல்பருமன் அடைந்துவிடுவார்கள். அதனால் சிறுவயதிலேயே பெண்கள் பூப்படைந்துவிடுகிறார்கள். பரம்பரை காரண-மாகவும், உடல் மனரீதியாக ஏதாவது பாதிப்பு ஏற்பட்டு இருந்தாலும் சிறுவயதிலேயே பூப்படைந்துவிடுவார்கள்.

அதுமட்டுமல்ல, இயல்பாகவே பருவம் அடையும் வயது இப்போது குறைந்துவிட்டது. அதனால், இதுபற்றி கவலைப்படவேண்டிய தேவையில்லை. ஆனால், மனதளவில் குழந்தைக்கு பயம் ஏற்படாத அளவுக்கு மாதவிடாய் பற்றி தாய் எடுத்துச் சொல்லவேண்டும். பள்ளியில் ஆசிரியர்களும் குழந்தைகளுக்கு இதுபற்றிய கல்வியை புகட்டவேண்டும்.

பருவம்வந்த பெண்களுக்கு ஓரளவு கொழுப்புச் சத்து, அதிகமான புரதச்சத்து தேவைப்படுகிறது. கருப்பை வளர்ச்சிக்கு கொழுப்பும் புரதமும் மிகவும் அவசியம். அதனால்தான் நம்முடைய முன்னோர் பெண் குழந்தைகள் பூப்படைந்ததும் கொழுப்பு, புரதம் உள்ள உளுந்து கஞ்சி, உளுந்து களி செய்துகொடுத்தார்கள். முட்டைகொடுத்து பிறகு நல்லெண்ணெய் உட்கொள்ள வைத்தார்கள்.

பெண்கள் பருவம் அடைந்த காலங்களில் மேற்கண்ட உணவுகளை கொடுத்துவருவதே உடல்ரீதியாக அவர்களுக்கேற்ற சிறந்த மருத்துவம் ஆகும்.

## 45 வயதுக்கு முன்னபே கருப்பையை எடுப்பது நல்லதா?



கருப்பை பெண்ணின் உடல்வலிமைக்கு தேவையான ஹோர்மோன்களைத் தருகிறது. பெண்கள் வயதுக்கு வந்ததில் இருந்து மாதவிடாய் நிற்கும்வரை சினைமுட்டைப் பையில் இருந்து மாதம் ஒரு முட்டை வெளியாகும். அது விந்துவுடன் சேர்ந்து கரு உருவாகும்.

அது கருப்பையில் வளர்ச்சியடைந்து குழந்தை பிறக்கிறது. பலரும் சினைப்பையும் கருப்பையும் குழந்தை பிறப்பதற்காக மட்டும்தான் என்று நினைக்கிறார்கள். பெண்களின் சினை முட்டைப் பையில் உருவாகும் ஈஸ்ட்ரோஜன் ஹோர்மோன் தான் பெண் தன்மை மற்றும் சத்துக்களை கொடுக்கிறது. எலும்புகளை வலுப்படுத்துகிறது.

மாதவிடாய் நிற்கும்வரை சினை முட்டைப் பையில் ஈஸ்ட்ரோஜன் சுரப்பு அதிகம் இருக்கும். அதன்பின்னர் மெல்ல மெல்ல குறைந்துவிடும். பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் சராசரி வயது 51. மாதவிடாய் நிற்பதற்கு முன்பே கருப்பையை எடுத்துவிடுவதால் பெண்கள் பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாகின்றனர். உடல்சூடு இரவில் அதிகம் வியர்த்தல் தூக்கமின்மை அடிக்கடி கோபம் சலிப்பு மறதி மனஉளைச்சல் உடல் வலி போன்ற பிரச்சினைகள் தாக்கும். சிறுநீர்ப்பையில் கிருமித்தொற்று உண்டாகும். உடலுறவில் பிரச்சினை ஏற்படும். எலும்பு தேய்மானம் மற்றும் முதுகெலும்பு உடைதல் உள்ளிட்ட தொந்தரவுகளும் வரும்.

பெண்கள் 45 வயதுக்கு முன்னரே கருப்பையை எடுக்கும்போது இதுபோன்ற பிரச்சினைகளை சந்திக்கவேண்டியிருக்கிறது. தவிர்க்கமுடியாத காரணத்தால் கருப்பையை எடுக்கநேரும்போது சினை முட்டைப்பையை விட்டுவிட்டால் இப்பிரச்சினைகள் வராமல் தடுக்கலாம் என்று சிலர் நினைக்கின்றனர்.

ஆனால் கருப்பை எடுத்த சில ஆண்டுகளிலேயே சினை முட்டைப் பையும் இயங்காது. இந்த மெனோபாஸ் அறிகுறிகளுக்கு ஹோர்மோன் ரீபிளேஸ்மென்ட் தெரபி சிகிச்சை உண்டு. ஆனால் அது கடும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். இரத்தக்குழாயில் இரத்தம் உறைதல் மார்பக புற்றுநோய் போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். எனவே கருப்பையை எடுப்பதைவிட அதை பாதுகாப்பதே சிறந்தது.

## ஒரே அலுவலகத்தில் கணவன் – மனைவி வேலை செய்யலாமா?



பொருளாதார பிரச்சினையினாலும், விலைவாசி உயர்வினாலும் தற்போதைய சூழலில் கணவன், மனைவி இருவருமே வேலைக்கு செல்லவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். எந்த ஒரு அலுவலகமாக இருந்தாலும் கணவனும் மனைவியும் ஒரே இடத்தில் வேலைசெய்தால் ஒரு சில பிரச்சினைகள் கண்டிப்பாக எழும். நம்மத்தியில் இருக்கும் மிக முக்கியமான பிரச்சினை, மனைவியைவிட கணவன்தான் அதிகமாக சம்பாதிக்கவேண்டும் என்பது. இல்லாவிட்டால் ஊரு நாலு விதமாகப் பேசும். வேலை செய்யும் இடத்தில் திடீரென மனைவிக்கு பதவி உயர்வு அல்லது மதிப்பு கூடும்படியான ஏதேனும் ஒரு விஷயம் நடந்தால் கணவன்மார்கள் கொஞ்சம் வருத்தம் அடையத்தான் செய்வார்கள்.

அழகான மனைவிகள் கொண்டுள்ள ஒவ்வொரு கணவனுக்கும் அன்றாடம் ஏற்படும் பயம்தான் இது. அதிலும், ஒரே இடத்தில வேலைசெய்தால் கண்காணிப்பதே ஒரு வேலையாகிவிடும். ஓர் உறவில் விரிசல் ஏற்படுகிறது என்றால் அதற்கு 90வீதம் காரணமாக இருப்பது இந்த சந்தேக பிரச்சினைதான். அலுவலகத்தில் யாராவது ஓர் ஆணுடன் கொஞ்சம் அதிகமாக பேசினால்கூட கணவன்மார்களால் தாங்கிக் கொள்ளமுடியாது.

உடனே சந்தேகத்தில் மூழ்கிவிடுவார்கள். இந்த சந்தேக நோயால் ஏற்படும் பக்கவிளைவு தான் வேலையில் ஏற்படும் குறைபாடு. (கவனம் முழுக்க அங்கேயே இருந்தா பின்னா எப்படி ஒழுங்கா வேலை செய்யமுடியும்). ஆண்கள் எப்போதுமே ஒருவேளையாவது மனைவியின் சமையலில் இருந்து தப்பித்து மதியம் உணவகத்தில் சாப்பிடலாம் 'என்று இருப்பார்கள்.

ஆனால், மனைவியும் ஒரே இடத்தில் வேலை செய்யும்போது இருவரும ஒன்றாகத்தான் சாப்பிட வேண்டும். அதனால், மனுஷன் தப்பிக்கமுடியாது.

## காலணிகளைத் தேர்ந்தெடுக்கும் முன்...

காலணிகள் வாங்கும்போது உட்கார்ந்துகொண்டு தேர்ந்தெடுத்தால் அளவு சிறிது மாறும். அதனால், நின்றுகொண்டு தேர்ந்தெடுப்பதே சரியான முறை. காலணிகள் வழுக்காதவகையில் இருக்கவேண்டும். அதிகம் மடங்குகிற காலணிகளையும் தவிர்க்கவேண்டும்.

பாதத்தைத் தொடும் காலணியின் பகுதி மென்மையாக இருக்கவேண்டும். நரம்புப் பிரச்சினை உள்ளவர்களுக்கு காலை வேளைகளில் பாதங்களில் கொஞ்சம் வீக்கம் இருக்கும். அதனால், மாலைவேளைகளில் காலணிகள் வாங்குவதே சரியானது.

நரம்புகளில் பாதிப்பு உள்ளவர்கள் சொக்ஸ் அணிந்தபிறகு காலணிகள் அணிவது நல்லது. இதன்மூலம் பாதத்துக்கும் செருப்புக்கும் இடையில் ஏற்படும் உராய்வைத் தவிர்க்கமுடியும்.

விரல்களால் அழுத்திப் பிடிக்கிறவகையில், விரல்களை அழுத்துகிற வகையான காலணிகளைத் தவிர்க்கவேண்டும். அக்குபஞ்சர் என்பது மிகவும் நுட்பமான அறிவியல்தான். ஆனால், கடைகளில் விற்கப்படும் அக்குபஞ்சர் காலணிகளால் எந்தப் பயனும் கிடைப்பதில்லை.

அதனால், சாதாரண காலணிகளைத் தேர்ந்தெடுப்பதே போதுமானது. ஷூ தேர்ந்தெடுப்பதற்கும் இதே வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.






**தேவையான பொருட்கள்:-**

கோதுமை மா -1 கப், ரவை - 1/2 கப், மைதா - 1/2 கப், கடலை மா - கால் கப், சீனி - 1 கப், ஏலக்காய் பொடி - 1 கரண்டி, நெய் - 100 கிராம், எண்ணெய் - 1 கப், திராட்சை, முந்திரி பருப்பு - தேவையான அளவு, பச்சை திராட்சை - சிறிதளவு (பொடியாக நறுக்கியது)

**செய்முறை:-** ஒரு கடாயில் கோதுமை மா, மைதா மா, ரவை, கடலை மா போட்டு 1 கப் எண்ணெய் ஊற்றி கலர் மாறி பச்சை வாசனை போகும்வரை கைவிடாமல் நன்கு கிளறவேண்டும். 1 கப் தண்ணீர், 1 கப் பால் ஊற்றி நன்கு கட்டிவராமல் கிளறவும். தண்ணீர் நன்கு சுண்டியதும் அடுப்பை மிதமான தீயில் வைத்து 1 கப் சீனியை சேர்க்கவும். நெய், முந்திரியை சேர்க்கவும். அடுத்து ஏலக்காய் பொடியை சேர்த்து நன்கு கிளறிவிடவும். அல்வா கடாயில் ஒட்டாமல் வரும்போது நறுக்கிவைத்துள்ள பச்சை திராட்சையை போட்டு கிளறி இறக்கவும்.

**250/= பரிசு வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

பரிசுப் போட்டி இல :-469

**கேள்வி:** உலகின் முதலாவது பெண் புகைப்படக் கலைஞர் யார்?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 17 .05. 2015

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 469
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.


பரிசுப் போட்டி இல :- 467 இற்கான விடை :-
பழச்சாறு, காய்கறிச்சாறு, சூப், தண்ணீர்

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-
என். கர்னன்,
கோவில் வீதி, பதுளை.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

469

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
..................
கையொப்பம் : ..................



## தானு[illegible] ...ளையும் [illegible] ஜூஸி?

மொக்கன் கேட்கிறான்



அரசாங்கம் கலையப் போகுதெண்டு கதை அடிபடுகுது. கூட்டமைப்பாருக்கும் கலக்கம் பிடிச்சிட்டுது. இவ்வளவு காலமும் எங்கட இடத்தில ஏகபோகம் அனுபவிச்சவை. இனி என்ன நடக்கப்போகுதெண்டு ஏங்கத் தொடங்கீட்டினம். கட்டைப்பிராய் கந்தையற்ற பொடியன் சுரேஸ் தம்பி தானும் கலங்கி கூட்டமைப்பையும் கலக்கிக்கொண்டு இருக்கிறாராம். இப்ப அவர் MP. தம்பி மாகாணசபை உறுப்பினர் இனிவர்ற காலத்தில இரண்டும் இல்லாமல் போகும்போல கிடக்கு. அனந்தி பொடிச்சியும் விக்கி ஐயா பக்கம் சாரப்போறா எண்டு அங்கின இஞ்கின ஆக்கள் கதைக்கினம். பொன்னம்பலத்தாருண்ட பேரனும் அவவப் பிடிச்சால் கொஞ்ச வோட்டு எடுக்கலாம் எண்டு தப்புக்கணக்கு போடுறாராம். தமிழரசு கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா இதுக்கு என்னத்த செய்யப்போறாரோ தெரியேல்ல.

அனந்தி பொடிச்சி பெரிய எதிர்பார்ப்புக்களோட எலெக்ஷன் கேட்டு வெண்டவா. ஆனால் அவ நெனச்சதைப் போல அங்க ஒண்டும் பெருசா நடக்கேல்ல. தனக்கு கிடைச்ச வோட்டுக்கள வைச்சு விக்கி ஐயாவுக்கு அடுத்தபடியா தனக்கும் ஏதும் பெருசா கிடைக்கும் எண்டு நெனச்சவாவாம். கூட்டமைப்புக்காரர் அவவப் பயன்படுத்தி தங்கட வோட்டுக்களை கூட்ட நெனச்சதே தவிர அதுக்கு மேலால ஒண்டுமே செய்யேல்ல. தமிழரசு கட்சி தலைவரும் வேற மாதிரி யோசிச்சுப் போட்டார். மொக்கனுக்கு இப்ப ஒரு பாட்டு நினைவுக்கு வருகுது. மொக்கனுக்கு பழைய பாட்டெண்டால் சரியான விருப்பம். அந்த பாட்டை சொல்லுறன் நீங்களும் கேளுங்கோ. "தேரோடும் வாழ்வில் என்று ஓடோடி வந்த என்னை போராட வைத்தானடி கண்ணில் நீரோட வைத்தானடி" இந்த நிலமைதான் அனந்தி பொடிச்சிக்கு வந்திருக்குபோல கிடக்கு. எங்கன்ர பெரியவை எப்பவும் எங்கள ஆளிற எண்ணத்தில இருக்கினமேதவிர எங்கள வாழ வைக்கவேணும் எண்ட எண்ணம் அவயிற்ற துப்பரவா இல்ல. ஆண் பரம்பரை ஆள நினைப்பதில் என்ன தவறென்று அவையின்ர அந்தக்கால ஆஸ்தான கவிஞன் காசி அனந்தன் மேடையில முழங்கினது. இப்பவும் என்ர கண்ணுக்கு முன்னால நிக்குது.



தேப்பன், மோன், அண்ணன், தம்பி, மாமன், மருமோன் எண்டு எங்கள ஒரு குடும்ப ஆட்சிக்குள்ள வைச்சிருக்கிறதுதான் அவையின்ர விருப்பம். நாங்கள் எல்லாரும் ஒண்டா நிண்டு அவைய MP ஆக்கவேணும் எண்டதை தவிர வேற ஒண்டையும் சொல்லமாட்டினம். இந்தியா வருகுது. இங்கிலாந்து வருகுது. அமெரிக்கா வருகுது எண்டு அந்தக் காலத்தில இரவில வாற குடுகுடுப்பைக்காரன் சொல்லுற மாதிரி இனி நல்ல காலம் வருகுது எண்டு சொல்லி முடிப்பினம். நாங்களும்தான் இவ்வளவு காலம் இருந்து பார்த்தம். நல்ல காலம் வருகுது எண்டு, இவங்கள நம்பி இருந்து கடைசியா கண்டது முழுக்க அழிவைத்தான்.

இரவில வாற குடுகுடுப்பைக்காரன் பிறகு சுடலைக்குப் போவானாம். எங்கன்ர கூட்டமைப்பு குடுகுடுப்பைக்காரரும் இனி அரசியல் சுடலைக்கு போகவேண்டியதுதான். இனி அந்திம காலம் வந்துட்டுதாம். இப்ப 50 வருஷமா எங்கட ஊரில, தேசத்தில குடுகுடுப்பைக்கார்ர் இல்ல. அதுக்குப் பதிலா எங்கட அரசியல் குடுகுடுப்பைக்காரர்தான் தொடர்ந்து இருக்கினம். இனி அவையும் இல்லாமல் போக வேண்டியதுதான் எண்டு இந்த மொக்கன் நினைக்கிறான். மொக்கன்ர நினைப்புகள் எல்லாம் எப்பவும் முக்கால் திட்டம் சரிவாறது. ஒரு தியாகமும் செய்யாதவை இப்ப முன்னுக்கு நிக்கினம். ஊன்ர அடிச்சு உலையில இப்ப போட்டவையும் MPமாரா வந்து பெரிய வள்ளலுகள்போல வேஷம் போடுகினம். மக்களுக்காகவே சேவை செய்யப் பிறந்தனாங்கள் எண்டு எங்களுக்கு கதைவிடுகினமாம் கதை.

உண்மையா தியாகம் செய்தவங்கள் உலகமெல்லாம் சிதறிப்போய் இருக்கிறாங்கள். இஞ்சயும் பெரிசா ஒண்டிலும் இல்ல. டக்கிளஸ் தம்பி போல ஒண்டு ரெண்டு பேர்தான் ஏதோ வள்ளிசா இருக்கினம். அந்தக்காலத்தில இப்படிப்பட்ட பொடியங்களோட மொக்கனுக்கு நல்ல பழக்கம். அரியால ஆறுமுகத்தாருண்ட பொடியன் எண்டு நினைக்கிறன். கிருபா எண்டுதான் அவனச் சொல்லுறது. கொஞ்ச காலம் ஒளிச்சு ஓடிப்போய் இந்தியாவில இருந்தவன். அங்க சாப்பாட்டுக்காக் கொதிக்கிற சென்னை றோட்டுல றிக்ஷா இழுத்தவன். பழக்கமில்லாத அவனுக்கு உள்ளங்கை புண்ணாப்போச்சு. பிடிபட்டாலும் பரவாயில எண்டு ஊருக்கு வந்தான். இப்பவும் அந்தப் புண் சரியா மாறேல்ல.

ஏன் இதை மொக்கன் சொல்ல வந்தான் எண்டால் கனபேர் அறியாத காரியம் பின்னால இருக்கு. தளபதி அண்ணற்ற மோனும் இஞ்ச பிடிச்சாலும் பிடிச்சுப் போடுவாங்கள் எண்டு இந்தியாவில போய் நிண்டவன். அப்பிடி நிண்டவங்களுக்கு இஞ்ச இருந்த தமிழரசு கட்சிக்காரர் கொஞ்சக் காலம் காசு அனுப்பினவை. அப்ப உடுவில் தருமலிங்கத்தார்தான் தமிழரசு கட்சியின்ர பொருளாளர். அவர் மூலமாகத்தான் காசு இந்தியாவுக்கு போனது. ஆனால் அந்த காசு அண்ணற்ற மோன்ர கையிலதான் போய் சேர்ந்தது. அவர் உல்லாசம் அனுபவிக்க வேண்டியதுதான். மற்ற பஞ்சப்பட்ட பொடியங்களுக்கு ஒண்டுமே போகாது. பசிக் கொடுமையிலதான் இவன் ஒருத்தன் றிக்ஷா இழுத்தான். இந்த கொடுமை எல்லாம் இனியும் இருக்கக் கூடாது. பரம்பரைத் தலைமைகள் இனியும் எங்களுக்கு வேண்டாம். இனி புதிய தலைமை ஒண்டுக்கு நாங்கள் வழி விடவேண்டும். ஏமாத்துக்காரரையும் வெறும் பம்மாத்துக்காரரையும் இந்த எலெக்ஷனுல கவிட்டுப் போடுவம். மக்கள் நினைச்சால் முடியாதது ஒண்டும் இல்லை. 56 இல தொடங்கி அவை சொல்லச் சொல்ல நாங்கள் கேட்டம். இனி நாங்கள் சொல்லப்போறதை அவைய கேட்கப் பண்ணுவம். வரதராசப்பெருமாளும் வந்திட்டார் எண்டு போனமுறை சொன்னனான். இனி கொஞ்சக்காலம் அவரும் இஞ்ச நிக்கப் போறார் எண்டு ஊரில கதைக்கினம். அவரும் பொடியனா இருக்கேக்க மக்களோட புழங்கி மக்கள் மத்தியில வேலை செய்தவர்தான்.

அவர் வசதியான குடும்பத்தில பிறக்கேல்ல. பலகாரம் சுட்டு கடையில குடுத்துத்தான் பள்ளிக்கூடம் போனவர், பல்கலைக்கழகமும் போனவர். பின்னேரம் வந்தும் அத்தான் செய்தவர். அதையெல்லாம் இந்த மொக்கன் மறக்கமாட்டான். தில்லிப் பிராமணிகள் அவர என்ன திருகுதாளத்துக்கு அனுப்பினாங்களோ தெரியேல்ல. ஆன்ால் அடிபட்டு, மிதிபட்டு எங்கன்ர கூட்டமைப்புகாரரால ஏமாத்துப்பட்டு நிக்கிற சனத்த மீட்டு எடுப்பதில அவரும் முன்னுக்கு நிக்கவேணும் எண்டு மொக்கன் கேட்கிறான்.

மொக்கியும் கேட்கிறாளாம். பழைய போராளிப் பொடியங்கள் எல்லாரும் ஒண்டுசேர்ந்து ஒற்றுமையா நிண்டா எங்கட சனத்துக்கும் ஒரு விடிவு வரும். நாங்களும் சாக முந்தி அதை கண்டுகொண்டு சந்தோஷமாக கண்மூடலாம். வரப்போற எலெக்ஷனுக்குப் பிறகு எங்கட பழைய தலைவர்மார் நல்ல பாடம் படிக்கப்போகினம் எண்டது மொக்கனுக்கு நிச்சயம். பாட்டொண்டு காதில கேட்குது. அதுவும் KP சுந்தராம்பாளின்ர கணீர் எண்ட குரல்ல கேட்குது.


**"காலம் கற்பித்த பாடத்தின் அடி தாங்க முடியாமல் தப்பித்து வந்தானம்மா பாவம் தனியா நின்றானம்மா..."**

**மொக்கன் இப்பவும் கேட்கிறான், இனியும் கேட்பான்.**

# ஸ்மார்ட் போனின் தீர்க்கதரிசனம்!

நீங்கள் ஐபோன் அபிமானியோ, அண்ட்ரோய்ட் ஆர்வலரோ... அது அல்ல முக்கியம். ஸ்மார்ட் போன்களின் செயல்திறனிலும் ஆற்றலிலும் வளரும் வேகத்தை கண்டு வியக்காமல் இருக்கமுடியாது. நேற்று பார்த்த போன் இன்று அவுட்டேட்டாகி நாளைய போன் இப்போதே கைகளில் தவழும் காலத்தில் இருக்கிறோம். ஸ்மார்ட்போன் உலகில் இன்னும் கூட அதிசயங்கள் நிகழ காத்திருக்கின்றன. அந்தளவுக்கு தொழில்நுட்பம் பாஸ்ட் பார்வேர்டாகி கொண்டிருக்கிறது.

உள்ளங்கை கம்பியூட்டர்களாக வியக்கவைக்கும் ஸ்மார்ட் போன்களில் இந்த விஸ்வரூப வளர்ச்சிக்கு மூலக்காரணம் சின்னஞ்சிறிய சிப்புகள்தான் என்பது பலரும் அறிந்தது. ஆம், மூர் விதி என்று பிரபலமாக குறிப்பிடப்படும் அந்தக் கோட்பாடுதான் சிப்புகளின் அசுர வளர்ச்சிக்கு பின்னே இருந்து வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. சிப்களின் நாலு கால், எட்டு கால் பாய்ச்சலை மூர் விதி சரியாக கணித்துச் சொன்னதோடு, இப்போது பொன்விழா காண்கிறது என்பது வியப்பிலும் வியப்பு.




காலவெள்ளத்தில் தாக்குப் பிடித்து தொடர்ந்து செல்லுபடியாகி கொண்டிருப்பதுதான் அதிசயம்.

அதென்ன மூர் விதி? என்று கேட்கலாம். கார்டன் மூர் எனும் சிப் உலக முன்னோடி முன்வைத்த கருத்து இது. சிப் ஜாம்பவான் இன்டெல் நிறுவனத்தின் இணை நிறுவனரும் இவர்தான்.

கம்பியூட்டர் சிப்புகளில் பொருத்தக்கூடிய டிரான்சிஸ்டர்களின் எண்ணிக்கையானது ஒவ்வொரு ஆண்டும் இருமடங்காகி கொண்டே இருக்கும் எனும் கணிப்புதான் மூர் விதி என்று குறிப்பிடப்படுகிறது.

இதன் உட்பொருள் என்ன என்றால், சிப்களின் ஆற்றல் அல்லது வேகம் இரட்டிப்பாகிக் கொண்டே இருக்கும் என்பதுதான். அதுமட்டுமல்ல, சிப்களின் வேகம் இரட்டிப்பாகும் அதேநேரத்தில், அதை உருவாக்குவதற்கான செலவும் குறைந்துகொண்டே போகும் என்பது இதன் முக்கியமான உபகருத்து.

சிப்களும் மூரின் கருத்துக்கு மிகவும் விசுவாசமாக நடந்து கொண்டு மூர்த்தியின் சுருங்கி ஆற்றலில் பெருகிக் கொண்டு ஸ்மார்ட்போனிலும் ஸ்மார்ட் வாட்சிலும், பிட்னஸ் பட்டைகளிலும் விஸ்வரூபதரிசனம் காட்டிக்கொண்டிருக்கின்றன.

மூரின் கணிப்பில் ஒரு நம்ப முடியாத மாயம் இருக்கிறது. சிப்களின் வளர்ச்சி அவர் கணித்தபடியே முன்னேறிக்கொண்டிருக்கின்றன. இதனால் அவரது கணிப்பு நிரூபணமாகி இருக்கிறது. என்றால் இந்த வகை முன்னேற்றம் சாத்தியம் என்ற நம்பிக்கையை அளித்ததே மூரின் விதிதான். அந்த விதி தந்த தைரியத்தில்தான் சிப் நிறுவனங்கள் மேலும் மேலும் செயல்திறன் வாய்ந்த சிப்களை உருவாக்க முற்படுகின்றனர். சிப்களும் அவர்கள் சொல் பேச்சு கேட்டு இன்னும் எத்தனை லட்சம் டிரான்சிஸ்டர்களை வேண்டுமென்றாலும் கொடுங்கள் உள்ளே அடுக்கி கொள்கிறோம் என தங்களுக்குள் வைத்துக்கொள்கின்றன.

ஆக, சிப் உலகை இயக்குவதே மூர் விதிதான். இதனால்தான் கார்டன் மூரை கம்பியூட்டர் உலகில் தலையில் வைத்து கொண்டாடுகின்றனர்.

ஆரம்ப கால கம்பியூட்டர் எப்படி இருந்தன தெரியுமா? என்று கேட்டு ஒரு பெரிய அறையை அடைத்துக்கொண்டிருந்தன என்று விவரிக்கப்படும் மெயின்பிரேம் கால கம்பியூட்டரை கொஞ்சம் நினைத்துப்பாருங்கள். அதுகூட கற்கால சங்கதி விட்டுவிடுங்கள். பத்து, பதினைந்தாண்டுகளுக்கு முந்தைய டெஸ்க்டாப் கம்பியூட்டர்களை நினைத்துப் பாருங்கள். மெயின்பிரேமுடன் ஒப்பிட்டால் டெஸ்க்டாப் கம்பியூட்டர்கள் சூப்பர் கம்பியூட்டர்கள் என்று சொல்ல வேண்டும்.

இப்போது கையில் இருக்கும் ஸ்மார்ட்போனை அருகில் கொண்டு வைத்தால் டெஸ்க்டாப் கம்பியூட்டர் மிரண்டுவிடும். இந்தத் திறன் பெருக்கத்திற்கு மூல காரணம் சிப்களின் வளர்ச்சிதான். இதுமட்டுமா, மெமரி கார்டு முதல் சென்சார் வரை சின்னஞ்சிறிய சிப்புக்குள் பேராற்றல் ஒளிந்து கொண்டிருக்கின்றன.

இந்த மாற்றத்திற்கு பிறகும் மூர் விதி தாக்குப்பிடித்து நின்றிருக்கிறது. இப்போது பொன் விழாவும் காண்கிறது. 50 ஆண்டுகளாக தொழில்நுட்ப உலகின் அடிப்படை உந்துசக்தியாக இருந்துவருகிறது.

1969இல் செலுத்தப்பட்ட ராக்கெட்டை இயக்கிய கம்பியூட்டர் சிப்பைவிட தற்போது நவீன காரில் உள்ள நேவிகேஷன் அமைப்பிற்கான சிப் 1.8 மில்லியன் மடங்கு வேகமானது என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். அதேபோல ஐபோன் நவீன சிப் 1975 ஐபிஎம் கம்பியூட்டரைவிட ஒரு மில்லியன் மடங்கு ஆற்றல் கொண்டிருக்கிறது. ஐபிஎம் கம்பியூட்டரின் அளவு கிரிக்கெட் என்றால் ஐபோனில் அளவு நகத்தின் அளவுதான் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். எல்லாம் மூர் விதியின் மகிமைதான் காரணம்.

# மரண தண்டனை சாதித்தது என்ன?

**மன்னர்** ஆட்சியில் இருந்து இன்றைய மக்கள் ஆட்சிவரை குற்றம் கண்டு பிடிப்பதும், குற்றங்களுக்குத் தண்டனை வகுப்பதும், நிறைவேற்றுவதும், வழமையாக இருந்துவருகிறது. எது குற்றம் எது குற்றம் இல்லை என்பதை வகுப்பது யார்? தண்டனை வகுப்பாளர்கள் குற்றம் செய்யாதவர்களாக இருந்தார்களா? இத்தண்டனைகளால் குற்றங்கள் குறைக்கப்பட்டனவா?

தண்டனைகள் வேண்டாம் என்றால் மாற்றுவழி என்ன? நீதிமன்றங்கள்





எதற்கு? குற்றங்களே சட்டமாக்கப்பட்டால் குற்றங்களே நடக்காது இருக்குமல்லவா? சமூகத்தில் தண்டனைகளின் பங்கு என்ன? இது நல்லதா கெட்டதா? ஆய்வு கொள்கிறது இப்படைப்பு. மயூரன் சுகுமாரன் இலங்கைத் தமிழ் வம்சாவளி சேர்ந்த லண்டனில் பிறந்த ஆஸ்திரேலியக் குடிமகனாவார். இவர் 17.4.2005இல் தனது 24ஆவது பிறந்தநாளன்று அன்ரூ என்ற இன்னுமொரு ஆஸ்திரேலிய குடிமகனுடன் போதைப்பொருள் கடத்தியதாகக் கைது செய்யப்பட்டார். 17.02.2006இல் இந்தோனேசிய நீதிமன்றத்தால் மரணதண்டனை தீர்ப்பானது.

இதை எதிர்த்து மேன்முறையீடு செய்த போதும் 2011இல் மரணதண்டனைதான் தீர்வு என்பது உறுதியானபின் 29.04.2015ல் அதாவது அவரின் 34ஆவது பிறந்தநாளின் பின் 11நாட்களுக்குப்பின் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

இவர் பிடிபடும்போது அலட்சியமாக இருந்த எம்சமூகம், அனைத்துலகம் மரணதண்டனை எனத் தீர்ப்பு அளிக்கப் பட்டபோதுகூட வாழாதிருந்தது. மரண தண்டனை நிறைவேற்றும் காலம் நெருங்கியதும் தன் பார்வையின் கோணத்தை மாற்றிக் கொண்டது.

இரக்கம், காருண்யம், அன்பு, பாசம், நீதி, நேர்மை என்ற உணர்வூற்றுக்கள் பீறிடத் தொடங்கின. மரணதண்டனை என்ற செயற்பாட்டின் பின்னால் ஏதோ ஒரு தாங்கமுடியாத தாக்கு சக்தி உள்ளது என்பது புலனாகிறது. இந்த தாக்குசக்தியை வைத்தே குற்றங்களைத் குறைந்துவிடலாம் என்று சட்டம் நம்புகிறதா?

மனிதசமூகத்தையே கெடுக்கும் போதைப்பொருட்களை மயூரன் கடத்திப் பிடிபட்டபோதும், மரணதண்டனை எனத் தீர்ப்பளித்தபோதும் தண்டனை சரியானது எனக் கூறியவர்கள் மரணதண்டனையை நிறைவேற்றும் நாள் நெருங்கியபோது தம்கருத்துக்களை கருணையாக மாற்றியவர்கள் பலர் உண்டு.

இது எமக்குக் காட்டும் சமிஞ்ஞை என்னவெனில், தண்டனை தேவை என்பதில் எந்தச் சந்தேகமும் அற்ற சமூகம் மரண தண்டனையை ஏற்க மறுக்கிறது. மரணம் தண்டிக்கப்படுபவர்களை அச்சுறுத்தாத போதிலும் பார்ப்பவர்கள், கேட்பவர்களை அச்சுறுத்துகிறது. இதன் விளைவே மரண தண்டனைகள் தொடர்ந்து நிறைவேற்றப் படுவதற்குக் காரணமாக உள்ளது.

இனி மரணதண்டனை பெற்ற அனைவரும் குற்றவாளிகளா என்ற கேள்விக்கு ஆம் என்று யாராலும் அறுதியிட்டுச் கூற இயலாது. கொலை செய்வது குற்றம் என்று எந்தச் சட்டம் சொல்கிறதே அதே சட்டம்தான் கொலை செய்ய மரணதண்டனையை ஏவுகிறது.

இன்று நடைமுறைப்படியும், சட்டப்படியும் பிழையான அனைத்தும் நாளை, எதிர் காலத்தில் சரியென அமைகிறது. இன்று சட்டவிரோதம் எனப்பட்டது நாளை சட்டமாகும். ஆக, சமனிலையற்ற உறுதியற்ற சட்டமானது அறுதியும் உறுதியுமாக உயிரை எப்பது எப்படி நியாயமாகும். பூமி உருண்டை என்ற விஞ்ஞானியை தூக்கிலிட்டார்கள்.

இறுதியில் பூமி உருண்டை என்பதே முடிவான ஒன்றாகியுள்ளது. தண்டிக்கப்பட்ட விஞ்ஞானிக்கும், அவருடன் கொல்லப் பட்டவர்களுக்கும் என்ன பதில் சொல்லப் போகிறார்கள். இது திட்டமிட்டு நடத்தப் பட்ட படுகொலைகள்தானே?

அவர்கள் மரணதண்டனைக்கு உட் படுத்தப்படாது இருந்திருந்தால் சிறையில் இருந்தாவது தமது கூற்று சரி என நிரூபித்திருப்பார்கள். சிலவேளை இன்னும் புதிய கண்டுபிடிப்புக்களை உலகிற்குத் தந்திருப்பார்கள். நாம் இன்னும் எத்தனையோ படிகள் முன்நோக்கி இருந்திருப்போம்.

சமூகமும் சட்டமும் இதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியதா? சரி தண்டித் தவர்களை யார் தண்டித்தார்கள்? நீதி என்றபெயரில் எத்தனை அநீதிகள் நடந்தேறியுள்ளன? சட்டமோ தண்டனைகளோ திருத்தப்படலாம் மரணதண்டனை கொடுத்தால் கொடுத்ததுதான்.

சமூகநலனுக்காக மரணதண்டனை என்ற மாயப்பூச்சு சமூகத்தில் எந்த நல்மாற்றங்களையும் உருவாக்கவில்லை. இது வெறும் சமூகத்தினதும் சட்டத்தினதும் பழிவாங்கலாகவே உள்ளது.

எங்கு மிகக் கடுமையான சட்டங்கள் கடைப்பிடிக்கப்படுகிறதோ, அங்கேதான் சட்டமீறல்களும் அத்துமீறல்களும் அதிகமாக உள்ளன. பயமுறுத்தி ஒரு மனிதனையோ, ஒரு சமூகத்தையே திருத்தி விட முடியாது. மயூரன் போன்றவர்களுக்கு பிடிபட்டால் என்ன தண்டனை என்பது நன்றாகவே தெரியும். அதனால் அவர்கள் கடத்தலைச் செய்யாது இருந்தார்களா? இல்லையே...

குற்றங்கள் எப்படி உருவாகிறது என்பதை அறிந்து அதைத் தடுப்பதன் மூலமாகவே குற்றங்களைத் தடுக்க முடியும். தண்டனைகளால் குற்றங்களை, சட்டமீறல்களைத் தடுக்கமுடியாது.

குற்றத்தின் சட்டமீறல்களின் காரணிகளாக அமைவன: வளர்ப்பு, சூழல், தொடர்பு, வாய்ப்பு. பிள்ளைகளை ஒழுங்காக வளர்ப்பதற்கான அறிவு பெற்றோர்களுக்கு அரசால் கொடுக்கப் படுகிறதா? இல்லை.

சூழல், தொடர்பு, வாய்ப்பு எப்படி உருவானது? இவற்றை உருவாக்கிக் கொடுத்ததே சமூகமும், சட்டமும்தானே. இப்படி இருக்கும்போது முழுப்பிழையையும் ஒரு தனிமனிதனில் போட்டு அவனின் வாழ்வை விலைமதிப்பற்ற உயிரைக் பறிக்கிறீர்கள்.

போதைவஸ்துப் பாவிப்பவர்களுக்கும், கடத்துபவர்களுக்கும், விற்பனை செய்பவர்களுக்கும் மரணதண்டனை கொடுத்து வரும் இதே இந்தோனேசியாவில் தான் 14 நிமிடத்துக்கு ஒருவர் போதைவஸ்துப் பாவித்து இறக்கின்றார்கள்.

இவர்களின் மரணதண்டனைகள் செய்த நற்கைங்கரியம் என்ன? போதைப்பொருள் என்று கருதினால் கோப்பி, தேநீர், சிகரெட் எல்லாமே தொங்கி வாழச்செய்யும் போதைப் பொருட்களே. சிகரெட் பிடிப்பது உடலுக்குக் கேடு என்று சிகரெட் பெட்டியில் எழுதிவிட்டு விற்பனையை அனுமதித்து பணம் பண்ணுகிறார்கள். அதேபோல் போதைப்பொருளுக்கும் செய்யலாமே.

மது செய்யும் அதே வேலையைத்தான் போதைவஸ்துக்களும் செய்கின்றன. போதைவஸ்துப் பாவனையின் தாயாக அமைவது மது. மதுவே வல்லுறவு வன்கொடுமை பாலியல் வல்லுறவு போன்ற கொடுமையான காரியங்களுக்குத் துணைபோகும்.

போதைவஸ்து உட்கொண்டவர் மூளை மனத்துடன் அது நின்றுவிடும். அந்த வஸ்துக்கிடைக்காதபோது அதைத்தேடியே வேகம் கொள்வார்களே தவிர போதைவஸ்துப் பாவித்தவர்கள் பாலியல் வல்லுறவு கொள்வதில்லை. இதன் தாக்கம் மூளைக்கு மட்டுமுரியதே தவிர உடல்ரீதியானது அல்ல.

சமூகத்தின் நீதி நீதியற்றே இருக்கிறது. இதற்காக போதைவஸ்துக்களைப் பாவியுங்கள் என்று கூறவில்லை. சமூக அக்கறை இருந்தால் மற்றை தங்குதன்மை கொண்ட வஸ்துக்களையும் தடுத்து நிறுத்துங்கள்.

மரணதண்டனைக்கெதிரான மாற்றுவழி என்ன? மாற்றுவழி என்பது சிந்திக்கப்பட வேண்டியது. ஆனால் மரணதண்டனை ஒருபோதும் ஒரு நல்ல மனிதனையோ சமூகத்தையோ உருவாக்காது என்பது ஐயம் திரிபற்றது.

மரணதண்டனை வழங்கப்படும் நாடுகளில்தான் குற்றங்கள் அதிகமாக நடக்கிறது. குற்றச்செயல்களில் ஈடுபடுவர்கள் எவரும் தாம் பிடிபடுவோம் என்று எண்ணிச் செய்வதில்லை. செய்தபின்னர் வருந்திப் பிரயோசனமும் இல்லை.

இம்மரண தண்டனைகள் சாதித்தது என்ன? மயூரனுடன் கொலை செய்யப்பட்டவர்களை மட்டுமா சட்டம் தண்டித்தது? இவர்களை நேசித்த உறவுகள், நட்புகள், அனைவரையும் சேர்த்தல்லவா தண்டித்தது. மயூரனுக்கு மரணதண்டனை அது முடிந்து விட்டது, அவனும் இறந்துவிட்டான்.

ஆனால் அவன் குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கு, நண்பர்களுக்கும் கொடுக்கப்பட்ட ஆயுள்தண்டனை அல்லவா இது எதற்கு? குற்றமே செய்யாதவர்களுக்குத் தண்டனை எதற்கு? இதைப் தூரவிருந்து பார்த்த நாங்களும் தண்டிக்கப்படுகிறோம். நான் செய்த குற்றம் என்ன?

தண்டனை கொடுத்துக் கொடுத்தே சமூகத்தைத் திருத்தமுடியாதென அறிந்த மேற்குலகம் சிந்தித்து, விவாதித்து, அறிவுரீதியாக உணர்ந்தே மரண தண்டனையை இல்லாது செய்தது. இதனால் குற்றங்கள் குறைந்ததோ, இல்லையோ கொலைகள் குறைந்தது என்பதை அறுதியிட்டுச் சொல்லலாம்.

கொலை செய்வது குற்றம் அதற்கும் மரணதண்டனைதான் முடிவு எனும் இந்தோனேசிய இஸ்லாமியச் சட்டம் மயூரனையும் இவருடன் 8 பேரையும் கொன்றது.

24வயதாக இருந்தபோதே மயூரன் பிடிபட்டான். தெரிந்தோ தெரியாமலோ சமூகச்சூழலாலோ பணத்தாசையாலே இதை அவன் செய்தான். அன்று அவன் குற்றவாளியாகக் காணப்பட்டான் ஆனால் அவன் மனம்திருந்தி தனது நற்பங்களிப்பை சமூகத்துக்குக் கொடுத்தான். தன்னுடன் வாழ்ந்த சக சிறைக்கைதிகளுக்கு தற்காப்புக் கலை, கணினி பயிற்சி, சித்திரம் போன்றவற்றைப் கற்பித்தான். உணர்வுகளைச் சித்திரமாக வரையும் கலையை சிறையிலேயே கற்றுக்கொண்டான்.


இவனுடன் பிடிப்பட்ட அன்ரூ என்பவரும் தன் பழைய காதலியை மணந்தார், திருந்தி போதகராக மாற விரும்பினார். இவர்கள் திருந்தி வாழ்ந்த போதே சட்டம் அவர்களைத் தண்டித்தது. குற்றவாளியாக உள்ளபோது தண்டிக்காத சட்டம் அவர்கள் திருந்தி வாழும்போதுதானே தண்டித்தது.

ஒவ்வொரு மனிதனும் விலை மதிப்பற்ற வளங்களையும், சக்திகளையும் கொண்டவர்கள். மரணதண்டனை என்பது மாற்றுச் சிந்தனையற்ற, மூளைவளமற்ற மனிதர்களாலும் அரசாலும் நிறைவேற்றப்படும் ஒரு துர்காரியமே. யார் குற்றவாளி? பிடிபட்டபின்னர்தானே ஒருவன் குற்றவாளியாகிறான்.

அன்று தண்டனை அளிக்கும், தண்டனை நிறைவேற்றும் கூடங்களாகவே அன்று சிறைச்சாலைகள் இருந்தன. இன்று அவை சமூகத்துக்கு ஒவ்வாதவர்களை தனியே பிரித்து அவர்களை சமூகத்துக்கு ஏற்ற மனிதர்களாக மாற்றும் கோவில்களாகவே சிறைகள் இன்று அறிவுஜீவிகளால் பார்க்கப்படுகிறது.

நன்றி : இணையம்

# தலைமுடி வளர்வதை வைத்து மாரடைப்பை அறியலாம்



மாரடைப்பு ஏற்படுவதை முன் கூட்டியே தெரிந்துகொள்வது கடினம். ஆனால் இத்தாலி விஞ்ஞானிகள் தலைமுடிமூலம் முன்கூட்டி கண்டுபிடித்துவிடலாம் என்று கூறுகிறார்கள். இது சம்பந்தமாக இஸ்ரேல் மோயர் மருத்துவ கல்லூரி விஞ்ஞானிகள் ஆய்வு நடத்திவந்தனர்.

உடலில் கார்டிசாலின் என்ற ஒரு வகை என்சைம் சுரப்பது உண்டு. இது தொடர்ந்து அதி-கமாக சுரந்தால் மாரடைப்பு ஏற்படும். உமிழ்நீர், சிறுநீர், இரத்தம் ஆகியவற்றின்மூலம் கார்டிசாலின் சுரப்பதை கண்டு பிடிக்கலாம். ஆனால் இவற்றின் மூலம் துல்லியமாக கண்டுபிடிக்க முடியாது. ஏனென்றால் இவற்றின் மூலம் சோதனை நடத்தும் போது குறிப்பிட்ட அந்தநேரத்தில் சுரக்கும் கார்டிசாலின் அளவை மட்டுமே கண்டுபிடிக்க முடியும்.

ஆனால் கார்டிசாலின் எப்போதும் ஒரே சீராக சுரந்துகொண்டிருக்காது. ஆனால் தலைமுடிமூலம் கார்டிசாலின் சுரப்பை சரியாக கண்டுபிடிக்கலாம். ஒவ்வொரு மாதமும் தலைமுடி 1 சென்ரி மீற்றர் நீளம் வளரும். 6 மாதத்துக்கு 6 சென்டிமீற்றர் வளரலாம்.

எனவே 6 சென்ரி மீற்றர் தலைமுடியை வைத்து ஆய்வு செய்தால் 6 மாதத்தில் உடலில் எவ்வளவு கார்டிசாலின் சுரக்கிறது என்பதை கண்டுபிடித்துவிடலாம். இதன்மூலம் ஒருவருக்கு மாரடைப்பு வருமா?, இல்லையா? என்பதை கண்டுபிடித்துவிடலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# புற்றுநோய் சிகிச்சைக்கு உதவும் புதிய சாதனம் உருவாக்கம்




கொடிய உயிர்க்கொல்லி நோயான புற்றுநோய்க்கு சிகிச்சை வழங்கக்கூடிய சாதனம் ஒன்றினை **MIT (Massachusetts Institute of Technology)** ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

புற்றுநோயைக் ஓரளவிற்கு கட்டுப்படுத்தக்கூடிய, ஏற்றுக்கொள்ளப்பட்ட சில சிகிச்சை முறைகள் காணப்படும் நிலையிலேயே இப்புதிய சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சாதனம் உடலினுள் பொருத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், புற்று நோய் சிகிச்சைக்காக வழங்கப்படும் பல்வேறு மாத்திரைகளின் திறன்களையும் மதிப்பிடும் திறனையும் கொண்டுள்ளது.

மேலும் இதனை 24 மணி நேரத்திற்கு மட்டுமே உடலில் பொருத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மரணிக்கும் வயதை கண்டுபிடிக்கலாமா?



உயிரினங்களின் வாழ்வில் மரணம் எப்போது வரும்? என்பது மர்மமாக உள்ளது. ஆனால், அதையும் இரத்தப் பரிசோதனை மூலம் அறியமுடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மனிதர்கள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களிலும் குரோமசோம்கள் முக்கிய பங்குவகிக்கின்றன. இவற்றின் முனைகளில் "டெலோ மர்ஸ்" என்ற மூலப்பொருள் உள்ளது. செல்கள் உடைந்துகொண்டே வருவதால் உடல் உறுப்புகள் வளர்ச்சி பெறுகின்றன. அவ்வாறு செல்கள் உடைந்து உடல் வளர்ச்சி அடையும்போது "டெலோ மர்ஸ்"சின் வடிவமும் குறைந்து கொண்டே வருகிறது.

இதன்மூலம் ஒரு உயிரினத்தின் வயதையும், அதன்மூலம் அவற்றின் வாழ் நாளையும் கணிக்க முடியும். அந்த அடிப்படையில், செல்ஸ் நாட்டில் உள்ள கவுசின் தீவில் வாழும் 320 பாடும் பறவைகளிடம் இச் சோதனை மேற்கொள்ளப் பட்டு கண்டறியப்பட்டது.

அடுத்ததாக, இச் சோதனை விலங்குகளிடமும், மனிதர்களிடமும் நடத்தப்பட உள்ளதாக கிழக்கு ஆங்லியா பல்கலைக் கழக பேராசிரியர் டேவிட் ரிச்சர்ட்சன் தெரிவித் துள்ளார்.

## கால் ஆணி மறைய...

கால் ஆணி ஏற்பட்ட உடனேயே பூண்டை நசுக்கி அதன் சாறை காலில் ஆணி இருக்கும் இடங்களில் தடவி வரவும்.

இரவுப் பொழுதில் பூண்டை நசுக்கி காலில் வைத்து துணியால் கட்டுப்போட்டுவிட்டு காலையில் எடுத்துவிடலாம்.

இதுபோல் ஒரு வாரம் செய்துவந்தால் கால் ஆணி நிவாரணம் கிடைக்கும்.

மேலும், மல்லிகைச்செடியின் இலையை இடித்து அதன் சாறை எடுத்து பாதத்தில் பற்றுப்போடுங்கள்.

பாதத்தில் கால் ஆணி மேலும் பரவாமலும், இருந்த இடம் தெரியாமலும் போகும்.

மஞ்சள் ஒரு துண்டு, வசம்பு ஒரு துண்டு, மருதாணி ஒரு கைப்பிடி அளவு எடுத்து விழுதாய் அரைத்து, கால் ஆணிகள் மீது தொடர்ந்து 21 நாட்கள்வரை பூசிவர, கால் ஆணிகள் அனைத்தும் மறையும்.


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
நாளிதழ்

இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்தும்

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

புது அம்சங்கள்...
புது மாற்றம்...
புதுப் பொலிவு...
புதுச் சுவை...
புது விலை...

ஐந்தாம் பக்கம்
கல்விமுரசு
வெள்ளிக்கிழமைக் கொசிப்பு
ஊரும் உலகமும்
சிறுவர் முரசு
வியாழன் வினோதம்
சனிக்கிழமை காரம்
பரிசுப் போட்டிகள்
மருத்துவம்
செவ்வாய் சித்திரம்
இலக்கியம்
விளையாட்டு உலகம்



ரூ.20/= மட்டுமே

புலமைப் பரிசில் மற்றும் 3 ஆம் 4 ஆம் தர மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

வாரமொரு சிறு கதை

# மாமியார் மருமகள்

பால் கண்ணன்

சிவராமன், விரகதியுடன் காணப்பட்டான். குடும்பத்தில், அப்பப்போ சின்ன சின்ன பிரச்சினைகள், வானவில் போல் வந்தாலும், உடனே, மறைந்துவிடும். ஆனால், இப்போது, ஒரு வாரமாகியும் மனைவிக்கும், அவனுக்கும் ஏற்பட்ட பிரச்சினை, ஒரு முடிவுக்கும் வரவில்லை. மனைவியின் சுயரூபம், விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.

ஜெயதேவிக்கு, மாமியார் என்றாலே, விஷம் பார்க்கும் போதெல்லாம், முகச்சுளிப்பு. இருவருக்கும் சண்டை வந்து விட்டால், ஜெயதேவிக்கு, வாயிலிருந்து தகாத வார்த்தைகளாகத்தான் வரும். மருமகளின் குணம், பேச்சு, நடவடிக்கைகள் குறித்து, புலம்பி தீர்ப்பாள் சிவராமனின் அம்மா சாந்தம்மாள்.

"ஏண்டா சிவராமா... உன் பொண்டாட்டி வாய்க்கு, பெரிய பூட்டா போடுடா. அவ பாட்டுக்கு, எக்குதப்பா மரியாத இல்லாம, பேசுறாடா..." மகனிடம், ஆவேசப்பட்டாள்.

"ஏன்மா, இன்னிக்கு என்ன நடந்திச்சு?" என்று, கேட்டான் சிவராமன்.

"நீ புதுசா வாங்கிட்டு வந்திருக்கிற 'வோஷிங் மெஷின்'ல, என் துணிமணிகள போடக் கூடாதாம், உன் பொண்டாட்டி சொல்றா.

"எனக்கென்ன, நிறைய துணிமணிகளா கொட்டிகிடக்கு, இருக்கிறதே நாலு சேல. அதுல ரெண்டு சேல தான் அழுக்கு. 'சோப்பு வாங்கி, கையால துவைச்சு போடுங்க'ன்னு, என் சேலைய, தூக்கி எறிஞ்சிட்டாடா..." என்று சொன்ன சாந்தம்மாளின் கண்கள், கண்ணீரை சிந்தின.

"சரி, நான் பாத்துக்கிறேன்..." என்று சொல்லி, சமையல் அறைக்கு போனான். இது குறித்து, மனைவியிடம் கேட்டதற்கு,

"வோஷிங் மெஷின்ல அளவுக்கதிகமா துணிகள போடக் கூடாது. ரெண்டு சேலைதானே, கையால துவைத்து போட்டுக்கிட்டா என்னவாம்... இதச் சொன்னதுல, என்ன குத்தத்த கண்டுட்டாங்க?" என்றாள் ஜெயதேவி.

"ஏய்... அம்மாவுக்கு ரொம்ப வயசாயிடுச்சு. அவங்களால துவைக்க முடியாதுன்னுதானே, இந்த வோஷிங்மெஷினையே வாங்கிட்டு வந்தேன்..."

"ஓ அப்படின்னா... உங்க அம்மா மேல இருக்குற கரிசனத்தாலதான், வாங்கிட்டு வந்துருக்கீங்க... எனக்காக இல்லே. அப்படித்தானே?"

"அப்படியில்ல தேவி. நீயும், இந்த வீட்ல எல்லா வேலையயும் இழுத்துப்போட்டு பாக்குறே. அந்த சுமைய குறைக்கிறதுக்கும், வயசான அம்மாவிற்கும் சேத்து தான்... நம்ம துணிகளோடு சேத்து, அவங்க துணியை போடுறதுனால உனக்கு என்ன கஷ்டம்? மெஷினு தானே துவைச்சு, அலசப்போகுது. சரி சரி... எனக்கு, சூடா ஒரு கப் கோப்பி கொண்டுவா..." என்று சொல்லி, அன்றைக்கு வந்த நியூஸ் பேப்பரை எடுத்து, படிக்க ஆயத்தமானான்.

"உங்க அம்மாவுக்காகத்தானே பரிஞ்சிகிட்டு பேசுறீங்க... அவங்க கிட்டயே கோப்பி போட்டுத்தர சொல்லுங்க..." என்று, முகத்தை சுளித்து, "டிவி"யை ஆன் செய்தாள் ஜெயதேவி.

பாலைக் குடித்துக்கொண்டு இருந்த, அவர்களின் ஐந்து வயது மகன், ஷூகத்தவறி பாலை ஊற்றிவிட்டான். இதை பார்த்ததும், "சனியன்... போதாக்குறைக்கு இது வேறே..." என்று கடிந்து, தலையில், 'ணங்'கென்று குட்டினாள் ஜெயதேவி. வலியில் அவன், சத்தம் போட்டு அழுதான். அதையும் பொருட்படுத்தாமல், மூச்சிரைத்தபடி வெறுமனே, "டிவி"யை பார்த்தாள்.

சிவராமன், அழுத பிள்ளையை தூக்கி, தோளில் போட்டு, மொட்டை மாடிக்கு போனான்.

சிந்தி கிடந்த பாலை, சுத்தம் செய்தாள் சாந்தம்மாள்.

மறுநாள்,

சிவராமன் அலுவலகத்திற்கு [illegible] பின்பு, குழந்தையை ஸ்கூலில் விட்டுட்டு, யாருகிட்டேயும் சொல்லாமல் அவ அம்மா வீட்டிற்கு போய் விட்டாள் ஜெயதேவி.

கணவன் மற்றும் மாமியாரை பற்றி, தன் அம்மாவிடம் குற்றப் பத்திரிகை வாசித்தாள்...

"அம்மா... அவரு, அவங்க அம்மா பேச்சை தான் கேட்கிறாரு. என்னை மதிக்கிறதேயில்ல..."

"குடும்பமன்னா அப்படித் தாண்டி இருக்கும். நாம்தான் கொஞ்சம் அனுசரித்துப் போகணும்..."

"இதுக்கு மேலேயும் அனுசரிச்சுப் போகணுமா... நான், எம்.எஸ்சி., பி.எட்., அவரு படிப்பில் குறைவு. எனக்கும், அவருக்கும் கொஞ்சம்கூட படிப்பு மேட்சாகல்ல. நான் அனுசரிச்சு போகலயா..."

"தேவி அனுசரிச்சு போறதுக்கு, படிப்பு ஒரு விஷயமில்ல. மாப்பிள்ளைக்கு தங்கக்குணம், அவரோட குணத்திற்காகத்தான் படிப்பு, அந்தஸ்து பாக்காம, அவருக்கு உன்னை கட்டி வச்சோம். இந்த படிப்பு விஷயத்த பெரிசாக்கி, உன் வாழ்க்கைக்கே உலை வச்சுக்காதடி..." என்று புத்திமதி செய்து, சமாதானப்படுத்த முயன்றாள் அம்மா.

"போம்மா நீ... அப்படியொரு, "ஈகோ" எனக்கிருந்தால், நீங்க ஒரு பேரனை பாத்திருக்கமுடியுமா... நான் வாழா வெட்டியாவுல, இந்த வீட்டுக்கு வந்திருப்பேன்..."

"அப்படியில்லடி... நீ, உன் புருஷன புரிஞ்சுக்கணும் காலையில வேலைக்கு போறவரு என்னைக்காவது லேட்டா வந்துருக்காரா, குடிச்சுட்டு வந்து உன்னை அடிச்சு கொடுமைப்படுத்துறாரா... சில ஆம்பளைங்க, மனைவிமீது பாசம் இருக்குற மாதிரி நடிச்சுட்டு, மத்த பொம்பளைங்ககூட ஊர் சுத்துவாங்க. அப்படிச் செய்யுறாரா. உன் முந்தானைக்குள்ள சுருண்டு கிடக்குற மனுஷன ஏண்டி அடிக்கடி குத்தம சொல்றே..."

"நீ சொல்றது சரிதான்ம்மா. ஆனா, வீட்ல ஒரு கிழவி இருக்கே அதத்தான், என்னால பொறுத்துக்க முடியல. எங்கேயும் போயி தொலையவும் மாட்டேங்குது..."

"சரி சரி... ஸ்கூல் விடுற நேரமாச்சு. புள்ளய கூட்டிட்டு வீட்டுக்கு போ..." என்று, அம்மா சொன்னதும், மனக்குழப்பத்தோடு, பள்ளிக்கூடத்தை நோக்கி நடந்தாள்.



போனான்.

"சிவராமா... ஏன் டல்லா இருக்க?" அலுவலக நண்பன் கார்த்திக் கேட்டான்.

"ஒண்ணுமில்லை..." சமாளித்தான் சிவராமன்.

"டேய், நானும் ஒரு வாரமா பாக்றேன்... பிரேக் டைமில எங்ககூட வர்றதில்லை. தனியா வர்ற, தனியா போற. என்னடா பிரச்சினை உனக்கு?" என்று, கேட்டான் கார்த்திக்.

"எல்லாம் பேமிலி மேட்டர் தான்டா. அலுவலகத்துக்கு வந்தா டென்ஷன். பரபரப்பு. வீட்டுக்கு போனா, பொண்டாட்டியோட தொல்லை. இந்த ரெண்டுக்கும் மத்தியில, நான் படுற அவஸ்தை இருக்கே... ரொம்ப கொடுமைடா. எங்காவது, கண்காணாத இடத்துக்கு, ஓடி போயிடலாமான்னு தோணுதுடா." சொல்லும்போதே, கண்கள் சிவந்து, கண்ணீர் கசிந்தது. சிவராமனுக்கு.

"நீ எதையுமே சுலபமா எடுத்துக்குவியே... என்னடா பிரச்சினை சொல்லு." என்றான்.

சிவராமன், தன் குடும்ப விஷயத்தை சொன்னான்.

"இதுக்குப் போயாடா கவலைப் பட்டுக்கிட்டு இருக்கே... நான் சொல்றபடி செய்யி. அப்பறம் பாரு, உன் மனைவி நடந்துக்கிறத." என்றுகூறி, யோசனையை சொல்ல ஆரம்பித்தான்.

சிவராமன் வீட்டுக்குள் வந்ததும், வராததுமா, "தேவி, நீ சீக்கிரமா ஏதாவது ஒரு ஸ்கூலுக்கு வேலைக்கு போகப் பாரு. என் ஒருத்தன் சம்பாத்தியத்தல, குடும்பம் நடத்துறது ரொம்ப கஷ்டமா இருக்கு." என்றான்.

"ஏன் நான்ரெண்டு [illegible] வேலைக்கு போகச் சொல்றீங்க?"

"அதான் சொன்னேனே வருமானம் பத்தலன்னு."

ஜெயதேவி அவனை முறைத்துப் பார்த்தாலும், யோசித்துப் பார்த்ததில், அவன் சொல்வது சரியென்று [illegible] படிப்புக்கேற்ற, பள்ளியில் [illegible] கொடுத்தாள்.

நிர்வாகம் ஏற்றுக்கொண்டது. [illegible] நாட்களுக்குப் பின், பள்ளியில் சேர்ந்தாள்.

ஜெயதேவி, வேலைக்கு போனபின், வீடு, பள்ளி என, கடிகாரம் சுமையாகிவிட்டது. இருந்தும் நான்கு மணிநேரமே பள்ளி என்றதில் [illegible] சுமை போல் தெரியவில்லை.

ஒரு மாதத்திற்குப் பின், பள்ளியில் மதிய உணவுவேளை ஆசிரியர் அறையில், "இன்னிக்கு, ரமா டீச்சர வரல" என்று சாப்பிட்டபடியே கேட்டாள் அறிவியல் டீச்சர்.

"அவ புருஷன் நேற்று கன்னாபின்னான்னு குடிச்சிட்டு வந்து, தகராறு செய்திருக்கான். இவ தட்டிக் கேட்டதுக்கு, அடிச்சிட்டாராம். அதனாலதான், இன்னிக்கு லீவு." என்று சொன்னாள் தமிழ் டீச்சர்.

"உங்களுக்கு எப்படி தெரியும் டீச்சர்?" கணக்கு டீச்சர் கேட்டாள்.

"ஒரு புத்தகம் அவங்ககிட்ட கேட்டிருந்தேன். அத மறக்காம எடுத்திட்டு வாங்கன்னு சொல்றதுக்காக, போன் செய்தேன். அப்ப சொன்னாங்க.

"இந்த புருஷன்மார்களே ரொம்ப மோசம் டீச்சர். கைநீட்டி அடிக்கிற அளவுக்கு கேவலமாயிட்டோமா நாம... தண்ணியடிச்சிட்டா, மிருகமாயிடுவாங்களா... ச்சே... எனக்கு ரமா டீச்சர நினைச்சா ரொம்ப வருத்தமா இருக்கு." என்று, பரிதாபப் பட்டாள் தமிழ் டீச்சர்.

[illegible]

[illegible] போரேஜோட பாத்துக்கிட்டு [illegible] முறையாகவே [illegible] பத்திரங்கள [illegible] என்று [illegible]

[illegible]

[illegible] மாதிரி [illegible] வந்துருச்சா [illegible] ஒரு [illegible]

[illegible]

[illegible] இருந்தேன் [illegible] இருக்கு [illegible] கணவன் [illegible] வழியில் போகாம [illegible] சுவருத எனக்கு தெரியாம போச்சே" என்று நினைத்தும் [illegible] பழக்கவழக்கத்தை நினைத்தாள்.

பழங்களை வாங்கியவள், அருகிலிருந்த ஒரு பேக்கரி ஸ்டோரில், ஹோர்லிக்ஸ் வாங்கினாள்.

[illegible]

[illegible] என்று, கேட்டான் [illegible]

[illegible] நாம வந்தும் வாழுறோம்." என்றாள் ஜெயதேவி.

மனைவியின் மாற்றத்தை அறிந்த சிவராமன், நண்பனை போனில் தொடர்புகொண்டு, "பொண்ணுங்க நாலு காசுக்குள்ளே முடங்கி கிடக்காம, வெளில போய், நாலு விஷயத்த தெரிஞ்சிக்கிட்டாத்தான் குடும்பத்துக்குள்ள வரும் பிரச்னைக தீரும்ங்கற உன் யோசனைக்கு, ரொம்ப நன்றி." என்றான்.

## நூல் விமர்சனம்

10 சிறு கதைகள் அடங்கிய இத் தொகுதி 84 பக்கங்களில் வெளிவந்தாலும் 2 பக்கங்கள் வெறிசாக விடப்பட்டுள்ளன.

முகப்பு, நூல் விபரம், சமர்ப்ப்ணம், ஆசியுரை, என் இதயத்தில் இருந்து, அணிந்துரை, வாழ்த்துச் செய்தி, வாழ்க! வளர்க! மாவடியானின் சேவடி வணங்கி, பொருடக்கம் மெண்டெ நினைச்சிருந்த சிவகுருவுக்கு ஆயிரம் ரூபா சாரா-ாயம் காசு ஆயிரம், கிடைச்ச நாள் முழுவியளத்தை நினைச்சாள் .தே சரசுக்கிழவிதான்.

கட்டிய தாலியை வேலியாகக் கருதாமல் அமையாக் கருதின அனுசாவைப் பயன்படுத்தி அண்ணன் கேசவன் அண்ணி அமுதாவும் சம்பளம் இல்லாக் கூலியை இழந்து முழிபிதுங்கினர். நண்பி சமியின் சந்திப்பும், சந்திப்புக்கான போதனையும் அனுசாவைப் புதிய வாழ்க்கைக்குப் புடமிடுகிறது தாலி ஒரு வேலி

### மிருசுவில் தமிழ் தாசனின்

# 'யதார்த்தம்'

## சிறுகதைகள்




இத்தியாதிகள் 15, பக்கங்கள் போனால் மீதி மா, பக்கங்களில் சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன.

சிறுகதைகளுக்கு இலக்கணம் இல்லாததால் வசதியாக எல்லாரும் தன்தன் போக்குகளில் எழுதி வருகின்றார்கள். மிருசுவில் தமிழ்தாசனினன் சிறுகதைகள் தனி உங்கள் விமர்சனங்களை என்னுடன் பகிர்ந்து என்னைச் சரியான திசையில் பயணிக்க வழி சமைப்பீர்களென எதிர் பார்க்கிறேன். என்னும் அவரது கதைகளுள் நுழைவோம்.

அவசரம் முதலாவது கதை நண்பன் வரதனின் புகைப்படம் அவனது சேவை நலன் பாராட்டுக்காகப் பத்திரிகையில் போடப்பட்டிருந்ததைப் பார்த்த பாலு மரணித்து விட்டதாக எண்ணி சடங்கில் கலந்து கொள்ளப் போகும் வரையான சோகம் ததும்பாமல் நகைச்சுவையாக முடிவையம் கொண்டதாக அமைந்துள்ளது.

அடுத்து பிள்ளையார் பிடிக்கப் போய் கதை ஆரம்பம் முதல் முடிவு வரை ஒரு கனவு போல காட்சிகள் மாறிக் கொண்டிருக்கின்றன.மாமன் காசு கேட்டு, நண்பன் உதவிகேட்டு, தாய் தகப்பன் மருந்துக்ள் கேட்டு தொடர்பு கொள்ளினம், லண்டனால் 12 வருடங்கள் கழித்து அறிவிக்காமல் வந்த சரவணனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. இளமை திரும்ப அனுப்பிய மருந்தில் அளவுக்கு அதிகமாகப் பாவித்ததால் தம்பியா தகப்பன் மாறி தொட்டிலில் கிடக்கக் காண்கிறான் சரவணன்.

முளுவியளம் கதையில் அசுரக் கிழவியில் முளிச்சுக் கொண்டுதொழிலுக்கென்ன எங்கு போனாலும் தரித்திர கதையில்.

நாகாக்க கதையில் வீம்புக்கு வேட்டை ஆடியவர் பத்து நாளாக மனைவி, பிள்ளைகளை அப்பாச் சீன்ரை செத்த வீட்டுக்கு அனுப்பி விட்டு சிறுகதை எழுதக்கருவுக்கு உருப்படி இல்லாமல் தனிமையில் தவிக்கிறார். அப்பாசி நினைவா-கவே மனுசன் சாப்பாடில்லாமல் பேயறைச்சு கிடக்கென்ற மனைவிக்குத் தெரியவில்லை.நாகாக்க அழகான சுருண்ட கேசத்தை இழந்து தொட்டந் தலையனாத் திரியப் போவதை?

வெளிநாட்டில் உழைத்த பொருந்தொகை பணத்தை பழய நண்பன் தியாகுவின் அனுசரணையுடன் வட்டிக்கு விட்டுழைத்த ஆனந்தன் ஊரில் கிடந்த காணி களேம் வித்துப் போடக் காரணமான தியாகு எதிர்க்கடை வைத்து துயோகியாக கழுத்தில் சருக்கிட்டு தப்பிய ஆனந்தன் மருத்துவ மனையில் அதே வாட் நான்காம் கட்டிலில் நஞ்சருந்திய தியாகு வைத்திஸ் கொலை வெறி கதை இவ்விதம்.

யதார்த்தம் நூல் மகுடக் கதை நளினியைக் காதலிக்க கலைச்சுத்த 'ரிகிறான் முரளி காந்தன் பிளையைச் சுட்டிக் காட்டியும் ஏற்க மறுக்கின்றான். அதேவேளை நளினி முரளியின் தங்கை சாருமதியுடன் சேர்ந்து போட்ட பிளான் சுமன் என்னும் காதலனை சாருவுக்கா உருவாக்கி முரளியை நளினியிடம் மன்னிப்புக் கேட்க வைக்கும் அளவுக்கு உருவாக்கின திட்டம் வெற்றி பெறுகிறது.

பார்வதியின் வேண்டுதலுக்காகச் சிவனாரும் சிவராத்திரி விரத தினத்தன்று ஆலயங்கயில் நடக்கும் சீட்டாட்டம் சினிமா தடியும் பொல்லடி தண்ணியடி, தூசுனைகளைக் கேட்டுக் கட்டுப் பேறியவர்களாக்க கைலயங்கரிக்கு திருப்புகிறார்கள். அவர்களது மனங்களுகம் வேளை எதையோல நோக்குகின்றன. என்றினார் போவோமா பூரோளம் சிறுகதையில் ஆசரியர்.

நட்டா ராசா நடடா நூலில் இறுதிக் கதை ஒரு மணிநேரம் நடந்து வந்து ஐயாத்துரையின் ரொயட்டா காரைச் செலுத்தும் சாரதி சின்னத்துரை மோட்டர் சைக்கிளில் வந்து நடக்கும் ஐயாத்துரையரை அதில் ஏற்றிச் செல்ல அழைக்கிறார். இனம் கண்டு விட்ட சாரதிக்கு மட்டுப்

— தேவி பாமலிங்கம். —

# பலதும் பத்தும்




எங்கடை தேசத்திலை ஏகப்பட்ட சங்கதிகள் நடக்குது.

ஆனாலும் பாருங்கோ அதுகள் ஒன்றும் சனங்களின் காதுகளில் விழுவதும் .ல்லை.

எவருடைய கண்களுக்கும் தெரிவதும் .ல்லை.

ஊடகப்பொய்களுக்குள் மயங்கிக்கிடக்கும் மகாசனங்களை தட்டியெழுப்ப யாருமில்லை.

உண்மைகளை உரைப்பதற்கு ஊடகங்களுக்கு திராணியுமில்லை.

19 வது திருத்தச்சட்டத்தை ஆகா ஓகோ என்று வாரவேற்று கூத்தமைப்பார் அறிக்கை விட்டிருக்கினம்.

நாடாளுமன்றத்திலை அந்த திருத்தச்சட்டத்தை ஆதரித்து கைகளையும் உயர்த்தியிருக்கினம்.

ஆனாலும் பாருங்கோ 19 வது திருத்தச்சட்டத்திலை தமிழரின் அரசியல் தீர்வுக்கு எதுவும் .ல்லை என்று அதே கூத்தமைப்புக்காரரே கூக்குரல் போட்டும் வருகினம்.

.திலை எது உண்மை என்று தெரியாமல் மாகாசனங்கள் குழம்பிப் போயிருக்கினம்.

கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பதும், கண்மூடித்தனமாக எதையும் எதிர்ப்பதும் மெத்தப்பிழை.

19 வது திருத்தச்சட்டத்தை முன்னாள் தமிழ் அமைச்சரான ஜனநாயக கட்சி தலைவரும் ஆதரித்து தனது கையையும் உயர்த்தியிருக்கிறார்.

ஆனாலும் பாருங்கோ அவர் அந்த திருத்த சட்டத்திலை .ன்னும் சில விடயங்களை சேர்க்க வேண்டும் .ன்டு நாடாளுமன்றத்திலை குரல் .டுத்திருக்கிறதை வரவேற்றகத்தான் .வண்டும்.

எந்தவொரு அரசியலமைப்பு சீர்திருத்தத்தை கொண்டு வந்தாலும் அதில் இ.நாட்டில் வாழுகின்ற சகல இன மத மக்களினதும் சம உரிமைகள் .காக்கப்பட வேண்டும்.

சுயாதீனமான வகையில் செயற்படும் 11 ஆணைக்குழுக்களை நியமிக்கும் அதிகாரம் கொண்ட அரசியலமைப்புப் பேரவை..யில் இன விகிதாசாரம் பேணப் பட வேண்டும். அரசியலமைப்புப் பேரவையில் குறைந்தது ஒரு தமிழரும் ஒரு முஸ்லிமும் இருப்பது உறுதி செய்யப் படல் வேண்டும்.

ஆணைக்குழுக்களின் உறுப்பினர் களையும் தலைவர்களையும் அரசியல் அமைப்புப்-பேரவை ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யும்போது "பன்முகத் தன்மை" பேணப்படுவதோடு "இன விக 'தாசாரமும்" பேணப்படல் வேண்டும்.

தேர்தல் ஆணைக்குழு அல்லது தேர்தல் ஆணையாளர் தேர்தல் சட்ட விதிகளையும் தேர்தல் ஆணையாளரினால் அறிவிக்கப்படும் ஒழுங்குமுறைகளையும் மீறுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக பாராளுமன்றம். தேர்தல் ஆணையாளரின் ஒழுங்கு விதிகளை மீறுவோருக்கு எதிரான தண்டங்கள் தொடர்பான சட்டதிட்டங்களை ஆக்க வேண்டும். அரசியலமைப் பின்கீழ் ஏற்படுத்தப்பட்ட மேல் நீதிமன்றங்கள் இவ்வாறான வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகார வரம்பெல்லை உடையதாக அரசியலமைப்பு மாற்றியமைக்கப் படல் வேண்டும்.

ஜனாதிபதி உயர்நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் போது குறைந்த பட்சம் இரண்டு தமிழரும் இரண்டு முஸ்லிம்ம் அந் நீதிபதிகளின் குழாமில் இருப்பதனை உறுதிசெய்தல் வேண்டும்.

19வது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள 11 ஆணைக்குழுக்களுக்கு மேலாக "இன மற்றும் சமய நல்லிணக் கத்திற்கான" ஆணைக்குழு ஒன்றும் அமைக்கப்படல் வேண்டும். இவ் ஆணைக்குழு இன மற்றும் மத நல்லிணக்கத்தைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு இனமத நல்லிணக்கத்திற்குக் குந்தகமாகச் செயறபடுவோர் மீது சட்டநடவடிக்கை எடுப்பதற்கும் அதிகாரம் கொண்டதாக இருத்தல் வேண்டும். கயானா நாட்டின் அரசியல் அமைப்பில் இவ்வாறான ஏற்பாடு உள்ளது. விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் கொழும்பில் நடந்த ஆர்ப் பாட்டம் ஒன்றில் இனங்களுக்கிடையே முரண்பாடுகளை தூண்டக்கூடிய வகையில் தேசியக் கொடியினை மாற்றியமைத்து அரசியல் யாப்புக்கு முரணான வகையில் பயன்படுத்தியமை கண்டனத்திற்குரியது. இதுபோன்ற செயற்பாடுகள் தொடராமல் கட்டுப்படுத்துவத்ற்கு மேற்குறிப்பிட்ட ஆணைக்குழு அவசியம்.

அரசியலமைப்பு சீர்திருத்த சட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளை தீர்ப்பதற்கான எந்த வித முன்மொழிவுகளும் இல்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தமிழ் பேசும் மக்களின் நியாயமான அர்சியல் அபிலாசைகள் என்பது ஐக்கிய இலங்கையின் இறைமைக்கு எதிரானது அல்ல

அரசியலமைப்பின் 13 வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப படுத்தி. அதை மேலும் செழுமைப்படுத்தி அதிலிருந்து தொடங்கி அர்சியலுரிமை பிரச்சினைக்கு தீர்வு காண்பதே எமது விருப்பமாகும்.

இதையே நாம் நடைமுறைச் சாத்தியமான வழிமுறையெனக் கருதி நீண்ட காலமாகவே அதை வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

ஆகவே 13 வது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இதுவரை அடையாளம் காணப்பட்ட

மடத்தடியான்



நட்சத்திரங்கள் கூட கண்
சிமிட்டி கேலி செய்கின்றன!

நிலாவும் உலா வந்து
நகைக்கிறது! வா அசுரனே!
பிரிவின் பின்னர் உறவின்
வேகம் உன்னதாமா
இருக்கும்!

நீயும் நானும்
ஒருடலாய்
ஒடுங்கியபோது
எட்டிப் பார்த்து
வெட்கப்பட்டன
விண்மீன்கள்!

இன்று, படுக்கையில்

'எல்லாவற்றையும் தந்துவிட்டு
போனவனே, புதிதாக எதனை
எனக்குத் தரப்போகிறாய்?

விடிவதற்குமுன்னர் வந்துவிடு!
நீ வராத போது சூரியன் வந்தும்
என்குக விடியாது! நீ இல்லாத
போது பகல் முழுவதும்
இருட்டாகவே இருக்கும்!

நீ அருகில் இல்லையானால்
சொர்க்கம் கூட நரகம் தான்!
ஏய் அசுரனே! என்னை வதைக்க
எப்போது வருகிறாய்?

உன் வலிய கரங்களுக்குள்
ஆலையில் இட்ட கரும்பாக
நசித்து போவது சுகம்!

இதயத்தில் தேவனாய்இரு!
இரவினில் அசுரனாய் இரு!
உதயம் உறங்காது இரு!
இதயம் கவர் கள்ளனாய் இரு!.

பாற் கடலை கடந்தவனே! தேன்
குடத்தை குடைந்தவனே! நாற்
திசையெங்கும் தேடுகிறேன் வா!

ஒற்றையாய் நான்ஒருண்டு
கொண்டிருக்கிறேன்!
எட்டிப் பார்த்து கைகொட்டி
நகைக்கின்றன வெட்கம்
கெட்ட விண்மீன்கள்!

வா அசுரனே வா! தா கரங்களை
தா! வீணை நான்! விரல் நீ!
குழல் நான்! காற்று நீ!

என் மூச்சு நீ உன் மூச்சு நான்!
எனக்குள் உன்னை விதைக்க
வந்தாயா? எனக்காய் உன்னை
இழக்க வந்தாயா? என்கருள்
உன்னை புதைக்க வந்தாயா?

வா அசுரனே வா! தா கரங்களைதா!
அவள்குரலுக்கு அவன்
வந்துவிட்டான்!

புதையல் தேடி வந்தேன்
பூவை நாடி வந்தேன்.
கதையைப் படிக்க வந்தேன்
கனியை புசிக்க வந்தேன்!

என் இராட்ச்சியே" என்னைக
கொல்லடி என் இளமையை

# காணவில்லை



உன் கரத்தால் வளையடி!

என் இராட்சசியே காதல் போரில்
என்னை வெல்லடி! காயம் பட்ட
யானையாய் என்னைச சாயடி!

வெற்றி உனக்கானால்
இன்பம் எனக்கடி!
தோற்பது சுகமடி போரில்
வெல்லடி! அவள் உத்தரவு
அவளுக்கு இன்பமாகவிருந்தது!

வெற்றியும் ண்டாம்
தோல்வியும் வேண்டாம்
நெற்றிகள் மோதிட
முற்றிலும் மூழ்கி களிப்போம் வருக!
அசய் அழைத்தாய்.

தாமரைன் ளத்தில் குளிக்கவா
கசக்கும்? தேன் கூட்டில் தேனெடுத்து
அருந்த மறுக்குமே மனம்? குளிர்ந்த
தென்றலை தேகம் வெறுக்குமா?

குத்திடும் கூர் எழில்கள் கண்டதன்
பின்னரும் தத்திடும் மனது
தாவிட மறுக்குமா?

கேட்டவன் கைகளால்
கோட்டையை வளைத்தான்!
அந்த அழகுக் கோட்டையை
சொந்தம் கொண்டிடா பிடித்தான்!

சக்கரைக்கரைக் கட்டி நீயடி
மொய்க்கும் எறும்பு நானடி
அவள் மேல் சாய்நதவன்

தணல் போலாகி புலம்பினான்.
தொட்டதும் தேகம் தணலாச்சு
பட்டதும் நெஞ்சம் புயலாச்சு!

புரியாத புதிராய் ஆரம்பம்.
புரிபட்க் கொஞ்சம் நாளாகும்
அவளுக்குள் வெட்கம்
அலையடிக்க, அவனுக்குள்
ஆசை சுழன்றடிக்க, கட்டில் நோக
களித்தனரோ! விடியும் வரையும்
விழி திந்திருந்தனரே!

போதும் போதும் புலர்ந்தது
பொழுது. மோதும் படலம்
போதும் நிறுத்தும்! என்று
கூறியவள் கைகளை வீசினாள்
காணவில்லை அவனை!
அங்கே காணவில்லை!

அப்போது பார்த்து வந்தாள் தோழி
யாரையடி தேடுகிறாய்?
யார் அருகில் என நினைத்தாய்?
தோழி கேட்டதும் தான்
கனவு கரைந்தது அவுளுக்கு.


கேளாய் தோழி என் கதையை!
இரவில் வருவேன் என்றவனை
விழிகள் தேடி களைத்தனவே!

பொய்யன் அந்த கள்வன்
கனவில் வந்து கலைந்தானே!
மயங்கி நானும் மகிழ்ந்தேனே
பக்கத்தில் தேடி பார்த்தேனே!

கனவில் மயங்கி காதலனை
படுக்கையில் தேடிய காதலியை
குறும் தொகை குறும்போ
நம்முன் நிறுத்துகிறது பாருங்கள்:

"நினைத்தொன்று சொல்லாயோ
நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வ நோய் தீர்க்கும் மருந்து"

அதிகாரம் : 125
குறள்: 1241



# சிந்தியா பதில்

**ஜோன் கெரியின் இலங்கைக்கான பயணத்தின் நோக்கம் என்ன சிந்தியா?**

எஸ்.கவிதன், கொழும்பு -15.

இலங்கையின் ஜனநாயகத்திற்கு அமெரிக்கா உதவும் என்றும். பொருளாதார அபிவிருத்திக்கும். பாதுகாப்பிற்கும் அமெரிக்கா பங்களிப்புச் செய்யும் என்றும் அவர் கூறிய பிறகும். இப்படி ஒரு கேள்வியை நீங்கள் கேற்கின்றீர்கள் என்றால் அமெரிக்கா வெளிப்படையாக பேசுவதற்கும். திரைமறைவாக செயற் படுவதற்கும் நிறையவே வேறுபாடுகள் இருக்கின்றது என்பதை உலகமே தெளிவாக புரிந்து கொண்டுள்ளது என்று தெரிகின்றது. சீனாவை முற்றுமுழுதாக ஓரம் கட்டிவிட்டால் இந்தியாவை அணுகு வதற்கு இலங்கைக்கு வழியில்லாமல் போய்விடும் என்பதை இராஜதந்திரமாக எடுத்துச் சொல் இந்திய. சீன முறுகலை அச்சாரமிட்டு அதற்கு இடையில் அமெரிக் காவுக்கான பாதையை வடிவமைக்க திட்டத்தை தீட்டியிருப்பார்.

**உதயசிறியின் விடுதலை பற்றி என்ன நினைக்கின்றீர்கள் சிந்தியா?**

தி.மதனா, எம்பிலிப்பிட்டிய.

எதிர்காலத்தில் மிருகக் காட்சிசாலை களுக்கோ. புராதன இடங்களுக்கோ. வரலாற்று முக்கியத்துவமான இடங்களுக்கோ போகின்றவர் கள் அங்கு அறிவுறுத்தப்படும் வழிகாட்டலையும். அறிவுறுத்தல் களையும் அலட்சியம் செய்யக்கூடாது. அவற்றை பின்பற்றி நடந்து கொள்ளவேண்டும்.

அவற்றைப் பாதுகாக்கவும். அடுத்த தலைமுறைக்கும் அப்படியே ஒப்படைக் கவும் ஒத்துழைக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற பாடத்தை நாம் கற்றுக் கொள்ளவேண்டும் என்பதை ஞாபகப்படுத்துகின்றது.

**சிந்தியா! மயூரன் மற்றும் அன்ரூசான் உட்பட 9 பேரின் மரண தண்டனை நியாயமானதா?**

எவ்.இஸ்மாயில், திருகோணமலை.

மரண தண்டனை இல்லாதொழிக்கப் பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு நாமும் ஆதரவு கொடுக்கலாம். ஆனால் இந்த ஒன்பதுபேரின் தண்டனை தொடர்பாக பலரும் குரல் கொடுத்தபோது. இந்தோனேசியாவின் பிரதமர் ஒரு கருத்தை தெரிவித்திருந்தார். அதாவது மரண தண்டனைய்ய எதிர்கொண்டிருப்பவர்கள் இந்தோனேசியவையும் . இது போன்ற குற்றங்களுக்கு இங்கே கொடுக்கப்படும் தண்டனைகளையும் நன்றாகத் தெரிந்தவர் கள். குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டால் மரண தண்டனைதான் என்பதைத் தெரிந்து கொண்டே குற்றம் புரிந்தவர்கள். ஆகவே அதற்காக யாரும் இந்தோனேசியா வின் நீதித்துறையில் தலையீடு செய்யாதீர் கள். சட்டத்தை வலைக்க முற்படாதீர்கள். இதுபோன்ற குற்றங்கள் அதிகரிக்க தவறான முன்மாதிரியை ஏற்படுத்தச் சொல்லி கட்டாயப்படத்தாதீர்கள் என்று கூறியிருந்தார். அவர் அப்படிக் கூறியது தவறாக எனக்குத் தெரியவில்லை.

**சிந்தியா! 19 ஆவது திருத்தச் சட்டம் அமுலாகிவிட்டதே?**

ந.ஆதர்வா, கண்டி.

அடுத்தது இருப்தாவது திருத்தம் வரும் காத்திருங்கள்.

**நீண்ட நாட்களுக்குப் பின்பு மணிரத்னத்தின் ஓ காதல் கண்மணி எப்படியிருக்கிறது சிந்தியா?**

மு.தனுஜன், அச்சுவேலி.

துண்டு துண்டாக ஒரு கதையையும். அதனோடு ஒட்டிய இதர நிகழ்வுகளையும் திரைப்படமாக ஒழுங்குபடுத்துவதில் மணிரத்தினம் தனித்துவமானவர்தான். ஆனால் கடல் படம் அவருக்கு வெற்றியாக அமையவில்லை. ஓ காதல் கண்மணியே படம் துல்கர் சல்மான். நித்தியா மேனன் நடித்திருக்கின்றார்கள். திருமணத்தில் நம்பிக்கை இல்லாத இரண்பேர் நெருங்கிப் பழகி திருமணத்துக்கு தயாராகும் கதை. இவ்வாறான கதைகள் சினிமாவாக இல்லாதபோது சுத்தமான சமூகச் சீரழிதான்.

இதை மணிரைத்தினம் இயக்கி. ர்ஹ்மான் இசையமைத்து. பி.சி.சிறிராம் ஒளிப்பதிவு செய்திருப்பதால் அழகான சினிமாகியிருக் கின்றது. இளைய தலைமுறையினர் இப் படத்தை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டால் அது விஷப்பரீட்சையாகவே முடியும். ஓ காதல் கண்மனி அழகான சமூகச் சீரழி

**சிந்தியா! எம்மிடையே நேர முகாமைத்துவம் சரியாகப் பேணப்படமைக்கு காரணம் என்ன?**

க.துஷ்யந்தி, குருநகர்.

சரியான காரணத்தை ஒவ்வொருவரும் தமக்குள்ளேயே தேடவேண்டும். திட்டமிடல். தயார்படுத்துதல்.முடிவு செய்தல். என காரியத்தை செய்வதற்கு நம்மை தயார் செய்து கொள்ளத் தெரிந்துவிட்டால் நேர

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நேபாளத்தின் பேரவலம்...

இதன் தாக்கமானது நிலநடுக்கத்தின் அளவு, மையத்திலிருந்துள்ள தூரம் மற்றும் பிரதேசத்தின் புவியியல் தோற்றப்பாடு போன்ற காரணிகளால் வேறுபடக்கூடியது.

### நிலநடுக்கத்தின் அளவும் எண்ணிக்கையும்

90 சதவிகிதம் முதல் 81 சதவிகிதம் வரையான பெரிய நிலநடுக்கங்கள் அடிக்கடி பசிபிக் பெருங்கடலைச் சுற்றி அமைந்துள்ள எரிமலை வளையம் என்ற பகுதியில் அமைந்துள்ளன. இமய மலையின் அடிவாரத்திலும் அதிக அளவு நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. நிலநடுக்க பாதிப்பு அதிகம் உள்ள இடங்களில் மெக்சிகோ நகரம், டோக்கியோ மற்றும் தெஹ்ரான் போன்ற பெரு நகரங்களின் தோற்றமும் அதன் வளர்ச்சியாலும், ஒரே நில நடுக்கத்தில் 3 மில்லியன் மக்கள் இறப்பதற்கும் வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.9 புள்ளி பதி-வாகியது. இது அந்த நாட்டையே புரட்டிப் போட்டது. இந்த பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட அதிக சாத்தியக்கூறுகள் இருந்த தாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஆயிரக்கணக்கான உயிர்களை பலிவாங்கி. கோடிக்கணக்கில் பொருட்சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. நில அதிர்வால் சாலைகள், வீடுகள், கோயில்களை சிதைத்து இயற்கை கோர தாண்டவம் ஆடியுள்ளது.

இது குறித்து இங்கிலாந்தின் ஓபன் பல்கலைக்கழகத்தில் புவியியல் பேராசிரியர் டேவிட் ரோத்ரி கூறுகையில். "இமயமலைப் பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பிருப்பதாக பல ஆண்டுகளுக்கு முன்பே. பல விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்து உள்ளனர்.

# காதிலை பூதந்தசாமி

**வணக்கமுங்கோ! தொழிலாளர் தினத்தோடையே கட்சிகள் தேர்தலுக்குத் தயாராகிவிடும் என்று போன வாரம் முரசு சுட்டிக்காட்டியிருந்தது. அது அப்படியே உண்மையாக இருந்ததுங்கோ. தொழிலாளர் தினத்து நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதில் வழமையைப்போல ஜே.வி.பீனர் மிக நேர்த்தியாக செய்திருந்தார்கள். ஏனைய கட்சிகளின் தொழிலாளர் தின ஏற்பாடுகள் பச்சையாக தேர்தல் பிரச்சார ஊர்வலங்கள் போலவே இருந்தது. ஊர்வலத்தில் தொழிலாளர்களின் உரிமைக் கோஷங்கள் ஒலிக்கவில்லை.**

ஏனைய அரசியல் கட்சிகளை நோக்கிய அரசியல் கேள்விகளையும், தமது வீரப்பிரதாபங்களையுமே கேட்கமுடிந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஊர்வலங்களோ, மகிந்த ராஜபக்சவின் எதிர்ப்புக்களையும், தேர்தலுக்கு ஆதரவாளர்களை தயாராகுமாறும், ஆட்சிக்கு மீண்டும் தாமே தெரிவானால் என்னவிதமான பணிகளை செய்வோம் என்ற வாக்குறுதிகளாகவுமே அமைந்திருந்தது.

இம்முறை தொழிலாளர் தினத்தில் அதிகமாக எதிர்பார்க்கப்பட்டது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கலந்துகொள்வதாக கூறப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டம்தான்.

எதிர்பார்ப்புக்களை சிதறடிக்குச் செய்கின்றவிதமாக அந்தக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ச கலந்துகொள்ள வில்லை. இந்த ஏமாற்றத்தைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் முகங்களில் மகிழ்ச்சியைக் காணமுடியவில்லை.

மகிந்தவின் பெயரைக் கூறி எதிர் காலத்தில் மக்களை கூட்டங்களுக்கு அணிதிரட்ட முடியுமா. மகிந்த வருகின்றார், மகிந்த வருகின்றார் என்று கூறுவது இப்போது புலி வருகிறது, புலிவருகிறது என்ற கதையாகிக் கொண்டிருக்கின்றது. இனிமேல் மகிந்தவே வெளிப்படையாக மக்களை அழைக்காதுவிட்டால், அவரது பங்காளிகளால் மக்களை அணி திரட்ட முடியாது.

மகிந்தவுக்கு 58 இலட்சம் சிங்கள மக்களின் ஆதரவு இருக்கின்றது என்பது உண்மைதான் என்றாலும், அவரால் சுதந்திரக் கட்சியை உதறித்தள்ளிவிட்டு வேறு ஒரு அணியோடு கூட்டுச்சேர முடியாது என்பதையும், சுதந்திரக் கட்சிக்குள் மகிந்தவின் பிரகாசத்தை தடுக்கின்றவராக சந்திரிக்கா இருக்கின்றார் என்பதும் தற்போது மக்களுக்கு தெளிவாகிவிட்டது. ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலுக்கு தயாராகிவிட்டது.

ஜனாதிபதி மைத்திரிபாலவோ, சுதந்திரக் கட்சியை மீண்டும் வெற்றி பெறச் செய்வதன் ஊடாக சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் அக்கட்சியை வளர்த்துவிட்ட தலைவர்களில் ஒருவராக தாமும் இருக்க வேண்டும் என்பதை விரும்புகின்றார்.

சுதந்திரக் கட்சியின் வெற்றிக்காக மகிந்த ராஜபக்சவை கட்சிக்குள் கொண்டுவருவதிலும் ஒருவேளை மகிந்த ராஜபக்ச பிரதமராக இருப்பதிலும் தனக்கு ஆட்சேபனை இல்லை என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார் என்று அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகின்றார்கள்.

அதற்குக் காரணம், ஜனாதிபதி மைத்திரிபால மீண்டும் ஜனாதிபதியாக போட்டியிடுகின்ற ஆர்வத்தோடு இல்லை. ஆகையால் இன்னும் ஐந்து வருடத்தின் பின்னர் அரசியலிலிருந்து ஒதுங்கிவிடுவாரா? சுதந்திரக் கட்சியை கைவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்காக பாடுபடுவாரா?

சுதந்திரக் கட்சியும் இல்லாமல், ஐக்கிய தேசியக் கட்சியும் இல்லாமல் ஜனாதிபதி பதவிக்குப் பின்னர் அரசியல் அநாதையாக இருப்பதற்கு அவர் விரும்பமாட்டார் என்பதால், சுதந்திரக் கட்சியில் தனது இருப்பை இழக்க விரும்பமாட்டார்.

தொழிலாளர் தினத்தின்போது முகப்புப் புத்தகத்தில் வாழ்த்துச் சொன்ன பல நண்பர்களுக்கு நடுவே கவிஞர் இப்புனு அசுமத் எழுதிய கவிதை வடிவான வாழ்த்துச் செய்தியை நினைத்து நினைத்து அகமகிழ்ந்தேன். அவர் இப்படித்தான் எழுதியிருந்தார்.

**உழைப்போர் தினம்!**

உழைப்போருக்கு உரிமை வேண்டும்
அதற்கு முன்...
அரசியல்வாதிகளிடமிருந்து
உழைப்பு வேண்டும்.
என்று எழுதியிருந்தார்.

உழைப்போர் தினம் யாரிடம் சிக்கிக் கொண்டுள்ளது என்பதையும், உழைப்பாளர்களின் உரிமைகளை யாரிடமிருந்து போராடிப் பெற வேண்டியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ள அந்த வரிகள் விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியவை.

ஆனால் இன்று நாட்டில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது. அரசியல் கட்சிகள் நடத்தும் அரசியல் மற்றும் கட்சிகளின் அபிலாசைகள் என்பவற்றை பரப்புரை செய்யும் கூட்டங்களில் தொழிலாளர்கள் கலந்துகொள்ளும் தினமாக தொழிலாளர் தினம் நடைபெறுகின்றது.

இந்த நிலை மாறவேண்டும். தொழிலாளர்கள் விழிப்படைய வேண்டும். அரசியல்வாதிகளோடு, அவர்களின் பதாதைகளை சுமந்து கொண்டு, அவர்களின் அரசியல் கோசங்களை கூவிக்கொண்டும் ஊர்வலங்கள் போவதால், தமது உரிமைகளை வென்றெடுக்கமுடியாது என்டதைத் தானேங்கோ நான் சொல்லமுடியும்.

"யாவும் கலப்படமற்ற கற்பனை"

# இந்தவாரம் உங்கள் பலன்

(07.05.2015 தொடக்கம் 13.05.2015 வரை)

## மேடம்

வேலை இல்லாதவர்களுக்கு வெகுநாட்களாக எதிர்பார்த்து இருந்த புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும் காலமாகும். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்புள்ளதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. கண்களில் கவனமுடன் இருப்பது நல்லது. பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டாலும் மிகுந்த பிரயாசையின் பேரில் சமாளித்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் ஏற்படும். உடல்நிலை பாதிப்புகள் நீங்குவதற்காக மருத்துவத்திற்காக வெளியூர் பயணங்களை மேற்கொள்வீர்கள். நெடுநாட்களாகப் பிரச்சினையில் இருந்த குடும்பச் சொத்துக்கள் கைக்கு வந்துசேரக் கூடிய காலமாகும். விபரீத எண்ணங்களை விட்டுக் காரியத்தைக் கவனிக்கவும்.

## இடபம்

வராத கடன்கொடுத்துள்ள பணம் எதிர்பாராமல் திரும்பக் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் முன் கோபத்தை தவிர்க்கும் பணியாற்றுதல் நல்லது. கணவன் மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்த சுமுகமான உறவுகள் ஏற்படும். புதிய கூட்டுத்தொழில் முயற்சிகள் ஏற்படும். எதிர்பாராத [illegible] நல்லது. எதிர்பாராமல் வடதிசையில் இருந்து பொருள்வரவும், நல்ல செய்திகளும் வந்துசேரும். வீடுகளைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக பணச் செலவுகள் வந்துசேரும். நண்பர்களால் வீண் விவாதங்களும் தொல்லைகளும் வந்துபோகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரம் ஆகும்.

## மிதுனம்

தாயின் உடல்நிலையில் பாதிப்புகள் உண்டாகுவதோடு மருத்துவச் செலவுகள் ஏற்படும். நீண்டகாலமாகக் காணாமற்போன [illegible]கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேரும் காலமாகும். திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்சிகளுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். சொத்து சம்பந்தமாகிய வழக்கு விசயங்களில் நல்ல முடிவுகள் ஏற்படும். பிள்ளைகளால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைய வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த பண உதவிகள் உறவினர்களால் கிடைக்கும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்து வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

## கடகம்

வெளிநாடு சென்றுவருவதற்கான புதிய முயற்சிகளில் சம்பந்தம் இல்லாத நபர்களால் சில ஆதாயங்கள் வந்துசேருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. குலதெய்வ ஆலயங்களைப் புதுப்பிதலுக்கான முயற்சிகளில் நற்பெயர் பெறுவீர்கள். சம்பந்தம் இல்லாத அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிட்டு மனக்கவலை அடையாதீர்கள். முன்கோபத்தை தவிர்த்து அண்டை அயலாருடன் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. குலதெய்வ வழிபாடு செய்துவருதலால் கிரகதோசங்கள் நீங்க வாய்ப்பு உள்ளது. உறவினர்கள் மற்றும் சொந்தபந்தங்களால் ஆதரவு இல்லை. நீண்டதூரப் பயணங்களைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது.

## சிங்கம்

உற்றார் மற்றும் உறவினர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் பொருட் செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் எதிர் பாராத சிற்சில ஆதாயங்களை அடைவீர்கள். வெளிநாடு செல்லுதல் போன்ற புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். பொருளாதார நெருக்கடிகள் மாறித் தேவையான பொருளாதாரம் வந்துசேரும். உடம்பில் முதுகு மற்றும் வயிறு ஆகிய உபாதைகள் வந்துபோகும். [illegible]மான எண்ணங்களை விட்டொழித்து [illegible]த்தில் கவனமாய் இருங்கள். சொத்து [illegible] வழக்கு விசயத்தில் சாதகமான முடிவுகளை எதிர்பார்க்கலாம்.

## கன்னி

மூத்த சகோதரர்களால் பொருட்செலவுகள் மற்றும் மனநிம்மதிக் குறைவுகள் ஏற்படலாம். உத்தியோகத் துறையினருக்கு பணி இடமாற்றமும் பதவி உயர்வுகளும் வரக்கூடும். பெண்கள் சம்பந்தமான காதல் விசயத்தில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். குலதெய்வ வழிபாட்டிற்காக தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ளநேரும். நாட்பட்ட பழைய கடன்கள் மீண்டும் தொல்லைதர வாய்ப்பு உள்ளது. நீண்ட காலமாக புதிய கட்டடம் கட்டப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். குடும்பத்தில் திருமணம்போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது.

## துலாம்

அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் காரணமற்ற பிரச்சனைகள் வர இருப்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் பேசிப்பழகுதல் நல்லதாகும். விளையாட்டுத் துறைகளைச் சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுகள் கிடைக்கும். எதிர்பாராத நீண்டதூரப் பயணங்களின் மூலம் மனநிறைவடைய வாய்ப்பு உள்ளது. புதிய பெரிய மனிதர்களையும் அரசியல்வாதிகளையும் சந்திக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் வெற்றி அளிக்கும். பொருளாதாரத்தில் இதுநாள்வரையில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறிச் சற்று முன்னேற்றம் காணப்படும். வெகுதூரப் பயணங்களில் மிகுந்த எச்சரிக்கையுடன் சென்று வருவது நல்லது. பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## விருச்சிகம்

புதிய வீடுகளை வாங்கப்போட்ட திட்டங்களுக்காக வங்கிகளில் எதிர்பார்த்திருந்த கடன்தொகைகள் கிடைக்கக்கூடிய காலமாகும். நீண்டநாட்களாக தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்களில் வெற்றியடைவீர்கள். ஒரு சிலருக்கு புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். உறவினர்களின் வரவால் பொருள்வரவும் மனச் சந்தோஷமும் உண்டாகும். புதிய கடன் வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். உத்தியோகத் துறையினர்களுக்கு பதவி உயர்வுகள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவுகள் நிரம்ப உண்டாகும். விவசாயம் செய்வோர்களுக்கு நல்ல விளைச்சலும், இலாபமும் கிடைக்கும்.

## தனுசு

குடும்பத்தில் தடைப்பட்டிருந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும். உடல்நிலையில் கண், காதுகளில் மிகவும் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். விட்டுப்போன கணவன் – மனைவி உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. தந்தை – மகன் உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும். பலகாலமாகத் தீராத நோய்களுக்கு புதிய மருத்துவர்களின் உதவி யால் நோய் நீங்கும். நண்பர்களால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்க இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். புதிய தொழில் ஆரம்பம் செய்வதற்காக வங்கிகள் மூலம் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த கடன் தொகைகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது.

## மகரம்

பொருளாதாரத்தில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். உடல்நிலையில் வாயு மற்றும் வாதம் ஆகிய தொல்லைகள் வந்துபோகும். திருமண விசயங்களுக்காக முயற்சி செய்யலாம். பிள்ளைகளுக்கு எதிர்பார்த்துவந்த வேலை வாய்ப்புகள் கிடைக்கும். கணவன் – மனைவி உறவில் விரிசல்களும் வீண் மனக்குழப்பங்களும் வந்துபோகும். நீண்டநாட்களாக வராத பணம் திரும்பக் கைவந்து சேரக்கூடிய காலமாகும். உறவினர்களால் வீண் பொருட் செலவுகள் உண்டாகும். மற்றவர்களை நம்பிப் பணம், பொருள் கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். அநாதைகளுக்கு உதவுவதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள்.

## கும்பம்

தந்தை – மகன் உறவில் சிறிய கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உடம்பில் வாயு மற்றும் வயிறு ஆகிய உபாதைகள் வந்துபோகும். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது. கொடுக்கவேண்டிய பழைய கடன்களைக் கொடுத்துப் புதிய கடன்களை வாங்கத் திட்டம் போடுவீர்கள். பொதுநலக் காரியங்களுக்காக மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு நற்பெயர், புகழ் எடுப்பீர்கள். சேர்மார்க்கெட் மற்றும் தங்கம் வெள்ளி போன்ற நகை வியாபாரிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் வர்த்தகத்தில் ஈடுபடுவது நல்லது.

## மீனம்


சொத்து சம்பந்தமாகிய வழக்கு விசயங்களில் எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்கச் சற்று காலதாமதம் ஆகலாம். வீடு, நிலம் வாங்குவது போன்ற முயற்சிகளில் அரசு சம்பந்தமாக எதிர்பார்த்துவந்த உதவித் தொகைகள் கிடைக்கும். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் நீங்கி சுமூகமான சூழல் உருவாகும். காதல் விசயத்தில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. வங்கிகளால் எதிர்பார்த்து இருந்த கடன் தொகைகள் கிடைக்கும். சம்பந்தம் இல்லாத நபர்களால் எதிர்பாராத தனவரவுகள் உண்டாகும். வீட்டைத் திருத்திக்கட்டுவதில் மிகுந்த அக்கறையுடன் திட்டம் போடுவீர்கள்.

# விண்வெளியின் விளிம்பையும் ஆழ்கடலின் அழகையும் கண்டவர்




பேராசிரியர் பிக்கார்டு இந்தக் குறை இல்லாதபடி ஒரு பாதிஸ்பயரை உருவாக்கினார். அதற்குக் கேபிள் தேவையில்லை. கோளத்தினுள்ளிருந்தபடியே இதை இயக்கலாம். இதுவரையில் யாரும் போகாத அளவு ஆழத்திற்கும் போகலாம். இதன் இரும்புச் சுவர்களின் கனம் நான்கு அங்குலங்கள். கடல்நீரின் நாலா பக்கத்து அழுத்தும் சக்தி, இதை ஏதும் செய்யமுடியாது.

1960இல் தம் மகன், காக்விஸ்டன் இத்தாலியக் கடற்கரையில், கேப்ரி அருகில் இரண்டு மைல் ஆழம்வரை சென்றார். அதன் பிறகு இன்னும் அதிசயமான ஆழ்கடல் பிரயாணத்தை நிகழ்த்தினார். அமெரிக்கக் கடற்படையின் உதவியுடன், கடலுக்குள் ஏழு மைல் ஆழம்வரை தம் பாதிஸ்பயரில் பயணம்செய்து திரும்பினார். கடலிலே இதுதான் மிகமிக ஆழமான தூரம். இதை பிக்கார்டு உலகின் அடித்தளம் என்று அழைத்தார்.



விண்வெளிக்குப் போனவர் ஆழ்கடலின் அடியையும் கண்டதில் விந்தை ஏதுமில்லையே?

(முற்றும்)

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

## ஆபத்தான பாதை



சாதாரண- மாக பாலங்களின் வடிவமைப்பு வாகனங்கள் எளிதாக ஏறி, இறங்கும் விதத்தில் அமைக்கப்படுவதுண்டு. ஆனால், அந்த இடத்தின் நில அமைப்பு, கட்டடங்கள் போன்றவற்றை கருதி, வளைவு நெளிவுகளுடன் மாற்றி அமைக்கின்றனர். இந்த நிலையில், ஜப்பானில் கட்டப்பட்டிருக்கும் ஒரு பாலம் தினசரி, அதில் செல்லும் வாகன ஓட்டிகளை அடி வயிறு கலங்கவைக்கிறது. அந்தளவு இந்த பாலத்தை சரிவாக அமைத்துள்ளனர். திருவாரூரில் இருக்கும் ஒரு ரயில்வே மேம்பாலத்தை மரணபாலம் என்று கூறுவதுண்டு. அதுபோன்று, இந்த பாலமும் வாகன ஓட்டிகளை கதிகலங்க வைக்கிறது. அம்மாதிரியான பாலங்களின் சிலவற்றை இங்கே காணலாம்.

**ஜப்பான் பாலம்:-** ஜப்பானிலுள்ள மேட்சூ மற்றும் சகைமினாட்டோ நகரங்களுக்கு இடையில் இருக்கும் ஏறியின்மீது இந்த பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஓஹாஷி என்று பெயர்.

**பெரிய பாலம்:-** உலகின் மூன்றாவது பெரிய பாலமாக இதனை குறிப்பிடுகின்றனர். 1.7 கி.மீ நீளமுடைய இந்த இந்த பாலம் 11.4 மீற்றர் அகலம் கொண்டது. முழுவதும் கொங்கிறீட் மூலமாக அமைக்கப்பட்டுள்ளது.

பாலங்கள் பெரும்பாலும் படிப்படியாக உயரம் அதிகரிக்கப்பட்டிருக்கும். ஆனால், இந்த பாலம் 6.1 சதவீதம் சரிவுடன் கட்டப்பட்டுள்ளது. இது வழக்கத்தைவிட மிக அதிகமான சரிவுகொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஆணழகன் போட்டியொன்று நடத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள ஜிம் நிலையங்கள் சார்பில் இந்த போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதில் கலந்து கொண்டவர்களின் படங்களே இவை.**



## அழகே அழகே ஆணழகே



## அன்புள்ள அப்பா!



அமெரிக்காவில் தந்தை ஒருவர், மகனது முகத்தை தனது தாடையில் பச்சை குத்தியுள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள ஹுவ்ஸ்டன் நகரைச் சேர்ந்த கிறிஸ்டியன் ஸெக்ரிஸ்ட் (Christian Sechrist Age - 20) என்பவருக்கு சமீபத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

தனது குழந்தையின்மீது வைத்திருக்கும் பாசத்தை உலகத்துக்கு வெளிப்படுத்துவதற்காக இவர் புதிய முயற்சியை கையாண்டுள்ளார்.

அதாவது, கடுமையான வலியையும் பொருட்படுத்தாமல், ஆசை மகனது முகத்தை தனது தாடையில் பச்சை குத்தியுள்ளார்.

இந்த புகைப்படத்தினை பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இதற்கு நண்பர்கள் சிலர் ஆதரவும், பலர் எதிர்ப்பும் தெரிவித்துள்ளனர்.







வைக்கிறது. அம்மாதிரியான பாலங்களின் சிலவற்றை இங்கே காணலாம்.

**ஜப்பான் பாலம்:-** ஜப்பானிலுள்ள மேட்சூ மற்றும் சகைமினாட்டோ நகரங்களுக்கு இடையில் இருக்கும் ஏரியின்மீது இந்த பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒஹாஷி என்று பெயர்.

**பெரிய பாலம்:-** உலகின் மூன்றாவது பெரிய பாலமாக இதனை குறிப்பிடுகின்றனர். 1.7 கி.மீ நீளமுடைய இந்த இந்த பாலம் 11.4 மீற்றர் அகலம் கொண்டது. முழுவதும் கொங்கிறீட் மூலமாக அமைக்கப்பட்டுள்ளது.

பாலங்கள் பெரும்பாலும் படிப்படியாக உயரம் அதிகரிக்கப்பட்டிருக்கும். ஆனால், இந்த பாலம் 6.1 சதவீதம் சரிவுடன் கட்டப்பட்டுள்ளது. இது வழக்கத்தைவிட மிக அதிகமான சரிவுகொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.





## அன்புள்ள அப்பா!

அமெரிக்காவில் தந்தை ஒருவர், மகனது முகத்தை தனது தாடையில் பச்சை குத்தியுள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.


அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள ஹுவ்ஸ்டன் நகரைச் சேர்ந்த கிரிஸ்டியன் ஸெக்ரிஸ்ட் (Christian Sechrist Age - 20) என்பவருக்கு சமீபத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

தனது குழந்தையின்மீது வைத்திருக்கும் பாசத்தை உலகத்துக்கு வெளிப்படுத்துவதற்காக இவர் புதிய முயற்சியை கையாண்டுள்ளார்.

அதாவது, கடுமையான வலியையும் பொருட்படுத்தாமல், ஆசை மகனது முகத்தை தனது தாடையில் பச்சை குத்தியுள்ளார்.

இந்த புகைப்படத்தினை பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இதற்கு நண்பர்கள் சிலர் ஆதரவும், பலர் எதிர்ப்பும் தெரிவித்துள்ளனர்.





## அற்புதம்

நேபாளம் பூகம்பத்தில் 5,000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்ட துக்கத்தில் முழு உலகமும் ஆழ்ந்திருக்கும் வேளையில் இடிபாடுகளிற்குள் அகப்பட்டவர்கள், புதையுண்டவர்களும் அனேகம். இத்துயரத்திலும் இடிபாடுகளிற்குள் இருந்து உயிர்பிழைத்தவர்கள் நம்பிக்கை ஒளியை காட்டுகின்றது. இதற்குள் ஒரு அற்புதமான, நம்பமுடியாத உயிர்பிழைத்த கதையும் அடங்கியுள்ளது. சரிந்து இடிந்து விழுந்து கட்டிடம் ஒன்றின் இடிபாடுகளிற்கிடையில் இருந்துகேட்ட அழுகை சத்தத்தை தொடர்ந்து படையினர் சிசு ஒன்றை வெளியே இழுத்து எடுத்துள்ளனர்.

பூகம்பம் ஏற்பட்டதன் பின்னர் குறைந்தது 22 மணித்தியாலங்கள் வரையில் இந்த சிசு இடிபாடுகளிற்குள் அகப்பட்டு கிடந்து உள்ளதென தெரிவிக்கப்பட்டது. இக்குழந்தை முழுமையாக ஆடைகள் அணிந்து தூசியால் மூடப்பட்ட நிலையில் மீட்பு பணியாளர்களினால் வெளியே எடுக்கப்பட்டான். உட்காயங்கள் எதுவுமின்றி தப்பிவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். காத்மண்டுவில் ஒரு ஹோட்டல் இடிபாடுகளுக்கிடையில் மூன்று நாட்களிற்கு மேல் அகப்பட்ட ஒருவரும் வெளியே இழுத்து எடுக்கப்பட்டார். 27வயதுடைய ரிஷி ஹானல் என்பவர உயிர்பிழைக்கும் பொருட்டு தனது சொந்த சிறுநீரை குடிக்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆளானதாக தெரிவித்துள்ளார்.





## கூந்தல் அழகா

மங்கையின் கூந்தல் வாசம் மணவாளனை மயக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். ஆனால் அலகாபாத்தை சேர்ந்த ஸ்மிதா ஸ்ரீவஸ்தவாவின் கூந்தலோ, பெண்கள் வர்க்கத்தையே மயக்கத்தில் ஆழ்த்தும் வகையில் உள்ளது. தனது உயரத்தை விட மூன்று அங்குலம் நீண்ட கூந்தலை உடைய ஸ்மிதா, இந்தியாவின் நீண்ட கூந்தல்கொண்ட பெண் என்ற சாதனையை படைத்துள்ளார்.

தற்போது 7 அடி நீளம் கொண்ட கூந்தல் உடையவராக உள்ள ஸ்மிதா, கூந்தல் நீளத்தில் உலக சாதனை படைப்பதே தனது இலட்சியம் என்று கூறியுள்ளார். 37 வயதாகும் ஸ்மிதா, தனது கூந்தல் 6 அடி நீளம் இருந்தபோதே லிம்கா சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துவிட்டார்.

தனது சாதனை குறித்து ஸ்மிதா கூறுகையில், எனது வாழ்க்கை ஓய்வில்லாதது. எனது கூந்தலின் நீளம் 7 அடி. எனது கூந்தலுக்காக பல விருதுகளை வென்றுள்ளதுடன், லிம்கா சாதனை புத்தகத்திலும் இடம்பிடித்துள்ளேன். கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடிக்க திட்டமிட்டுள்ளேன் என்றார். சீனாவின் க்சி குய்பிங் 18 அடி நீள கூந்தலுடன் கின்னஸ் சாதனை படைத்துள்ளதால், தனது கின்னஸ் சாதனைக்கு இன்னும் நீண்ட பயணத்தை ஸ்மிதா மேற்கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 24 வியாழக்கிழமை (07.05.2015) பக்கங்கள் IV ஓசை - 219

# மைத்திரி-மகிந்த சந்திப்பு



## மீண்டும் சந்திக்க இணக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இடையே நேற்று இடம்பெற்ற சந்திப்பு வெற்றியளித்துள்ளதாகவும், ஆயினும் பிரதமர் வேட்பாளர் குறித்து முடிவுகள் எட்டப்பட வில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(IV) ஆம் பக்கம் பார்க்க

யாழ். பல்கலைக்கழகத்தில்

## விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் கையொப்ப மோசடிக்கு கண்டனம்

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரிடம் பெறப்பட்ட கையொப்பத்தினை வைத்து மோசடி செய்த யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் நடவடிக்கைக்கு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். பல் கலைக்கழக பேரவையிடம் நேற்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் மகஜர் ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

மகஜர் கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், யாழ். பல்கலைக் கழகத்தின் புதிய பேரவை ஆரம பிக்கப்படுகின்றது. இந்தப் பேரவைக்கு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தினால், மகஜர் ஒன்று சமர்ப்பிக் கப்பட்டுள்ளது.

யா்ழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அதிகார துஷ்பிரயோகத்தினை விசாரணை நடத்தி தகுதி வாய்ந்த அதிகாரிகளை நியமிக்குமாறு கோரியிருக்கின்றார்கள். அந்த ஆவணத்தில், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் பலரின் ஒப்பங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டு வேறொரு தேவைக்காக பெறப்பட்ட கையொப்பத்தினை இந்த தேவைக்காக

(IV) ஆம் பக்கம் பார்க்க

## ரயில் ே இளைஞன் படுகாயம்

மாங்குளம் பகுதியில் ரயில் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து ,தான நிலையில் வவுனிய வத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் க..ி நொச்சி, சாந்தபுரத்தைச் சேர்ந்த வசந்தகுமார் (வயது - 22) என்ற இளைஞரே படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலே இளைஞரை மோதியுள்ளது.

(IV) ஆம் பக்கம் பார்க்க

## நல்லிணக்க செயற்பாடுகளுக்கு அவுஸ்ரேலியா உதவும்

### அமைச்சர் பீற்றர் டட்டன் உறுதி

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு அவுஸ்ரேலியா தொடர்ந்து உதவும் என்று அவுஸ்ரேலிய குடிவரவு மற்றும் எல்லை பாதுகாப்பு அமைச்சர் பீற்றர் டட்டன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவுஸ்ரேலிய அமைச்சர், தனது விஜயத்தை முடித்துகொண்டு நாடு திரும்புவதற்கு முன்னர், கொழும்பு, சினமன் கிராண்ட் ஹோட்டலில் நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போதே

(IV) ஆம் பக்கம் பார்க்க

## மத்திய வங்கி பிரதேச அலுவலகம் கிளிநொச்சியில் திறப்பு



(கிளிநொச்சி)

இலங்கை மத்திய வங்கியின் ஆறாவது பிரதேச அலுவலகம் நேற்று கிளிநொச்சி அறிவியல் நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 9.00 மணிக்கு மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் ஆகியோர் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டி திறந்து வைத்தனர்.

ஏற்கனவே அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை, திருகோணமலை, யாழ்ப்பாணம், ஆகிய இடங்களில் பிரதேச அலுவலகத்தை கொண்டுள்ள

(IV) ஆம் பக்கம் பார்க்க

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ 11 ஆம் திகதிவரை விளக்கமறியல்

(கொழும்பு)

சதொச வில் மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவுக்கு, வரும் மே 11 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக இருந்த ஜோன்ஸ்டன் பெர்னான்டோ, சதொசவில் 5 மில்லியன் ரூபா மோசடி செய்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் விசாரணைக்கு அழைத்த, நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார், விசாரணையின் முடிவில் அவரை கைது செய்து, கொழும்பு பிரதம நீதவான் முன்பாக நிறுத்தினர்.

அவரை விளக்கமறியலில் வைக்கவும், குருநாகல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும், கொழும்பு பிரதம நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

(IV) ஆம் பக்கம் பார்க்க

## நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் ஜே.வி.பி. மீது சட்ட நடவடிக்கை

### கோத்தாபய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)


தனது நற்பெயருக்கு களங்கம் கற்பிக்கும் நோக்கிலேயே ஜே.வி.பி. தனக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சியுடன் தொடர்புடைய அந்த மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்காக கோத்தாபயவின் பெயரில் உள்ள வங்கி கணக்கிற்கு மூன்று காசோலைகள் மூலம் 13 கோடி ரூபா அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அதனை செலவிட்டு


(IV) ஆம் பக்கம் பார்க்க

## கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நாளை

# நண்பர்களின் போர் ஆரம்பம்



முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணியினர் அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுவிப்பாளருடன்...



கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியின் அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுவிப்பாளருடன்...

(யாழ்ப்பாணம்)

நண்பர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் (ஸ்ரான்லி) மற்றும் முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நாளை மதியம் 1.00 மணியளவில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணம், மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் உறவுப் பாலத்தை ஏற்படுத்தும் நோக்கில் கடந்த 2013ஆம் ஆண்டு நண்பர்களின் போர் என்ற நாமத்துடன் இப்போட்டி ஆரம்பிக்கப்பட்டது. கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற முதலாவது போட்டியில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற இரண்டாவது போட்டியில் வித்தியானந்தாக் கல்லூரி அணியும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பதிவு செய்துள்ளன.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிக்கு விசாகனும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிக்கு அருணாவும் தலைமை தாங்கவுள்ளனர்.

இந்நிலையில் மூன்றாவது நண்பர்களின் போரில் இரு அணிகளுமே வெற்றியைப் பதிவு செய்யும் வகையில் தங்கள் திறனை போட்டிக் களத்தில் வெளிப்படுத்தும் என இரு பாடசாலைகளின் ஆதரவாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டி சூடு பிடித்துள்ள இவ்வேளையில் உள்ளூர் இரசிகர்களுக்கு தீனி போடும் வகையில் இப்போட்டி அமையும் அதேவேளை இரட்டிப்பு மகிழ்ச்சி அளிக்கும் எனவும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி குறித்து கருத்து தெரிவித்த கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் இளங்கோ. இரு மாவட்டங்களிலும் சிறந்த வீரர்களை உருவாக்கும் வகையிலேயே இத்தொடர் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடாத்தப்பட்டு வருகின்றது. இலங்கையின் முதன்மை விளையாட்டாகத் திகழும் கிரிக்கெட் போட்டியில் எமது வீரர்களும் ஜொலிக்கவேண்டும். தேசிய, சர்வதேச மட்டப் போட்டிகளில் பங்குபற்றி எங்கள் பிரதேசத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்ற நோக்கில் இப்போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது. தொடர்ந்தும் வெற்றிகரமாக நடாத்துவோம் எனத் தெரிவித்தார்.

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | வியாழக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | மக்கள் முகம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# கனகாம்பிகை ஆலய வீதிகளை மீளப்பெற்றுத்தர நடவடிக்கை

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை ஆலயத்தின் வெளிவீதி மற்றும் இரணைமடு குளத்திற்குச் செல்லும் தீர்த்தப் பாதை என்பவற்றை இராணுவத்திடம் இருந்து மீளப்பெற்று ஆலயத்திடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மீள் குடியேற்றம் மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பகல் ஆலயத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திகுமாரின் அழைப்புக்கு அமைய விஜயம் செய்த அமைச்சர், அங்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், இரணைமடு கனகாம்பிகை ஆலயத்தின் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் எனது கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார். அந்த வகையில் அவரின் அழைப்பிற்கு அமைய நேற்று இந்த ஆலயத்திற்கு வருகை தந்து பார்வையிட்ட போது கள நிலைமைகளையும் அறிந்து கொண்டேன்.

வரலாற்று சிறப்பு மிக்க பழமை வாய்ந்த யோகர் சுவாமியினால் அமைக்கப்பட்ட இரணைமடு கனகாம்பிகை ஆலயத்தின் சிறப்புக்கு அமைய வெளிவீதி மற்றும் இரணைமடுகுளத்திற்கு செல்லும் தீர்த்தப் பாதை என்பவற்றை இராணுவ உயர் பீடத்துடன் பேசி அவர்களிடம் இருந்து பெற்று கனகாம்பிகை அம்மன் ஆலயத்தின் ஆலய பரிபாலன சபையினரிடம் கையளிக்க நடவடிக்கை எடுப்பேன் எனத் தெரிவித்தார்

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன், ஆலய பரிபாலன சபைத் தலைவர் ந.செல்வராசா, செயலாளர் சந்திரதாஸ், உபதலைவர் சிவகுமார் ஆகியோரும் உடனிருந்தனர். (29)

# ஹலோ ட்ரஸ்ட் ஊழியர்கள் மீள்குடியேற்ற அமைச்சருடன் சந்திப்பு



நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி ஹலோ ட்ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனப் பணியாளர்கள் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனை சந்தித்து தங்களுடைய பிரச்சினைகளைத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இச்சந்திப்பு இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிரதேச அலுவலக கட்டத்தில் இடம்பெற்றது

மேற்படி நிறுவனத்தில் பணியாற்றிய பணியாளர்களில் 350 இற்கும் மேற்பட்ட பணியாளர்களை முன்னறிவித்தல் இன்றி திடீரென பணியிலிருந்து ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் நிறுத்தியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த பணியாளர்கள் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டு வந்தனர்.

இவர்களை கடந்த நான்காம் திகதி சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், பணியாளர்களின் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியதாகவும் மள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தீர்வுக்கு முயற்சி செய்வதாக குறிப்பிட்டிருந்தார்.

அதற்கமைவாக நேற்று அமைச்சர் சுவாமிநாதன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், வட மாகாண தொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் கணேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட தொழில் திணைக்கள உதவி ஆணையாளர், தேசிய கண்ணி வெடி அகற்றும் பிரிவினர், ஹலோ ட்ரஸ்ட் நிறுவன அதிகாரிகள், நிறுவனப் பணியாளர்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னும் பல பிரதேசங்களில் செறிந்த கண்ணி வெடி ஆபத்துள்ள பிரதேசமாக காணப்படுகிறது.

குறிப்பாக முகமாலை, ஜெயபுரம், கிருஸ்ணபுரம், அறிவியல் நகர் ஆனைவிழுந்தான் . போன்ற பிரதேசங்கள் காணப்படுகின்றன. எனவே மேலும் அரசு நிதி மூலங்களை தேடி குறித்த நிறுவனத்திற்கு வழங்கி கண்ணி வெடி அகற்றும் பணியை தொடர்வதற்கு . அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு திடீரென முன்னறிவித்தலின்றி 350 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணி நிறுத்தம் செய்யும் போது அது இந்த மாவட்டத்திற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும்.

அது மட்டுமன்றி அந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரமும் மிக மோசமாக பாதிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இதன் போது கருத்து தெரிவித்த அமைச்சர் சுவாமிநாதன்,

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் இந்த நிலைமைகள் தொடர்பில் எனக்கு பக்ஸ் மூலமும், நேரடியாகவும் அறியதந்துள்ளார். முன்னறிவித்தல் இன்றி பெருமளவு பணியாளர்கள் நிறுத்தப்படுவது சட்டப் பிரச்சினைக்குரிய விடயம்.

எனவே ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தினர் பணியாளர்களுடன் சமரசத்திற்கு செல்ல வேண்டும். தவறின் தொழில் திணைக்களத்தின் ஊடாக சட்ட நடவடிக்கைக்கு சென்றால் நிறுவனத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும். அதனால் பணியாளர்கள் விடயத்தில் இணக்கப்பாட்டிற்கு செல்ல வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதன் போது கருத்து தெரிவித்த வட மாகாண தொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் கணேஸ்வரன், ஹலோ ட்ரஸ்ட் நிறுவனப் பணியாளர்களுக்கும் நிறுவனத்திற்கும் இடையில் ஒப்பந்தம் யூன் [illegible] வரை உள்ளது என்பதை [illegible]சுட்டிக்காட்டினார்.

# நான்கு நூல்களின் அறிமுகமும் விமர்சன அரங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கியக் குவியத்தின் ஏற்பாட்டில் கவிஞர் கருணாகரனின் நான்கு நூல்களுக்கான அறிமுகமும் விமர்சன அரங்கும் யாழ். திருமறைக்கலாமன்றம், கலைத்தூது அழகியற் கல்லூரியில் வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு நிலாந்தனின் ஒருங்கிணைப்பு, நெறிப்படுத்தலில் இடம்பெறவுள்ளது.

வேட்டைத்தோப்பு (சிறுகதைத் தொகுதி) பற்றி தாயகம் இதழின் ஆசிரியரும் படைப்பாளியுமான க. தணிகாசலமும், ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள் (கவிதைகள்) பற்றி சி.ரமேஸும், நெருப்பின் உதிரம் (கவிதைகள்) பற்றி சித்தாந்தனும், இப்படி ஒரு காலம் (கட்டுரைகள்) பற்றி அன்ரன் அன்பழகனும் உரையாற்றவுள்ளனர்.

# கொல்லபுளியங்குளத்தில் யானைகள் அட்டகாசம்

(வவுனியா)

வவுனியா வடக்கு கொல்லபுளியங்குளம் கிராமத்துக்குள் நேற்று முன்தினம் இரவு புகுந்த யானைகள் பெருமளவான பயன்தருமரங்களையும் பயிர்ச் செய்கைகளையும் அழித்துள்ளன.

ஊர்மனைக்குள் புகுந்த யானைகள் மிகநீண்ட நேரமாக நின்று தென்னை, பலா, மா போன்ற பயன்தரு மரங்களையும் பயிர்ச் செய்கைகளையும் அழித்துள்ளன. முன்பு இப்பகுதிகளில் யானைகளின் தொல்லை இன்றிக் காணப்பட்டதாகவும், மீள் குடியேற்றத்தின் பின்னர் கடந்த 4 ஆண்டுகளாக தொடர்ச்சியாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகின்றதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# வடமாகாண சபை உறுப்பினராக சிவநேசன் சத்தியப் பிரமாணம்



வட மாகாண்சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினராக நியமிக்கப்பட்ட புளொட் அமைப்பைச் சேர்ந்த கந்தையா சிவநேசன் (பவன்) நேற்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

காலை 10.35 மணியளவில் வட மாகாணசபை பேரவையில் பேரவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்நிகழ்வில் புளொட் தலைவரும், வட மாகாணசபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், வட மாகாணசபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் வீரவாகு கனகசுந்தரசுவாமியின் மரணத்தினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு புளொட் அமைப்பைச் சேர்ந்த கந்தையா -சிவநேசன் (பவன்) தேர்தல்கள் ஆணையாளரினால் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் அவரது சத்தியப் பிரமாண நிகழ்வு நேற்று நடைபெற்றது.

# வேலணை மத்திய கல்லூரியில் "சிறுவர் பேரவை 2015"

(யாழ்ப்பாணம்)

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் சிறுவர் கழகங்கள் இணைந்து வழங்கும் "சிறுவர் பேரவை 2015" வேலணை மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும் இந்நிகழ்வில் வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் கலந்துகொள்கின்றார்.

வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்வதுடன், கௌரவ விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், யாழ். சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் த.சுகிர்தராஜ் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

ஐ.பி.எல் - 2015

PEPSI IPL

இன்றைய ஆட்டங்கள்

ராஜஸ்தான் எதிர் ஹைதராபாத்

RAJASTHAN ROYALS VS SUNRISERS

இடம்:- மும்பை

நேரம்:- மாலை 4.00 மணி

கொல்கத்தா எதிர் டில்லி

Knight Riders VS DELHI DAREDEVILS

இடம்:- கொல்கத்தா

நேரம்:- இரவு 8.00 மணி

# சேமிப்பு ஊக்குவிப்பு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கோண்டாவில் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி கட்டுப்பாட்டு சபையால் நடாத்தப்படும் புதுவருட சேமிப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சி இன்று பி.ப. 3.00 மணிக்கு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி - மண்டபத்தில் வங்கி கட்டுப்பாட்டுச் சபை தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சித்திரை புதுவருட சேமிப்பில் சிறப்பாக செயற்பட்ட உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (26)

# டில்லியை வீழ்த்தியது மும்பை



ஐ.பி.எல். தொடரின் 39 ஆவது போட்டியில் நேற்று முன்தினம் மும்பை இண்டியன்ஸ், டில்லி டேர்டெவில்ஸ் அணிகள் மோதின.

மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற டில்லி அணியின் அணித் தலைவர் டுமினி துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

இதன்படி தொடக்க வீரராக களமிறங்கிய அகர்வால் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க வீரரான ஸ்ரேயாஸ் ஐயர் 19 ஓட்டங்களும், அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் டுமினி 28 ஓட்டங்களும், கருண் யாதவ் 16 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இந்த ஐ.பி.எல் தொடரில் விலைகொடுத்து வாங்கப்பட்டு தொடர்ந்து சொதப்பிய யுவராஜ் சிங் 7 பவுண்டரி, 2 சிக்சருடன் அரைசதம் கடந்து 57 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

20 ஓவர் முடிவில் டில்லி அணி 6 விக்கெட் இழப்பிற்கு 152 ஓட்டங்கள் எடுத்தது. பந்து வீச்சில் மும்பை சார்பில் மலிங்க, ஹர்பஜன்சிங் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதனையடுத்து 153 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மும்பை அணியின் தொடக்க வீரரான சிம்மன்ஸ் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க வீரரான பார்த்திவ் பட்டேல் 13 ஓட்டங்களிலும், அடுத்து களமிறங்கிய பண்டியா 5 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். மும்பை அணி 4 ஓவர் விளையாடியிருந்த நிலையில் மழை குறுக்கிட்டது.

அணித்தலைவர் ரோகித் சர்மா 46 ஓட்டங்களும், ஆட்டமிழக்காமல் அம்பதி ராயுடு 49 ஓட்டங்களும், பொல்லாட் 26 ஓட்டங்களும் எடுத்தனர்.

19.3 ஓவரில் மும்பை அணி 5 விக்கெட் இழப்பிற்கு 153 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பந்துவீச்சில் டில்லி சார்பில் கோல்டர்நைல் 2 விக்கெட் வீழ்த்தினார். ஆட்டநாயகனாக மும்பை அணியின் ஹர்பஜன் சிங் தெரிவானார்.

# விசுவமடு பொதுச் சந்தைக்கு அடிப்படை வசதிகள் அவசியம்

## புதுக்குடியிருப்பு பிரதேச சபையிடம் கோரிக்கை



விசுவமடு பொதுச்சந்தையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழுள்ள விசுவமடு பொதுச்சந்தை இன்றுவரை நிரந்தரக் கட்டடம் எவையுமின்றி கடந்த 4 வருடங்களுக்கு மேலாக தற்காலிக கொட்டகைகளில் இயங்கி வருகின்றது.

பொதுச்சந்தையில் உள்ள வியாபாரிகள், தாங்கள் அமைத்த தற்காலிக கொட்டகைகளிலேயே இன்றுவரையும் தமது பொருட்களை விற்பனை செய்கின்றனர்.

மழை காற்று என்பனவற்றால் கொட்டகைகள் சேதமடைந்து காணப்படுவதுடன், வியாபாரத்துக்காக கொண்டு வரப்படும் பொருட்களை சந்தையில் வைத்து பாதுகாக்க முடியாத நிலை காணப்படுகின்றது. சந்தையைச் சுற்றி வேலிகள் இல்லாமையில், இரவில் கால்நடைகளின் உறைவிடமாக சந்தை காணப்படுகின்றது.

சந்தையின் சீரின்மை காரணமாக சந்தைக்கு வருகை தரும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால், சந்தையை உரிய முறையில் அமைத்து அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி தருமாறு வியாபாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பிரதேச செயலரின் செயலுக்கு ஊடகவியலாளர் சங்கம் கண்டனம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர் ஒருவரை பிரதேச செயலக வளாகத்தில் மக்கள் முன்னிலையில் வைத்து தரக்குறைவாக பேசியதுடன் ஏனைய ஊடகவியலாளர்களையும் அவமானப்படுத்தும் வகையில் வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்திய வவுனியா பிரதேச செயலாளரின் செயலை வன்மையாக கண்டிப்பதாக வவுனியா மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கம் நேற்று தெரிவித்துள்ளது.

இவ் விடயம் தொடர்பாக ஊடகவியலாளர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா, பேயாடிகூழாங்குளத்தில் காணியொன்றை திருமறைக்கலாமன்றத்திற்கு பிரதேச செயலர் வழங்கியமை தொடர்பாக இக் கிராம மக்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது.

இவ் ஆர்ப்பாட்டத்தின் செய்தியை வவுனியா ஊடகவியலாளர்கள் சேகரித்து ஊடகங்களுக்கு வழங்கியிருந்தனர். இந் நிலையில் அச் செய்தியை வெளியிட்டமை மற்றும் ஆர்ப்பாட்டத்தில் குறிப்பிட்ட சிலரே பங்கேற்ற நிலையில் அதனை ஊடகவியலாளர்களே பெரிய விடயமாக்கியதாக தெரிவித்து, தனிப்பட்ட விடயமாக பிரதேச செயலகத்திற்கு சென்ற ஊடகவியலாளரை பிரதேச செயலாளர் தரக்குறைவாக பேசியுள்ளார்.

எனினும் இவ் ஆர்ப்பாட்டம் மக்களால் நடத்தப்பட்டதன் அடிப்படையிலும் மக்கள் பிரதிநிதிகளுக்கு தெரியப்படுத்தியதன் அடிப்படையிலும் அச் செய்தியை ஆர்ப்பாட்டத்தின் நோக்கத்தை உள்ளடக்கி வெளியிடப்பட்டிருந்தது. இச் செய்தியின் மூலமாக ஊடகவியலாளர்கள் எவருக்கும் பக்கச் சார்பாகவோ ஆர்ப்பாட்டத்தின் நோக்கத்தை மாற்றியோ அல்லது எவரையும் வஞ்சிக்கும் நோக்குடனோ செய்தியை வெளியிடவில்லை. ஆர்ப்பாட்டம் தொடர்பான் செய்தியையே முழுமையாக வெளியிட்டிருந்தனர்.

எனினும் ஊடகவியலாளர்களின் பணியை அவதூறாகவும் ஊடகவியலாளர்களை தரக்குறைவாகவும் மக்கள் எண்ணும் வகையில் பலர் முன்னிலையில் தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்தி பொறுப்பு வாய்ந்த அதிகாரியான பிரதேச செயலர் பேசியமையை வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விஞ்ஞான...

பயன்படுத்தியுள்ளதாக ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்த சம்பவத்தினை எதிர்த்து, பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் செய்யக் கூடாத ஒரு செயலை செய்துள்ளது.

அந்தச் செயலை வெளிப்படுத்தி யாழ். பல்கலைக்கழக பேரவையின் உறுப்பினர்களுக்கு மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது இவ்வாறு பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் மோசடியினை சரியான விதத்தில் விசாரணை மேற்கொண்டு உண்மையினை வெளிப்படுத்துமாறும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் பல்கலைக்கழக பேரவையினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் 250 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அதேவேளை, விஞ்ஞான ஆசிரியர் சங்கம் 40 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. பல்கலைக்கழககத்தின் குரல் பெரும்பான்மை ஆசிரியர்களின் குரலாக இருக்குமே தவிர, சிறிய சங்கத்தின் குரல் இல்லை என்றும் தெரிவித்தனர்.

கடந்த அரசியலில் பல மோசடிகள், ஊழல்கள் நடந்திருந்தாலும், தற்போது புதிய அரசில் புதிய பேரவை உறுப்பினர்கள் மாற்றப்பட்டுள்ளார்கள். இலங்கையில் உள்ள பல பல்கலைக்கழகங்களை பார்க்கும் போது, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பெரியளவிலான மோசடிகள் இடம்பெறவில்லை.

தகுதி வாய்ந்த அதிகாரிகளை நியமிக்குமாறு கோரும் அளவிற்கு பெரியஅளவிலான மோசடிகள் இடம்பெறவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்கள். பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் மோசடியான வேலையினை செய்துள்ளதை வன்மையாக கண்டிப்பதாகவும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் மேலும் தெரிவித்தனர். (25)

### நற்பெயருக்கு...

மூன்று பஸ் நிலையங்களை நிர்மாணித்ததாகவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

மூன்று பஸ் நிலையங்களை நிர்மாணித்ததில் பாரிய நிதி மோசடி நடந்துள்ளதாக கூறி ஜே.வி.பி. இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்துள்ளது.

எனினும் அப்படியான எவ்வித பணமும் தனது வங்கி கணக்கிற்கு வரவில்லை எனவும் எந்த மோசடிக்கும் தான் துணை போகவில்லை எனவும் கோத்தாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியமை தொடர்பில் ஜே.வி.பி.க்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

### ரயில்...

படுகாயமடைந்த இளைஞன் கிளிநொச்சி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு வவுனியாவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

### ஜோன்ஸ்டன்...

இந்த நிலையில், நேற்றுக் காலை குருநாகல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட ஜோன்ஸ்டன் பெர்னான்டோவை, வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

### நல்லிணக்க..

இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில்,

இலங்கையின் புதிய அரசாங்கத்துக்கும் அவுஸ்ரேலிய அரசாங்கத்துக்கும் இடையில் நல்லுறவு இருக்கின்றது. இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு அவுஸ்ரேலியா தொடர்ந்து உதவும், இவை தொடர்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது எடுத்துரைத்தேன்.

அவுஸ்ரேலியாவுக்கு அகதிகளாக வருவதை அவுஸ்ரேலிய அரசாங்கம் ஒருபோதும் ஏறகாது. அவ்வாறு வந்து, நவுறு தீவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் ஒரு குழுவினர் கம்போடியாவுக்கு செல்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அந்த நாட்டுடன் இருக்கின்ற புரிந்துணர்வின் பிரகாரமே இவர்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஏனைய நாடுகளின் அரசாங்கங்களுடன் மட்டுமன்றி இலங்கை அரசாங்கத்துடனும் எமக்கு பல் துறைகளிலும் நல்லுறவு இருக்கின்றது என்று சுட்டிக்காட்டிய அவர், நவ்று மற்றும் பப்புவா நிவ்கினியா தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளுக்கு தேவையான கல்வி, வைத்திய சாலை, சுகாதாரம் உள்ளிட்ட சேவைகளையும் நாம் செய்து கொடுத்துள்ளோம்.

அதற்கு மேலதிகமாக அவர்களுக்கு தொழில் வாய்ப்புகளுக்கான பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில், அவுஸ்திரேலியாவுக்குள் அகதிகளாக நுழைவதை தடுப்பதற்காக புலனாய்வு பிரிவினர் மற்றும் பொலிஸார் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

### மத்திய...

மத்திய வங்கி தனது ஆறாவது அலுவலகத்தை கிளிநொச்சி அறிவியல் நகர் பிரதேசத்தில் திறந்துள்ளது. கிளிநொச்சி, வவுனியா, மன்னார் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி தனது செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ள இவ்அலுவலகம் கால்நடை, விவசாயம், கடற்றொழில், நுண் தொழில் துறை முயற்சியாளர்களுக்கு உதவிகளை வழங்குதல், பிரதேசத்தின் பொருளாதார மேம்பாட்டை மையமாக கொண்டு செயற்பாடுகளை முன்னெடுத்தல்

இந்த அலுவலகத்தில் ஊழியர் சேமலாப நிதியம் பிரிவு, புள்ளிவிபரப் பிரிவு, வங்கிசார் நிதி நிறுவனப் பிரிவு, கடன் வழங்கும் பிரிவு என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள பிரதேச அலுவலகத்தில் பிரதேச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கான கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகள் வழங்குதல் போன்ற செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியும்.

இந்த அலுவலகம் திறப்பு விழாவில் பிரதி அமைச்சர்களான முனைவர் ஹரிஸ் டி சில்வா, விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளர் முருகேசு சந்திரகுமார், வட மாகாண ஆளுநர் பளிககார, மத்திய வங்கியின் உதவி ஆளுநர் ஆனந்த சில்[illegible] கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் மற்றும் வங்கிகள், நிதி நிறுவனங்களின் முகாமையாளர்கள், பிரதேச செயலர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (29)

### மைத்திரி...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினருக்கிடையே நேற்று பிற்பகல் 1.50 மணியளவில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

12.30 மணியளவில் ஜனாதிபதி மைத்திரிபால நாடாளுமன்றத்திற்கு வருகை தந்தார். 1.45 மணியளவிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வந்தடைந்தார். தொடர்ந்து இருதரப்பினருக்கும் இடையே வட்டமேசை சந்திப்பு நடைபெற்றது. இதன்போது பல முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டன

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சந்திப்பில் மகிந்தவுடன் எதிர்க்கட்சி தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அநுர பிரியதர்ஷன யாப்பா, மகிந்தானந்த அலுத்கமகே, டளஸ் அழகப்பெரும, குமார வெல்கம, பந்துல குணவர்த்தன, பைசர் முஸ்தபா குழுவினர் கலந்துகொண்டனர். ஜனாதிபதி மைத்திரியுடன் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன, துமிந்த திஸாநாயக்க, பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ஷ இடையே இடம்பெற்ற சந்திப்பு வெற்றியளித்ததாக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் எதிர்கால திட்டங்கள் குறித்து இதன்போது பேசப்பட்டதாக அவர் கூறினார். இவ்வாறான சந்திப்பொன்று எதிர்வரும் நாட்களிலும் நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் அடுத்துவரவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என விடுத்த வேண்டுகோளுக்கு ஜனாதிபதி மைத்ரிபால தரப்பிடமிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை என, மகிந்த ராஜபக்ஷவுடன் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட முன்னாள் அமைச்சர் குமார வெல்கம செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அனைவரும் எதிர்பார்த்திருந்த பிரதமர் வேட்பாளர் தொடர்பில் திருப்திகரமான பதில் எதுவும் இந்தக் கூட்டதில் கிடைக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் இவர்கள் இருவரும் மீண்டும் சந்தித்து பேச இணங்கையுள்ளனர் எனவும் குமார வெல்கம கூறுகிறார்.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இடையேயான சந்திப்பில் ஐந்து முக்கிய விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொது செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலின் பிரதமர் வேட்பாளர், உள்ளூராட்சி மன்றம் கலைக்கப்படுதல், பொது தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிடுதல், வேட்பாளருக்கான வேட்புமனு கையளித்தல், பொலிஸ் நிதி மோசடி பிரிவு அரசியல் மயப்படுத்தப்படுகின்றமை தொடர்பிலே அவதானம் செலுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 7ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.